இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 254
ஆடி 22 ஆம் நாள்
திங்கட்கிழமை
07 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048




## கால்பந்தில் சென். ஹென்றிஸ் தேசியச் சம்பியன்

16 வயதுப் பாடசாலை மாணவர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் கிண்ணம் வென்று சாதித்தது இளவாலை சென். ஹென்றிஸ். இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய இந்தப் போட்டியின் இறுதியாட்டம் திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவில் நேற்று மாலை நடைபெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து சாகிராவை வீழ்த்தி கிண்ணம் வென்றது சென். ஹென்றிஸ்.

(முழுமையான செய்தி; பக்கம் 26)

## முதல்வர் கூறியது புலிகளை அல்லவாம்

யாழ்ப்பாணம், ஓக. 7

"ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் குற்றம் இழைப்பது சம்பந்தமாக நான் கூறியது விடுதலைப் புலிகளைக் குறிப்பிட்டு அல்ல. இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கிய குழுக்களையே நான் சொன்னேன்"

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று விளக்கமளித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கணிதப் போட்டிப் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா வல்வை முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார் முதலமைச்சர்.

>> 25

## இயக்கச்சியில் வாள்வெட்டு

4 பேர் படுகாயம்

கிளிநொச்சி, ஓக. 7

கிளிநொச்சி இயக்கச்சியில் நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட வாள்வெட்டில் 4 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் கால் செயற்றிறன் அற்றுப்போகும் நிலை வரலாம் என்று மருத்துவ சோதனையில் கண்டறியப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்

பருத்தித்துறையிலிருந்து சென்ற 3 பேரும்

>> 25

# வடக்கு மாகாண அமைச்சு பதவிகளை தூக்கி எறிந்தது தமிழ் அரசுக் கட்சி

### முதலமைச்சரின் பழிவாங்கும் செயலை அடுத்து சீற்றம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 7

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் அரசுக் கட்சியைப் பழிவாங்கும் வகையில் செயற்படுகிறார் என்பதனால் புதிய அமைச்சர்கள் நியமனம் செய்யப்படும்போது அதில் எந்தப் பதவியையும் பெறுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறது தமிழ் அரசுக் கட்சி.

அந்தக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று யாழ். நகரில்கூடி இந்த முடிவை எடுத்தனர். சுமார் ஒன்றரை மணி நேர விவாதத்துக்குப் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டது. தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் கட்சியைச் சேர்ந்த அமைச்சரான ப.சத்தியலிங்கம் பதவியிலிருந்து விலகுவது என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களை நியமிப்பதற்கான முதலமைச்சரின் முழு உரிமையையும் அங்கீகரிப்பது என்று கூட்டமைப்பின் தலைவர்கள் இணங்கிக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட 24 மணி நேரத்துக்குள் தமிழ் அரசுக் கட்சியின் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து உதயன் பத்திரிகையிடம் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவர், இந்தப் பிரச்சினை இப்போதைக்கு ஓயாது என்று ஆருடம் கூறியிருந்தார்.

>> 25

## கலிகையில் நேற்று 12 பேர் கைது

துன்னாலையில் தொடரும் பதற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 7

சிறப்பு அதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து துன்னாலை கலிகைப் பகுதியில் நேற்று சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். 6 மணி நேரம் நீடித்த தேடுதல் வேட்டையில், 12 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

அனைவரும் சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்புடன் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தொடர் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் காரணமாக அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. துன்னாலையில் நேற்றுமுன்தினமும் சுற்றிவளைப்பு இடம்பெற்றது. அதில்

>> 25

## முட்டிக்கொண்ட மாவை – சுரேஸ்

யாழ்ப்பாணம், ஓக. 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவும், ஈ.பி.ஆர்.எல். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இடையேயான சந்திப்பு முதலமைச்சரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீது, ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தொடர்ச்சியாக விமர்ச

>> 25

## பதவி விலகுவார் சத்தியலிங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 7

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை நெருக்கடியால் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பதவி விலகுவார் என்று தெரியவருகின்றது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையக் குழு, கட்சியின் மாகாண உறுப்பினர்கள் குழுவின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதும் இந்தப் பதவி விலகல் அநேகமாக இடம்பெறும் என்று தெரிகின்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடையேயான கலந்துரையாடல் நேற்று

>> 25

see more news in newuthayan.com

## உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் நல்லிணக்கம் சாத்தியப்படவேமாட்டாது

பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவிடம் யாழ். அரச அதிபர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7

காணாமற்போனோர் விவகாரம், மீள்குடியேற்றம், அரசியல் கைதிகள் விடுவிப்பு இல்லாது நல்லிணக்கத்துக்கான கதவு இங்கு திறவாது.

இவ்வாறு எடுத்துரைத்தார் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரச அலுவலர்களுக்கும் இடையிலான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.



தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில், பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேர் நேற்று

>> 25

முச்சந்தி



பொல்லைக் கொடுத்து அடிவாங்கின கதையாப் போச்சு...

## இங்கு வார்த்தைகளில் மட்டும்தான் நல்லிணக்கம்; செயலில் ஏதுமில்லை

இப்படிப் போட்டுத் தாக்கினர் அரச அதிகாரிகள்
கேட்டுமிரண்டனர் பிரிட்டன் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 7

நல்லிணக்கம் வார்த்தைகளில் மட்டுமே உள்ளது. செயலில் எதுவும் இல்லை. நல்லிணக்கம் இதயத்திலிருந்து வரவேண்டும். இப்போதும் தமிழர்களின் உரிமைக் கோரிக்கைகளைப் பயங்கரவாதம் என்ற பெயரால் நசுக்கவே பார்க்கின்றனர். நாம் சிங்களவர்களுக்கோ பௌத்தர்களுக்கோ எதிரானவர்கள் அல்லர். ஆனால் சிங்கள மக்களே இல்லாத இடங்களில் விகாரைகள் அமைக்கப்படுவதையும், [illegible]

>> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் ஏற்பாட்டில் கல்விக் கருத்தரங்கு

வடமராட்சி, ஓக. 7

உதயன் குழுமத்தின் ஏற்பாட்டில் இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களில் நேற்று நடத்தப்பட்டது. வடமராட்சியில் ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் வடமராட்சி வலயத்துக்குட்பட்ட 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். தென்மராட்சியில், சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட சுமார் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இரு இடங்களிலும் பிரபல ஆசிரியர்களான பி.அம்பிகைபாகன், என்.எஸ்.திலீப், பி.பார்த்தீபன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை நிகழ்த்தினர்.

நிகழ்வில் உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.நடராஜசுந்தரம், ஹாட்லிக்கல்லூரி அதிபர் எஸ்.முகுந்தன் தென்மராட்சி வலய ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் மனோரஞ்சிதன், சாவகச்சேரி வர்த்தகசங்கத் தலைவர் லயன்( ) பிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (ஜ-10,26)











## தமிழரசுக் கட்சியின் மீதான வழக்கு தீர்ப்பு அனைவருக்குமான செய்தி

### மாவை. சேனாதிராசா எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.7

தமிழரசுக் கட்சிக்கு எதிராக உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு அனைவருக்கும் விளக்கத்தைக் கொடுத்திருக்கும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா தெரிவித்தார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது பன்னாட்டு மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவின் பவள விழா நிகழ்வும் நேற்று யாழ்ப்பாணம் ரில்கோ உணவு விடுதியில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு அவர் தெரிவித்தா.

அவர் தெரிவித்ததாவது;

சில பத்திரிகைகள் சமஷ்டி என்ற சொல்லை வைத்து வாதாடிக் கொண்டிருக்கின்றன. நாம் நாட்டைப் பிரிக்கப் போகின்றோம் என்று கூறி எமது இனத்துக்கு எதுவும் கிடைத்து விடக்கூடாது எனக் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றன.

எமது மாகாண சபைத் தேர்தல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று கூறி வழக்குத் தொடுத்திருந்தனர். அந்த வழக்கில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். சமஷ்டி என்பது கூட்டுச் சேர்ந்த ஆட்சியே தவிர அது நாட்டைப் பிரித்து விடாது அதிகாரங்களை மட்டுமே பகிர்ந்து கொள்ளும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு அனைவருக்கும் கொடுக்கப்பட்ட தகவலாகும்.

தமிழர் என்ற முறையில் என்னை அழைத்து கௌரவிப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான் இவ்வாறான நிகழ்வை விரும்பியிருக்கவில்லை. எமது நாட்டில் எத்தனையோ பேர் கண்ணீருடன் உள்ளனர். நான் சிறையில் இருந்தபோதும், வெளியே வந்தபோதும் எனக்குப் பலர் ஆறுதலளித்தனர். தந்தை செல்வா காலத்திலும் சரி, பின்னரும் சரி அவரின் கொள்கையுடனே வாழ்கின்றோம்.




பல உயிர்களை இழந்திருக்கிறோம். நிலங்களை இழந்திருக்கின்றோம். 2003ஆம் ஆண்டு அரசதலைவருக்கும், இராணுவத் தளபதிக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்தோம். 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நிலங்களுக்காக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறு நடக்கவில்லை. இவ்வாறான நிலமையில் நான் இப்படியான நிகழ்வுகளை தவிர்த்து வருகின்றேன். - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கல்வி இராஜாங்க அமைச்சர் பொ.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பேராசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-8)

## தமிழர்கள் ஒற்றுமை பலம் பெறவேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

எமது இனத்தின் ஒற்றுமை இன்னும் பலமடைய வேண்டும். தமிழர்கள் ஆகிய எமது கலாசாரம்,பண்பாடுகள் மற்றும் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

இவ்வாறு இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

உலக தமிழ் இயக்கப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது பன்னாட்டு மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் ரில்கோ உணவு விடுதியில் நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நாம் உலகத்தின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் தமிழர்கள் என்ற வகையில் ஒரு குடும்பமாக அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். நாங்கள் பாரம்பரியமானவர்கள். அதைக் காக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது.



இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வாழ்ந்தவர்கள் வாழ்ந்து கொண்டும் இருக்கின்றனர். எமது மக்களில் அரைவாசி வீதமான மக்கள் இங்கு இல்லை. ஏறத்தாழ இலங்கைத் தமிழர்கள் பல புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

கலவரங்கள் காரணமாகவும் உள்நாட்டுப் போர் காரணமாகவும் சொந்த மண்ணில் வாழ முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு கூட்டாட்சி நடைபெறுகின்றது. நாமும் புதிய பாதையில் பயணிக்க முயற்சிகளை எடுத்து வருகின்றோம். புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி ஒரு சமத்துவத்தை ஏற்படுத்த உத்தேசித்து வருகின்றோம். அது நிறைவேற வேண்டும். புதிய அரசமைப்பில் அனைவரதும் பங்கு இருக்கின்றது. தமிழர்கள் என்ற வகையில் நாம் சுய மரியாதையுடன் சமத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் அது அமைய வேண்டும்.

நாம் அநீதியாக எதனையும் கேட்க முற்படக் கூடாது. நாங்கள் நீதியாகப் பெறக்கூடிய அனைத்தையும் பெறவேண்டும். அதற்கு அனைவரும் முன்வரவேண்டும். போரால் மக்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். போரால் எத்தனையோ பெண்கள் கணவனை இழந்து விதவைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். சகோதர, தாய், தந்தையரை இழந்துள்ளனர். தங்களின் வாழ்க்கையைக் கொண்டு நடத்த மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களுக்கு உதவ வேண்டியது எமது அனைவரதும் கடமையாகும். அந்தப் பணிகளில் நாம் ஈடுபடவேண்டும். அவ்வாறன உதவிகளைச் செய்ய வேண்டும். இந்த மாநாடுகள் இன்னும் உயர்ந்து தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். தமிழர்களாகிய எமது இனத்தின் ஒற்றுமை மேலும் பலமடைய வேண்டும் - என்றார். (ற-8)

## 13ஆவது பன்னாட்டு மாநாடு: 2ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று

யாழ்ப்பாணம், ஓக 7

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது பன்னாட்டு மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ரில்கோ உணவு விடுதியில் நேற்று நடைபெற்றன. நிகழ்வை கல்வி இராஜாங்க அமைச்சர் பொ.இராதாகிருஷ்ணன் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்களுடன் மேலும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது;

பல்கலாசாரங்களின் பின்னர் இவ்வாறான தமிழர் எழுச்சி மாநாடு இடம் பெற்று இருப்பது மிகவும் மகிழ்வைத் தருகின்றது. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் யாழ்ப்பாணத்தில் இந்த முறை நடத்தியமைக்கு இந்தத் தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மொழி ஒழியக் கூடாது என நாம் போராடி வருகின்றோம். உலகில் உள்ள மூத்த மொழிகளில் ஒன்றாக எமது மொழி உள்ளது. மொழி இன்னும் வளர வேண்டும்.

காலத்தின் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மத்தியிலும் நாம் எமது மொழியைப் பாதுகாக்க வேண்டும் - என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்த மண்ணில் தமிழ் நிலை பேறாக வேரூன்றி ஆக வேண்டிய காரியங்கள் பல உள்ளன என எண்ணுகின்றேன். திறமை படைத்த நம் நாட்டுக் கலைஞர்களுக்கு இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வாய்ப்பளித்து ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் போற்றப்பட வேண்டும். அதுவே இந்த மண்ணில் தமிழ் மேலும் மேலும் வேரூன்ற வழி சமைப்பதாக அமையும்.

புலம் பெயர் தமிழ் நல்லுள்ளங்கள் அதற்கேற்ற வழி சமைக்க வேண்டும். உற்ற துணையாக விளங்க வேண்டும். பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் எமது மக்கள் தமிழ் கலைகளிலும், பாரம்பரிய நிகழ்ச்சிகளை நடத்துவதிலும் காட்டும் அக்கறை குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. அவர்களுக்கு அத்தகைய செயற்பாடுகளை செவ்வனே ஆற்றத்தக்கவாறு, பிரதேசம் தோறும் ஏற்ற மண்டபங்கள், பயிற்சி வசதிகள், ஆய்வுக்கும் ஆற்றுகைக்குமான வாய்ப்புக்கள் வசதிகள் செய்யப்படுதல் அவசியம் - என்றார். (ற-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமை அமைச்சருக்கு ஹற்றனில் சிறப்பு வரவேற்பு



ஹற்றன். ஓக. 7
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் ஹற்றனில் நேற்று சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. தலைமை அமைச்சரின் 40 ஆண்டு கால அரசியல் அனுபவத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. நீக்ரோதாமய விகாரையில் சிறப்புப் பூசை வழிபாடுகளிலும், ஜும்மா பள்ளிவாசலில் தொழுகையிலும் ஈடுபட்டார். ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.
அங்கு அவருக்கு பொன்னாடை போர்த்திக் கிரீடம் சூட்டி ஆலயப் பரிபாலசபையினர் கௌரவித்தனர். பின்னர் ஹற்றன் டிப்போவில் மட்டக்களப்புக்கான புதிய பேருந்துச் சேவையை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில், அமைச்சர் நவீன் திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே.பியதாச, வடிவேலு சுரேஸ், ஹட்டன் நகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பாமிஸ், மௌலவி சாஜககான், உட்பட பலர் கலந்து ரொண்டனர். (ஐ)

# திருடருக்கு கூட்டரசில் இடமில்லை

## ஹற்றனில் தெரிவித்தார் ரணில்

ஹற்றன்,ஓக.7
கூட்டரசின் ஆட்சியில் திருடர்கள் எவருக்கும் இடமில்லை. அவ்வாறு திருட்டு வேலைகளில் ஈடுபடும் எவராக இருந்தாலும் உரிய நடவடிக்கைகள் உடனுக்குடன் முன்னெடுக்கப்படும்.
இவ்வாறு ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.
தலைமை அமைச்சரின் 40 ஆண்டு கால அரசியல் அனுபவத்தை முன்னிட்டு ஹற்றனில் நேற்று சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
கடந்த ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகளை ஊடகங்கள் மூடி மறைத்தன. ஆனால் இந்த அரசின் ஆட்சியில் பெற்றுகொடுக்கப்பட்ட ஊடக சுதந்திரத்தின் பின்னர் அந்த நிலமை மாறியுள்ளது. இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விவகாரம் தொடர்பில் நீதிபதிகள் அடங்கிய சுயாதீன குழு ஒன்றை அமைத்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உமா ஓயா திட்டம் தொடர்பில் விசாரணைக் குழு ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். இதற்கு கூட்டு எதிரணியின் ஒத்துழைப்பை எதிர்ப்பார்த்திருக்கின்றோம். கடந்த காலத்தில் நீதித்துறையினர் சுயாதீனமாக செயற்பட்டிருந்தால் அவர்களுக்கும் வெள்ளை வான் மிரட்டல் ஏற்பட்டிருக்கும். அம்பாந்தோட்டை துறைமுகத்தால் 46 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா வானூர்தி சேவையில் கடந்த ஆட்சியில் இறக்குமதி செய்யப்பட்ட பிக் 360 விமானங்கள் 8 கொள்வனவு செய்யப்பட்டன. அதில் 135 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.
கினிகத்தனைப் பிரதேசத்தில் சிங்கள மக்களுக்கான குடியிருப்பு பிரச்சினையையும், தமிழ் உயர்தர பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பது தொடர்பிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. தொழில் பேட்டைகள் அமைத்து இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம். என்றார். (ஐ)

# இராணுவ வசமுள்ள காணிகள் உடன் விடுவிக்கப்படவேண்டும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக.7
மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தின் வசமுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அங்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண உறுப்பினர் ஞானமுத்து கிருஷ்ண பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.
பாலையடிவட்டைப் பகுதியின் நெல்லிக்காடு முன்பள்ளி சிறார்களின் உடல் திறன் விளையாட்டுவிழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்குக் கிழக்கில் படையினர் வசமுள்ள காணிகள் கூட்டரசினால் ஆங்காங்கே விடுவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பாலையடிவட்டைப் பொதுச்சந்தைக்குரிய காணிகளை இதுவரையில் இராணுவத்தினர் விடுவிக்கவில்லை. இந்தப் பிரதேசத்தின் மண்டூரில் மக்கள் குடியிருப்புக்களில் சுமார் 30 வருடகாலமாக பொலிஸார் நிலை கொண்டிருந்தனர். அண்மையில் அதனை விடுவித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலைத்தை விட தற்போது ஓரளவு அபிவிருத்திகளையும் மேற்கொண்டு வருகின்றது. - என்றார். (10)

# மகிந்தவைத் தோற்கடிக்கவே ஐ.தே.கவில் இணைந்தேன்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 7
மகிந்தவின் மக்கள் விரோத அரசியலை முறியடித்து, தமிழ் மக்களுக்குச் சேவையாற்றும் நோக்குடனே ஐ.தே.கவில் நான் இணையவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. பெரும்பான்மையின மக்களுக்குக் கிடைக்கும் சகல உரிமைகளையும் சிறுபான்மையினருக்கும் பெற்றுக் கொடுக்கும் வகையில் என அரசியல் முன்னெடுப்புக்கள் அமையும். இவ்வாறு பீல்ட் மார்ஷல் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார். மட்டக்களப்புக் கல்லடியில் ஐக்கிய தேசியக் கட்சிக் காரியாலயத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் அமைச்சர் சரத் பொன்சேகாவுக்கு நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்தக் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
"வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெருமளவு மக்கள் போரால் பாதிக்கப்பட்டுள்ளனர். நான் அரசியலுக்குள் நுழைந்ததன் காரணம் இந்த மக்களுக்குச் சேவை செய்யவே. மக்களுக்குச் சேவை செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. மகிந்தவின் காலத்தில் போருக்குப் பின்னர் சாதாரண மக்களுக்கு எதிரான அரசியலே நடந்து கொண்டிருந்தது. அந்த அரசியலை முறியடித்து மக்களுக்கு ஜனநாயகத்துடனான அரசியலை நாடு பூராகவும் எடுத்துச் செல்ல வேண்டும். பெரிய கட்சிகளுடன் போட்டி போட்டு புதிய அரசியல் கட்சிகள் வெல்வது அவ்வளவு சுலபமானதல்ல. அதனால், மகிந்தவின் மக்கள் விரோத அரசியலை முறியடிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்க்க வேண்டி வந்தது. பெரும்பான்மையினருக்கான சகல உரிமைகளும் வசதி வாய்ப்புக்களும் நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க வேண்டும். இதற்குப் பின்னர் இந்த நாட்டில் இன மத பேதம் உருவாக வாய்ப்பளிக்க முடியாது. மகிந்த மீண்டும் நாட்டின் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களிடம் குரோதங் களை விதைத்து, அதன் மூலம் ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி மேற்கொள்கின்றார். புதிய அரசமைப்பில் சிறப்பான ஏற்பாடுகள் மூலமாக இந்த நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. ஒரே நாடு ஒரே இலங்கையர் நாம் என்ற அடிப்படையில் சகலரும் சகலதும் பெற்று வாழ ஏற்பாடுகள் இடம் பெறுகின்றன" என்றார். இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)

17ஆம் ஆண்டு நினைவலைகள்

மஞ்சமதில் மால்மருகன்
வீதிஉலா வருகையிலே - நின்
நெஞ்சமதில் வலி கொண்டு
வீழ்ந்தனையோ - உமை
தஞ்சமெனக் கொண்டவர்கள்
கதிகலங்கி நின்றிட
பத்தொடு ஏழு ஆண்டுகள் எமை
பரிதவிக்க விட்டு விண்ணகம் ஏகினீரோ...!



அமரர்
திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.)
தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. -குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க் கந்தன் திருமஞ்சத்தில் காட்சி



நல்லூர் கந்தசுவாமி ஆலய பத்தாம் திருவிழாவான நேற்று வள்ளி தெய்வானை சமேதரராக முத்துக்குமார சுவாமி திருமஞ்சத்தில் காட்சியளித்தார். (வ-37)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 7
கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் 2 கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. நபர் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் கணேசபுரத்தில் நிற்கிறார் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.
அங்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரைச் சோதனையிட்டனர். அவர் தனது உடைமையில் 2 கிராம் கஞ்சா வைத்திருந்ததை அறிந்தனர். சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.
மேலதிக விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்பு பிரிவு தெரிவித்தது.
(ஜ-10,6)

## சாலை விபத்து முதியவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 7
சாலை வளைவில் முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் காலில் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
இந்த விபத்து மட்டுவிலில் நேற்றுமாலை இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த செல்லப்பா அருமைநாயகம் (வயது -70) என்பவரே காலில் படுகாயமடைந்தார். அவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனாவுக்கு மாற்றப்பட்டார். துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (4,9)

# கூட்டரசின் வாக்குறுதிகள் பொய்யானவை

## கேப்பாபிலவு மக்கள் ஆதங்கம்



முல்லைத்தீவு, ஓக. 7
"எமது வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தகூட்டரசு, தேர்தல்காலத்தில்கூறிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானவை. மக்களை ஏமாற்றுவதற்காக மீண்டும்மீண்டும்பொய்களைக்கூறிக் கொண்டேசுகபோகஅரசியலைநடத்துகிறது. மக்களின்தேவைகள்தொடர்பாக அரசுக்கு கவலையில்லை" இவ்வாறு கேப்பாபிலவுமக்கள்தெரிவித்தனர். 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர்காணிகளைவிடுவிக்குமாறுவலியுறுத்தி கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். கேப்பாபிலவுஇராணுவதலைமையகத்துக்கு முன்பாகக் கூடாரம் அமைத்து போராட்டத்தைமுன்னெடுத்து வருகின்றனர். அவர்களது போராட்டம் நேற்றுடன் 161நாள்களைக் கடந்துள்ளது.
"நாங்கள் போராட்டம் ஆரம்பித்து 5 மாதங்கள் முடிந்து விட்டன. இன்று வரை தீர்வு பெற்றுத் தரப்படவில்லை. எமக்காகப் புலம்பெயர் தமிழர்கள் உட்பட பன்னாடுகளும் குரல் கொடுக்க வேண்டும். ஒருவருக்கும் இடையூறு இல்லாமல் நேர்மையான வழியில் எமதுபோராட்டத்தைநடத்திக்கொண்டிருக்கின்றோம். எமது பூர்வீக நிலத்தினைக் கேட்டுத்தான் போராடுகின்றோம். வேறு எதனையும் கேட்கவில்லை.
எவருமேஇதனைக்கண்டுகொள்கிறார்கள் இல்லை. கொழும்புக்கு கூப்பிட்டார்கள், இராணுவம் 6 மாதம் காலம் பொறுங்கோ உங்கட காணி தரலாம் என்றார்கள். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. எமது போராட்டம் மட்டும் தொடர்கின்றது. அரசியல் வாதிகள் எல்லோரும் வந்து எம்மைச் சந்தித்து சென்று வாக்குறுதிகளைத் தருகிறார்களேதவிர, தீர்வைப்பெற்றுத் தருகிறார்கள் இல்லை.
நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றோம். பலமுறைபலகாரணங்களைக் கூறிஎம்மைஇந்தவீதியில்தொடர்ந்தும் இருக்கவைக்கவே எல்லோரும்விரும்புகின்றார்கள். சிறுவர்கள், முதியவர்கள் என நாம் படும் அவலம் யாரும் அறிய முடியாது.
மாதக்கணக்கில் வீதியில் இருப்பதால் எமது பிள்ளைகளும் கல்வியில் பின்னடைவை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. புலம்பெயர் உறவுகள், அனைத்துத்தமிழ்மக்கள் எல்லோரும். எமது போராட்டத்துக்குக் குரல் கொடுங்கள்.
எமக்குநிரந்தரத்தீர்வுகிடைப்பதற்குஒத்துழைப்புக்கள் வழங்குங்கள் என்று போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.
(ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை:

## புலிகளைக் கூறாததால்தான் கட்சியிலிருந்து நீக்கினார்கள்

*மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஓக. 7
காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையை விடுதலைப் புலிகள்தான் நிகழ்த்தினார்கள் என்பதைச் சொல்லாமல் விட்டதன் காரணமாக, நல்லாட்சிக்கானதேசிய முன்னணியிலிருந்து வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமன உறுப்பினர் ஐ. அஸ்மின் நீக்கப்பட்டுள்ளார்.
வடக்குமாகாணசபைஉறுப்பினர்ஐ. அஸ்மின்கடந்த 3ஆம்திகதிதனது முகநூல் பதிவில், காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை தொடர்பில் பதிவிடும்போது, ஆயுததாரிகளால்தான்படுகொலைநிகழ்த்தப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆயுததாரிகள் யார் என்பதை அவர் வெளிப்படுத்தாமல் பதிவிட்டதற்கு எதிராக முஸ்லிம் சமூகத்திடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. இதனையடுத்து அவர் தனதுபதிவைநீக்கியிருந்தார். இவ்வாறானதொருநிலையில்அவர் அங்கம்வகிக்கும்நல்லாட்சிக்கான தேசிய முன்னணியிலிருந்து நீக்கப்படுவதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.
இந்தப் பதவி நீக்கம் தொடர்பில் அஸ்மின் அனுப்பியுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
காத்தான்குடிபள்ளி வாசல் படுகொலைகள், குறித்து நான் முன்வைத்த கருத்துக்களும் கடந்த மே மாதத்திலே வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பில் முன்வைத்த கருத்துக்களும், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களிடம் கண்டனங்களைப் பெறக்கூடிய கருத்துக்களேயாகும்.
உணர்வு ரீதியாக மாத்திரமே சிந்திக்கின்றபோது கொதிப்பை ஏற்படுத்திவிடும்என்பதற்காகஅறிவுசார்ந்தரீதியில்நோக்குகின்றபோதுஅர்த்தம் தரக்கூடிய கருத்துக்களை முன்வைக்காமல் இருக்க முடியாது. நான் முன்வைத்த இரண்டு கருத்துக்களையும் அறிவு சார்ந்து நோக்கினால் அதிலே பொதிந்திருக்கின்ற அர்த்தங்களும், அதன்மூலம் மக்களுக்குக் கிடைக்ககூடிய நன்மைகள் என்ன என்பதையும் கண்டுகொள்ள முடியும்.
கிழக்கு முஸ்லிம் மக்களின் உணர்வுகளை என்னுடைய கருத்துக்கள் பாதித்திருந்தால் அதற்காக நான் மனம்வருந்துகின்றேன். மேற்படிக் கருத்துக்களைஉடனடிக்காரணிகளாகவைத்துக்கொண்டுஎன்னைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு அல்லது என்மீது சேறுபூசுவதற்கு மேற்கொண்டமுயற்சிகள்; மாற்றுக்கருத்துக்களுக்குநல்லாட்சிக்கானதேசிய முன்னணி கொடுக்கும் சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.
மாற்றுக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்று நீங்கள் உரக்கப் பேசுவது இன்னொரு சர்வாதிகாரத்தை நிலைநாட்டு வதற்கேயன்றி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அல்ல, என்பது மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் நீங்கள் நடந்துகொண்ட விதங்களை வைத்துப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். (தொடர்புடைய செய்தி 7ஆம் பக்கத்தில்) (வ-5)

## கொக்கட்டிச்சோலை படுகொலை: மக்களின் நினைவிடம் சீரமைப்பு



மட்டக்களப்பு, ஓக. 7
கொக்கட்டிச்சோலைப் பகுதியில் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவாக மகிழடித் தீவுச்சந்தியில்அமைக்கப்பட்டுள்ளநினைவுத் தூபி வளாகத்தில் நேற்று சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ. கருணாகரம் தலைமையிலும், அவரது நிதியுதவியிலும் சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
கொக்கட்டிச்சோலைப்பகுதியில், 1987ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொல்லப்பட்ட 185பொதுமக்களின்நினைவாக இந்தத்தூபி அமைக்கப்பட்டது. அது 2014 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.
1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி நடைபெற்ற படுகொலைச் சம்பவத்தில் 86 பேர் கொல்லப்பட்டனர்என்றுகூறப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்தநினைவுத்தூபியில், நினைவுதின நிகழ்வுகள் நடைபெற்றன.
2006 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியிலும் 2007 ஆம் ஆண்டு முதற்பகுதியிலும் நடைபெற்ற போர்காரணமாகநினைவுத்தூபி சேதமாக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு மக்கள் மீண்டும் தமது பிரதேசங்களில் மீள்குடியமர்ந்தனர்.
அதனைத் தொடர்ந்து கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுநிகழ்வு இந்த நினைவிடத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனினும் நினைவுத்தூபி சீரமைக் கப்படாமல் உடைந்தநிலையில் காணப்பட்டது.
நினைவிடவளாகமும்பற்றைகளால்சூழப்பட்டிருந்தது. நினைவு நிகழ்வுகளுக்காக மட்டும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அந்தப் பகுதியில் தற்போதுசீரமைப்புப்பணிகள்முன்னெடுக்கப்பட்டுள் ளன.
(ஜ-10)

# திருநெல்வேலியில் 5 கடைகளுக்குச் சீல்

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியதால்

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியிலுள்ள உணவகம் ஒன்றும் 4 வர்த்தக நிலையங்களும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குகின்றன என்று சுகாதாரப் பிரிவினரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டையடுத்து அவற்றுக்கு சீல் வைக்குமாறு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி காயத்திரி ஷைலவன் உத்தரவிட்டார்.

இந்த நீதிமன்றக் கட்டளை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள சில உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் சுகாதாரச் சீர்கேட்டு டன் இயங்குவதாக சுகாதாரப் பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அந்த உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் சோதனையிடப்பட்டன. இதன்போது உணவகங்களில் காணப்பட்ட உணவுகள் சுகாதார விதிமுறைகளை மீறி பரிமாறப்படுவதும் வர்த்தக நிலையங்களில் பொருள்கள் சுகாதாரச் சீர்கேட்டுடன் விற்பனை செய்யப்படுவதும் கண்டறியப்பட்டது.

இவ்வாறு காணப்பட்ட உணவகம் ஒன்றும் 4 வர்த்தக நிலையங்கள் தொடர்பாக சுகாதார பிரிவினர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் றின் கவனதுக்கு கொண்டுவந்தனர்.

சுகாதாரப் பிரிவினரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி காயத்திரி ஷைலவன், உடனடியாக அந்த வர்த்தக நிலையங்களை சீல் வைக்குமாறு உத்தரவிட்டார். அதன்படி நேற்றுமுன் தினம் அவை மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டன.

மேலும் அங்கு 3 வர்த்தக நிலையங்கள் சுகாதாரக் குறைபாடுகளு டன் உள்ளதாகத் தெரிவித்து அவற்றின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு 3 தினங்களுக்குள் நிவர்த்தி செய்யுமாறு கால அவகாசம் வழங்கப்பட்டது. சீல் வைக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-21,8,101)



அச்சுவேலி பத்தமேனி வடபத்திர காளி அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. முற்பகல் 10 மணியளவில் அம்பாள் தேரில் ஆரோகணம் செய்து அடியவர்களுக்குக் காட்சிதந்தார். தேரின் பின்னால் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், பெண் அடியவர்கள் அடியளித்தும், கற்பூரச்சட்டி எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ஐ)

## மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரிப்பு

உள்ளூராட்சி மன்றங்களால் நான்கு ஆண்டுக்கொருமுறை தயாரிக்கப்படுகின்ற 'மக்களால் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை வாக்களிப்பு முறை மூலம் இனங்காணும் அபிவிருத்தித் திட்டம்' (2018 - 2021) ஆண்டுக்காக ஊர்காவற்றுறைப் பிரதேச சபையால் அதனது ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களில் மக்கள் பங்கேற்பு கூட்டங்களை நடத்தித் தயாரிக்கப்படவுள்ளது.

இதன் ஒரு அங்கமாக நாளைமறுதினம் புதன்கிழமை ஜே59 (சுருவில்) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்குக் காலை 10 மணிக்கு ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்திலும், ஜே58 நாரந்தனை தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு மாலை 4 மணிக்கு சூரியாவத்தைப் பொதுமண்டபத்திலும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே53 கரம்பொன் தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு காலை 10 மணிக்கு பாலக்காடு பொதுமண்டபத்திலும் ஜே52 (கரம்பொன் கிழக்கு) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு மாலை 3 மணிக்கு பொதுமண்டபத்திலும் ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கி அருகில் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜே55 நாரந்தனை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு காலை 10 மணிக்கு நாரந்தனை வடக்குக் கல்வி நிலையத்திலும், ஜே49 ஊர்காவற்றுறை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு மாலை 3 மணிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் மக்கள் பங்கேற்புத்திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

எனவே குறித்த கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அதிகளவில் பங்குபற்றி தமது அபிவிருத்தித் தேவைகளுக்கு அதிகளவான வாக்குகளைச் செலுத்தி தமது தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் திட்டத்தைச் சிறப்புற நிறைவேற்ற முழுஒத்துழைப்பை வழங்குமாறும் பிரதேச சபை நிர்வாகம் கேட்டுக்கொண்டது. (21)

## திருட முயன்றதாக 4 பெண்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 7

நீர்வேலி உள்ள ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற தேர்த் திருவிழாவின் போது பக்தர்களிடம் நகைகளை கொள்ளையிட முயற்சித்த குற்றச்சாட்டில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

"ஆலயத் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்குள் பக்தர்களாகப் பாவனை செய்து வந்த 4 பெண்கள் அங்கு வழிபாட்டிலிருந்த பெண்ணிடமிடமிருந்து நகையை அபகரிக்க முயன்ற போது கைது செய்யப்பட்டனர். அவர்களில் தாயார் மற்றும் அவரது 2 பிள்ளைகளும் அடங்குவர். மற்றையவர் அவர்களின் அயலவராவார். சந்தேகநபர்கள் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-37)

## ஒளிப்படம் மற்றும் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக.7

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் ஒளிப்படம் மற்றும் ஓவியக் கண்காட்சி கல்லூரியின் பேச் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு காண்பிய, ஊடகக் கழகம் மற்றும் சித்திரக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் மாணவர்களது திறன்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காண்பியல், ஊடகக்கழகத் தலைவர் த.மதுர்ஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினராக கல்லூரியின் முதல்வர் எம்.இந்திரபாலா கலந்து கொண்டு நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். பரிசளிப்புவிழாவை முன்னிட்டுக் கல்லூரியின் பழைய மாணவன் அரியரட்னம் கிருஷ்ணகுமாரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஒளிப்படப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களது ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. கண்காட்சிக்கான வழிகாட்டல்களை கல்லூரியின் சித்திர ஆசிரியரும் பகுதித் தலைவருமான தி.தீபன், காண்பியல் கழகப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (21)

## கந்தபுராண வாழ்வியல்: 11ஆம் நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக.7

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழா "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" 11 ஆம் நாள் வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி விமலநாதன் கலந்துகொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)

## தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இரண்டாம் நாள்

யாழ்ப்பாணம் ஓக.7

நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு சைவமகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் "தெய்வீகத் தொடர் இசைப் பேருரை" யின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன. "தாடகைவாதம்" எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (21)

## ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள்

சாவகச்சேரி ஓக.7

கமத்தொழில் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஒகஸ்ட் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரிவு அஞ்சல் அலுவலகங்களுக்குப் பிரதேச சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகளை தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21,9)



வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பெருந்திருவிழா இடம்பெற்று வருகிறது. தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (4)

## இருவேறு விபத்துக்களில் மூவர் காயம்

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் மூவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மிருசுவில் உசன் சந்தி, முதன்மைச் சாலையில் கடந்த வியாழக்கிழமை இரவு ஹைஏஸ் வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதிக் கொண்டன. இந்த விபத்துச் சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் காயமடைந்தனர். முச்சக்கர வண்டியும் பலத்த சேதமடைந்தது.

விபத்தில் அல்வாய் வட்டுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் டொனால்ட் டிக்ஸன் (வயது - 27) திவ்விய நாயகம் யூட் நிஷாந்தன் (வயது - 28) ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் சாலையில் வந்த நோயாளர் காவு வண்டிக்கு வழி விடுவதற்காகச் சாலையோரத்தால் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய சரசாலை வடக்கைச் சேர்ந்த முதியவர் மோட்டார் சைக்கிளின் சில்லு சறுக்கியதில் சாலையில் வீழ்ந்து காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. பேரம்பலம் [illegible] (வயது [illegible]) என்பவரே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (21,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களை மகிழ்விக்கும்

# நல்லூர் நாடகத்திருவிழா புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்ப்பாணம், செயல் திறன் அரங்க இயக்கம் வருடம் தோறும் நடத்திவரும் "நல்லூர் நாடகத் திருவிழா " ஐந்தாவது ஆண்டாக இம்முறையும்நடைபெறவுள்ளது. நாடக மேடையேற்றத்துக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவுற்ற நிலையில் நாளை மறுதினம் புதன்கிழமை முதல் அவை மேடையேற்றப்படவுள்ளன.

இந்த நாடகங்கள் நல்லூர் குறுக்கு வீதி நல்லூரில் இடம்பெறுகிறது. நாளை மறுதினம் புதன்கிழமை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஒவ்வொரு நாளும் இரவு 7 மணிக்கு மேடையேற்றப் படும் நாடகங்கள் அனைத்தையும் இலவசமாகக் கண்டுகளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், இசை நாடகங்கள், பொம்மலாட்ட நாடகங்கள், விழிப்புணர்வு நாடகங்கள், என பலவகையானவை மேடையேறுகின்றன. சிறுவர்களை மிகவும் மகிழ்வூட்டுவதாகவும்,அறிவுசார்ந்துசிந்திப்பதாகவும் நாடகத்தின் கதை அமைக்கப்பட்டுள்ளதாகவும், தினமும் இரண்டு நாடகங்கள்மேடையேற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும்செயற்றிறன் அரங்க இயக்கம், நல்லூர் கந்சுவாமி ஆலய உற்சவத்தின்போது "நல்லூர் நாடகத்திருவிழா" எனும் தொனிப்பொருளில்பலவகையான நாடகங்களை மேடையேற்றிவருகிறது " நல்லூர் நாடகத்திருவிழா" முதலாவது மேடையேற்றம் கடந்த 2013ஆம் ஆண்டு கிட்டுப்பூங்காவில் பிரமாண்டமாக இடம்பெற்றது. அங்கு புதிய அரங்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. 100 நடிகர்கள் ஒரே மேடையில் பிரசன்னமாகுமாறு அந்த மேடை அமைக்கப்பட்டிருந்தது. இது பார்வையாளர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன் சாலை, நல்லூர் குறுக்கு தெருவில் உள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தில் நாடகங்கள் மேடையேறின. ஐந்தாவது ஆண்டான இந்த ஆண்டும் அங்கேயே நாடகங்கள் மேடையேறவுள்ளன. சிறுவர்நாடகத்தின் தந்தை குழந்தை ம.சண்முகலிங்கம், மற்றும் செயற்றிறன் அரங்க இயக்க இயக்குநர் தே. தேவானந், பேராசிரியர் நந்தி, மற்றும் நாட்டார் வழக்கியற் கலையகத்தினரின் நாடகங்கள் மேடையேற்றப்பட்ட உள்ளன. (21)

# அண்மையில் இருக்கும் பாடசாலையே சிறந்தது

*பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டுமென அறிவுரை*

யாழ்ப்பாணம், ஓக. 7

பெற்றோர்கள் சிலர் நகரப் பாடசாலைகளிலேயே மாணவர்களை இணைக்கின்றனர். அண்மையில் உள்ள பாடசாலையே சிறந்த பாடசாலை என்று கல்வி அமைச்சுக் கூறுகிறது. அதனைப் பெற்றோர் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபர் திருமதி புஸ்பராணி பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு சங்கானை கொமர்ஷல் வங்கியில் கடந்த வாரம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி குறிப்பிட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் அதே பாடசாலையில்கல்வியைத்தொடர்வதில்லை. அதே பாடசாலையில் தரம் 5இற்கு மேல் வகுப்புகள் இல்லாத ஆரம்பப்பாடசாலைஎன்றால் பரவாயில்லை. ஆனால் மேல் வகுப்பு வசதிகள் இருந்தும் அது தொடர்பில்கவனம்குறைவாகவுள்ளது. அயலில் உள்ள பாடசாலை என்றால் போக்குவரத்துக்கு இலேசாகவும் இருக்கும். மாணவர்களின் வதிவிடத்துக்கு ஒரு கிலோ மீற்றர் தூரமுள்ள பாடசாலையை விட்டு, வேறு பாடசாலைக்கு ஏன் செல்ல வேண்டும்? இந்த விடயத்தில்பெற்றோர்களேசிந்திக்கவேண்டும் – என்றார்.

இந்தநிகழ்வில்சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் றோபேர்ட் உதயகுமார், "வெட்டுப்புள்ளிக்குமேல்சித்தி பெறுகின்றமாணவர்களைமட்டும் கௌரவிக்காமல் 100 புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற மாணவர்களையும்சேமிப்பில் இணைந்திருந்தால் கௌரவிக்கவேண்டும். அதனால் தாங்கள் சித்தியடைய வேண்டும், சேமிக்க வேண்டும் என்ற ஆர்வம் அந்த மாணவர்களுக்கும் தூண்டும். மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பரிசில்களை, பாடசாலை காலைப் பிரார்த்தனை நேரம் மற்றைய மாணவர்களுக்கு முன்னிலையில் வழங்கவேண்டும். அதனால் மாணவர்கள் எல்லோர் மனதிலும் தாமும் சித்திய டைந்தால் இவ்வாறான பரிசில்களைப் பெறலாம் என்ற ஆர்வம் ஏற்படும்" என்றார். (429)



இலங்கை மனித உரிமைகள் அமைப்பினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான வினாடி வினாப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது. மாவட்ட மட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில் மகாஜனக் கல்லூரியின் மாணவர்கள் சி.சர்மிலன், த.ரேணுஜன், தி. மணிமோகன், கஜகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இவர்கள் மாகாண மட்டப் போட்டிக்கும் தகுதி பெற்றனர். (21,422)

# குடும்பத் தலைவர் தனக்குத் தானே தீவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7

மீசாலையில் குடும்பத் தலைவர் உடல் முழுதும் எரிகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த 32 வயதுடைய இளங்குடும்பத் தலைவரே தவறான முடிவெடுத்து தனக்குத் தானே பெற்றோல் ஊற்றித் தீ மூட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து அவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவர் தனது மைத்துனரிடம் கடனாகப் பணம் பெற்று பட்டா ரக வாகனம் ஒன்றை லீசிங்கில் கொள்வனவு செய்துள்ளார். கடன் பணம் செலுத்தி முடிக்கப்படவில்லை. மைத்துனர் நேற்றுக் காலை குறித்த குடும்பத்தலைவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் தேவை கருதி தனது மகனுடன் வெளியே சென்றிருந்தார். கடன் கொடுத்தவர் அங்கு சகோதரியிடம் காரசாரமாகக் கதைத்துவிட்டுச் சென்றுள்ளார். குடும்பத் தலைவர் வீடு திரும்பியதும் அவருடன் மனைவி முரண்பட்டு வீட்டிலிருந்த பெற்றோலை எடுத்து தனக்குத் தானே ஊற்றித் தீ மூட்ட முற்பட்டுள்ளார். அதனைப் பறித்த அவரது கணவனான குடும்பத் தலைவர் தனக்குத் தானே ஊற்றித் தீ மூட்டிவிட்டார். தீ உடல் முழுதும் பற்றி எரிந்தது. உடனடியாக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டது. பொலிஸார் விசாரணை முன்னெடுத்துள்ளனர். (4,9)

# நாய்களுக்கு கருத்தடை

தென்மராட்சி, ஓக.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் வளர்ப்புப் பெண் நாய்களுக்குக் கருத்தடைச் சத்திர சிகிச்சைசெய்யும்பணிகளை சாவகச்சேரி சுகாதாரத்திணைக்களத்தினர்பொது சுகாதார பரிசோதகர்பிரிவுரீதியாக ஆரம்பித்துள்ளனர். அதன்படி இன்று திங்கட்கிழமை மந்துவில் பிரிவில் வளர்ப்புப் பெண் நாய்களுக்குக்கருத்தடைச்சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. (21,9)

### மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 60 | 80 |
| கத்தரி | 80 | 60 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 100 | 120 | 120 | 120 | 180 |
| பாகல் | 300 | 140 | 160 | 160 | 180 |
| க.கிழங்கு | 140 | 140 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 100 | 110 | 100 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 170 | 150 | 120 |
| பூசணி | 100 | 80 | 100 | 80 | 80 |
| தக்காளி | 150 | 160 | 160 | 140 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 60 |
| கீரை | 30 | 25 | 40 | 10 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 25 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 400 | 200 | 400 | 360 |
| புடோல் | 100 | 80 | 80 | 120 | 80 |
| கோவா | 120 | 120 | 150 | 140 | 100 |
| வெண்டி | 100 | 80 | 100 | 120 | 60 |
| போஞ்சி | 120 | 150 | 170 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 70 | 58 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 160 | 220 | 160 | 340 |
| கரட் | 180 | 200 | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 200 | 80 | 100 |

### கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 600 | 400 |
| கணவாய் | 600 | 700 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | 1000 |
| சீலா | 400 | 400 | 600 | 500 |
| விளை | 600 | 400 | 600 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 800 |
| கும்பிளா | 300 | 300 | 450 | – |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 400 | 300 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 200 | 30 | 80 | 100 |
| பாலை | 250 | 200 | 600 | 500 |
| வாளை | 200 | 200 | 500 | 400 |




பெண்களுக்கான சட்டைகள் சில தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 2 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. முழு நீள வடிவில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப் பாடசாலைகளின் 112ஆவது நிறைவு விழா

வவுனியா, ஒக.7
அறநெறி பாடசாலைகளின் 112 ஆவது ஆண்டு நிறைவு தினத்தைக் கொண்டாடும் விழா கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகரசபை கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெற்றது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வழி காட்டலின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பௌத்த சாசன பிரதி அமைச்சர் எச்.ஆர் சாரதி துஸ்மந்த மித்திரிபால, பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம் நிமல் கொட்டவலகெதர, பௌத்த சாசன வலிமுரியாவே குசலதம்ம தேரர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜெயதிலக, மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார, வவுனியா மாவட்ட செயலர் எம்பி. ஆர் ரோகன புஷ்பகுமார, முல்லைத்தீவு மாவட்ட செயலர் ஆர். கேதீஸ்வரன், வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகள், பாடசாலை அதிபர், மாணவர்கள். பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
இதன் போது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (21,ரி)

## வவுனியா வடக்கு வாக்காளர் பட்டியலில் இரு வேறு தகவல்கள்

### விளக்கம் கோரி சிவசக்தி எம்.பி கடிதம்

வவுனியா, ஒக.
வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட பிரிவுகளில் வாக்களர் எண்ணிக்கையில் காணப்படும் மாறுபாடு தொடர்பாக உரிய விளக்கம் அளிக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
"வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாக்காளர்கள் இடாப்புக்கும், வவுனியா வடக்குப் பிரதேச சபையின் கீழுள்ள வாக்களார் இடாப்புக்கும் இடையே ஏற்பட்டுள்ள வாக்களார்கள் வித்தியாசத்தை தெளிவுபடுத்த வேண்டும். குறிப்பாக வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு வவுனியா தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள 2016ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட வாக்களார்கள் பட்டியலில் 11ஆயிரத்து 747 பேரும், வவுனியா வடக்குப் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்ட வாக்களர்கள் பட்டியலில் 8ஆயிரத்து 577 பேரும், பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்தப் பட்டியலுக்கிடையில் 3ஆயிரத்து 170 வாக்காளர்கள் வித்தியாசப்படுவதற்கான காரணத்தை தெளிவு படுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலி ஓயா கிராமத்திலுள்ள வாக்களார்கள், நெடுங்கேணிப் பிரதேச சபை வாக்காளர்கள் பட்டியலுடன் இணைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன்.
அத்துடன் 2015ஆம் ஆண்டு வெடிவைத்த கல் கிராம அலுவலகர் பிரிவில் 18 பேரே வாக்களர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். தற்போது இந்தக் கிராம அலுவலகர் பிரிவில் திடீரென 758பேர் வாக்காளர்களாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.
இந்த விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவே எல்லைமீள்நிர்ணயக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளதோடு, மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் இது தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முன்னிலைப்படுத்தி, அதற்கான விளக்கத்தை வழங்குமாறு கோரியிருந்தோம். எனினும் அதற்கான பதில் இன்று வரை யாராலும் எமக்கு வழங்கவில்லை. அந்தப் பிரதேச மக்களின் இந்தக் கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்பதால் இதற்கான விளக்கத்தை எனக்கு வழங்கி உதவுமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்-என்றுள்ளது.
இந்தக் கடிதத்தின் பிரதி வவுனியா மாவட்ட செயலாளர் றோகன புஸ்பகுமாரவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (21)

# பிரதேசவாதம் மதவாதம் பேசும் நேரம் இதுவல்ல

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, ஒக.7
"அண்மைக்காலமாக சில ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வருகின்ற செய்திகள் கொடிய போரால் நொந்து போன மலையக உறவுகளின் மனதை மேலும் நோகடிப்பதாக அமைந்துள்ளன. பிரதேச வாதம், மதவாதம் பேசும் நேரம் இதுவல்ல. ஏற்கனவே அரசியல் ரீதியாக முரண்பட்ட சமூகமாகக் காணப்படும் தமிழ் பேசும் மக்கள் இவ்வாறான குறுகிய வட்டத்துக்குள் பிரிந்துசென்றால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தைகேள்விக்குறியாக்கிவிடும்" என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் இனரீதியான வேறுபாடு குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக மொழி ரீதியாக இரண்டு தேசிய இனங்களே காணப்படுகின்றன. எனினும் சுதந்திரத்துக்கு பின்னர் எண்ணிக்கையில் அதிகளவிலான சிங்கள தேசியவாதிகள் தமிழ் மக்களை இரண்டாம் தர குடிமக்களாகவே நடாத்தி வந்தனர். இதன் பிரதிபலிப்புதான் நாட்டில் ஏற்பட்ட உரிமைப் போராட்டமும் அதன்பால் ஏற்பட்ட இழப்பகளும்.
வடக்கு-கிழக்கைப் பொறுத்தரை ஈழவிடுதலைப் போராட்டத்தில் மலையகத் தமிழ் மக்களும் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளனர். தமிழ் மக்களுக்கான அறவழிப் போராட்டத்திலும் சரி, ஆயுதப்போராட்டத்திலும் சரி ஒடுக்கப்பட்ட தமிழர்கள் என்பதன் அடிப்படையில் ஈழவிடுதலை இயக்கங்களுடன் இணைந்து மலையகத் தமிழர்களும் போராடியுள்ளனர்.
அவர்களைப் பற்றிய விரும்பத்தகாத, அருவருப்பான விமர்சனங்களைச் சிலர் முன்வைப்பதானது மனவேதனையைத் தருகிறது -என்றார்.
புலம்பெயர் தமிழர் ஒருவர் மலயகத் தமிழ் மக்களை இழிவுபடுத்திப் பேசிய காணொலி ஒன்று அண்மையில் சமூக வலைத்தளங்களில் தீயாகப் பரவியது. அந்தக் காணொளி கண்டனங்களுக்கும் உள்ளாக்கப்பட்டது. அது தொடர்பாகப் பலரும் அதிருப்தி தெரிவித்திருந்தனர். (21)

## அஸ்மினின் சர்ச்சைப் பதிவு

தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் ஆயுததாரிகளால் கொல்லப்பட்டார்கள் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.அஸ்மின் முகநூலில் கடந்த 3ஆம் திகதி பதிவிட்டிருந்தார். 'ஆயுததாரிகள்' என்று குறிப்பிட்டதற்கு முஸ்லிம் சமூகத்தினரிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பியதும், அவர் தனது முகநூல் பதிவை நீக்கியுள்ளார்.
'1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் 3ஆம் திகதி தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்கள் ஆயுததாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்று தனது முகநூலில் மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் பதிவுசெய்திருந்தார். இந்தப் பதிவுக்கு முஸ்லிம் மக்களிடமிருந்து கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. 'ஆயுததாரிகள்' என்று மொட்டையாக ஏன் பதிவு செய்தார் என்று அவர்களால் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, 1990ஆம் ஆண்டு கிழக்கில் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான படுகொலைகளுக்கு புலிகளே காரணம் என்ப பொதுவாக நம்பப்பட்டாலும் அதனைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுவாக மக்கள் கருதுவதற்கு பல்வேறு காரணங்களும், நியாயப்பாடுகளும் இருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் உரிய விசாரணைகளின்படி இது வரை நிரூபிக்கப் படவில்லை. இவ்வாறான நிலையில் ஒரு சாராரை நோக்கி விரலை நீட்டுவதை விடவும் பொதுவாக ஆயுததாரிகள் என்று குறிப்பிட் டுள்ளேன். இவ்வாறான கொலைகளுக்கான முழுமையான விசாரணை இடம்பெற்றால் உண்மைநிலை உறுதிப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. விசாரணைகளின் பின்னரே அதனை எவர் செய்தார்கள் என்பதையும் அதற்கான தண்டனையையும் நாம் வெளிப்படுத்த முடியும் என்று அஸ்மின் குறிப்பிட்டிருந்தார். அவரின் இந்தப் பதிலுக்கும் முஸ்லிம் சமூகத்தினரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. இதனையடுத்து முகநூலிலிருந்து அந்தப் பதிவுகளை அவர் நீக்கியுள்ளார். (5)



## 11ஆம் திருவிழா

### என்ன தவம் செய்தோம்!

மயிலேறி வரும் முருகா
என் மனத்தில் குடிகொண்டவா!
கவச ந்தில் முதன்மை கொண்டவா
நாம் வணங்கும் சிறு பிள்ளை வேலவா
குறை தீர்க்கும் உன் உள்ளம்
எங்கள் மனக் குடியினில்
வீற்றிருக்கும் கந்தவேலா!
நாம் இனி என்ன செய்ய
உன் முகம் கண்டபின் கவலையேது
நல்லூர் பதி முருகா!
நீ வீற்றிருக்கும் அழகு காண
இம் மண்ணில் வாழ்ந்த
பயன் கண்டோம் முருகையா!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

### தமிழர் துயர் தீர்க்க வேண்டும் வேலவா

நல்லைநகர் ஆழ்பவனே
சிங்கார வேலவனே
இன்னல்கள் அழித்தொழிக்க
வரவேண்டும் இப்பதியினிலே

மாங்கனி வேண்டியே
பூமியைச் சுற்றினாய்
மாங்கனி இன்றியே மாமலை
ஏறினாய்

தேவரோடு கைகோர்த்து
சூரனுடல் கிழித்தவனே
வண்ணமயில் ஆண்டவனே

சக்தி வடிவேலவனே
சூரான வேல் கொண்டு
வருவாயோ நீ இங்கு
வந்தாலே துயர்தீரும் திரு
நல்லையூர் பதியோனே

ஆறுபடை வேந்தனே
ஆறுமுகன் தம்பியே
அல்லல்படும் தமிழர் துயரறுக்க
வரவேண்டும் மாதிருநல்லூர்
பதியதிலே

*கிருஷ்ணராஜா சஞ்சீவன்*

### வளம் நிதம் கொழிக்கும் காணீர்

சொல்லொணாத் துன்பம் வந்து
சுட்டெம்மை எரித்திட்டாலும்
அல்லவை அணி திரண்டு
அவனியை அழித்திட்டாலும்
தில்லையிற் திருக்கூத்தாடும்

திருவிடை தீர்த்தன் மைந்தன்
வல்லமையாலே யென்றும்
வளம் நிதம் கொழிக்கும் காணீர்

*கலாபூசணம் கலைமாமணி*
*கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோக்கியமான வாய்ச்சுத்தம் பேணிட

★ஆரோக்கிய உணவு வகைகளை உண்போம்.

★ஒட்டும் தன்மையான அதிக இல ப் பான சொக்லட், பிஸ்கட், பணிஸ் போ றவற்றை தவிர்ப்போம்.

★சீனி அதிகம் சேர்க்கப்பட் இனிப்பூட்டிய பானங்களை தவிர்ப்போம்.

★போதியளவு குடிதண்ணீர் அருந்துவோம்.

★காலையும் மாலையும் சரியான முறையில் களை துலக்கிக் கொள்வோம்.

★கிழமைக்கு ஒரு தடவை பல் , முரசுபோன்றவற்றில் ஏதேனு ் மாறுதல்கள் உள்ளனவா? என பரிசோதித்துக் கொள்வோம்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*



ஆளணிப் பற்றாக்குறை

# வடக்கு சுகாதார துறையில் நீடிப்பு

### நியமன அதிகாரம் கொழும்பிடம் உள்ளதால் சிக்கல் நிலை என்கிறார் மாகாண அமைச்சர்

வவுனியா, ஓக.7

ஆளணி நியமன அதிகாரம் கொழும்பு அரசிடம் இருப்பது மாகாண சுகாதாரத் துறை அபிவிருத்திக்குப் பெரும் தடையாக உள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனை நோயாளர் விடுதிக்கான அடிக்கல் நட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைக்கு குறைந்தளவிலான அதிகாரமே காணப்படுகின்றது. எனினும் மாகாண, கொழும்பு அரசுகளின் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் கடந்த 4 வருடங்களில் வடக்கு சுகாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க அளவு பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

ஆளணிப்பற்றாக்குறை தொடர்ந்தும் இந்த மாகாணத்தில் நிலவுகின்றது. துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கான பற்றாக்குறையே பெருமளவில் உள்ளது. அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கோ அல்லது அவர்களை நியமனம் செய்வதற்கோ மாகாண சுகாதார அமைச்சுக்கு அதிகாரம் இல்லை. கொழும்பு அரசே நியமன அதிகாரத்தைத் தன்வசம் வைத்துள்ளது.

இதனால் புதிய மருத்துவ மனைகளை அமைத்தாலும் அதற்கான ஆளணியை நியமிப்பதில் கொழும்பு அரசை நாடவேண்டிய நிலையுள்ளது. இந்த விடயமாகத் தொடர்ந்தும் கொழும்பு சுகாதார அமைச்சை வலியுறுத்திவருகின்றோம்.

இந்தப் பிரச்சினை கொழும்பு சுகாதார அமைச்சர் மற்றும் அரச தலைவர் வரை கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த வாரம் அரச தலைவர் செயலகத்தில் சிறப்புச் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் அரச தலைவர் செயலக அதிகாரிகள், நிதி அமைச்சின் அதிகாரிகள், கொழும்பு மற்றும் மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். எமது வேண்டுகோளுக்கமைய போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற வகையில் ஆளணியை உயர்த்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (21)

# சாலையில் போராடும் மக்களை கண்டுகொள்ளாதவர்கள் முல்லைத்தீவின் மீட்பராம்

### சாடுகிறார் சாந்தி எம்.பி

முல்லைத்தீவு, ஓக.7

"முல்லைத்தீவு மாவட்டத்திலே தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னும் விடுவிக்கப்படாது இழுத்தடிக்கப்படுகின்றது. இதற்காக தமிழ் மக்கள் இன்றும் சாலைகளிலே போராடுகிறார்கள். இதை கவனிப்பார் யாரும் இல்லை. முல்லைத்தீவு மாவட்டத்தின் மீட்பர் எனத் தாங்களே தங்களைக் கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகளுக்கு அந்த மக்களின் அவலங்கள் போய்ச் சேரவில்லையா ? அல்லது அவர்கள் மக்களைக் கண்டுகொள்ளவில்லையா?"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பிரித்தா னிய அரசின் காலத்தில் சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையே ஏற்பட்ட இன முரண்பாடு பூதாகரமான பொழுது சேர். பொன்.இராமநாதன் தலையிட்டு முரண்பாட்டைத் தீர்த்து வைத்தார் என்பது வரலாறு.

1990ஆம் ஆண்டுகளில் போரால் முஸ்லிம்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டமை வருந்தத்தக்கது. அந்தக்காலத்தில் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடுஇவ்வாறன இன முரண்பாட்டைத் தோற்றுவித்தது. தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான முரண்பாட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் தமக்கு சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டார்கள்.

தமிழ், சிங்கள முரண்பாட்டை நடுநிலையாக நின்று தீர்த்து வைப்பதில் முஸ்லிம் தலைவர்கள் எந்த வகிபாகத்தையும் வகிக்கவில்லை. இருந்த போதும் போரில் மூவின மக்களும் சொல்லானத் துன்பங்களை அனுபவித்தார்கள் என்று எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் கூழாமுறிப்புக் குடியேற்றத் திட்டமானது ஓர் மீள்குடியமர்வு அல்ல புதிய குடியேற்றமாகவே செயற்படுத்தப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு மீள்குடியமர்வு நடந்த போது முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மீள்குடியமர வந்த முஸ்லிம் குடும்பங்க ளுக்குச் சகல கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

ஆனால் தற்போது நீண்டகாலம் உள்ளூரிலே இடம்பெயர்ந்தவர்களுக்கான செயலணி இடம்பெற்று முஸ்லிம்களுக்கும், சிங்கள்வர்க ளுக்கும் மட்டும்கொடுப்பனவுகளையும் உட்கட்டுமான வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு கடமையாற்றிய கரைத்துறைப் பற்றுப் பிரதேச செயலரால் ஆயிரத்து 453 முஸ்லிம் குடும்பங்கள் காணி அற்றவர்கள் எனப் பொய்யான பட்டியல் தயாரிக்கப்பட்டது. அடுத்து வந்த பிரதேச செயலரால் இது உறுதிப்படுத்தப்பட்டது. விசாரணைகள் நடைபெற்றன. 448 குடும்பங்கள் மட்டுமே காணியற்றவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டனர்.

முறிப்பு கொத்தியாகும்பம் பகுதியில் 78 முஸ்லிம் குடும்பங்களுக்குக் காணிகள் உள்ளன. ஆனால் இதில் இரண்டு முஸ்லிம் நபர்கள் 35 ஏக்கர் வீதம் 70 ஏக்கர் காணியை கையகப்படுத்தி உள்ளனர். அத்துடன் 10 ஏக்கர் வரையான காணிகளை பல முஸ்லிம்கள் கையகப்படுத்தி மொத்தமாக 200 ஏக்கர் வரையான காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஓர் பக்கச்சார்பான நடவடிக்கைகளை எடுக்காது பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் பயனடையும் வகையில் அரசும் அரச அதிகாரிகளும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அர்பணிப்புடன் செயற்படுகிறது என்பதற்கு மாற்றுக்கருத்துக் கூற முடியாது. நாம் போதியளவு சந்தர்ப்பங்களை வழங்கி இருக்கின்றோம். அதுவே எமது பலவீனமாகவும் கருதக்கூடாது. இன நல்லிணக்கத்தில் எந்தவொரு கைங்கரியங்களுக்கும் ஊறு விளைவிக்கக்கூடாது என்பதில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். என்றார். (21,101)

## இளைஞர் விவசாயக் கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும்

### வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் வேண்டுகோள்

அச்சுவேலி, ஓக 7

இளைஞர் விவசாயக் கழகங்கள் ஊடாக விவசாயத்துக்கான மானிய உதவிகள் மற்றும் உதவிகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுவதால் கிராம அலுவலர் பிரிவு வாரியாக இளைஞர் விவசாயக் கழகங்களை நிறுவி இளைஞர்களும் விவசாய முயற்சியில் ஈடுபட வேண்டும். சந்தர்ப்பத்தை தவறவிடகூடாது என வடக்கு மாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்ததார்.

அவர் மேலும் தெரிவித்தாவது: 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட பத்துக்கு குறையாத இளைஞர்கள் ஒன்று சேர்ந்து இளைஞர் விவசாயக் கழகங்களை ஆரம்பிக்கலாம். கிராம அலுவலர் பிரிவுக்கு ஒன்று அமைக்கலாம் என்ற போதிலும் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட உபகிராமங்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட கழகங்களையும் அமைக்கலாம். இளைஞர் விவசாயக் கழகங்கள் தொடர்பாக விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்களங்களுடன் நேரில் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்கள் மற்றும் கழகங்களையும் பதிவு செய்வதற்கான படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எதிர்காலத்தில் வி வசாயத்திணைக்களத்தினால் வழங்கப்படும் மானிய உதவிகள் மற்றும் உதவிகள் இளைஞர் விவசாயக் கழகங்கள் ஊடாக முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன. எனவே இளைஞர் விவசாயக் கழகங்களை நிறுவி அதன் ஊடாக விவசாய அபிவிருத்தியை மேல்நிலைப்படுத்துவதற்கு இளைஞர்கள் முன்வரவேண்டும். இதுவரை வடக்கு மாகாணத்தில் 78 விவசாயக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. 20 கழகங்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. முல்லைத்தீவில் 22 கழகங்களும், மன்னார் மாவட்டத்தில், 17 கழகங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 16 கழகங்களும் யாழ்ப்பாணத்தில் 14 கழகங்களும், வவுனியாவில் 9 கழகங்களும் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றார். (21.11)

முல்லைத்தீவில் சட்டவிரோத கடற்றொழில்:

# காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச்செயலருக்குக் கடிதம்

### வட.மாகாண சபை உறுப்பினர் சிவனேசன் அனுப்பிவைப்பு

முல்லைத்தீவு, ஓக.7

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்பரப்பில்சட்டவிரோதகடற்றொழில்இடம்பெறுவது கண்டறியப்பட்டுள்ளதால், அதற்கான காரணங்களைத் தெளிவு படுத்துமாறுவடக்குமாகாணசபைஉறுப்பினர் க. சிவநேசன் மாவட்ட செயலாளரைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவரால் மாட்ட செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு பிரதேசத்தில் சுருக்கு வலைமற்றும்டைனமெட்பாவித்துமீன் பிடித் தொழிலை மேற்கொள்ளுவதாக முறைப்பாடுகளும்தகவல்களும்கிடைக்கப்பெற்றுள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில்தொடர்ச்சியாகமுறைப்பாடுகள் மேலும்கரைவலைப்பாடுகளில் உழவு இயந்திரத்தைப் பாவிப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் குறித்த சிலருக்கு சுருக்கு வலையைப்பாவிப்பதற்கு அனுமதியை எவ்வாறு வழங்கியுள்ளது? டைனமெட் பாவிக்கும்போது பாதுகாப்புப் பிரிவினர் உட்பட சம்பந்தப்பட்டதிணைக்களங்கள்நடவடிக்கைகள் எடுக்கதவறியமைக்கானகாரணங்கள் யாவை?, கரைவலைப்பாடுகளில் உழவு இயந்திரங்கள் பாவிக்கும் போது அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்காமைக்கான காரணங்கள் யாவை? செய்யப்பட்டும்நடவடிக்கைகள்எடுக்காமைக்கான காரணங்கள் யாவை? இந்தக் கேள்விகளுக்கான உண்மை நிலையைக் கண்டறிந்து இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்குமாறு மீன்பிடித் தொழிலை தமது வாழ்வாதாரமாக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டுவினையமுடன்கேட்டுக்கொள்கின்றேன்- என்றுள்ளது. இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சருக்கும்,முல்லைத்தீவுமாவட்ட கடற்றொழில்நீரியல்வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தேர்தலில் கூட்டமைப்பு கிழக்கில் ஆட்சியைப் பிடிக்கும்

## மாகாண சபை உறுப்பினர் கருணாகரம் நம்பிக்கை

மட்டக்களப்பு, ஓக.07

அடுத்த தேர்தலில் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படும் 37 ஆசனங்களில் குறைந்தது 15 ஆசனங்களைப் பெற்று சில உதிரிக் கட்சிகளுடன் இணைந்து கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பிடிக்கும் நிலை வரும் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டம் பாலையடிவட்டைப் பகுதி முன்பள்ளி சிறார்களின் உடல் திறன் விளையாட்டு விழா சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணசபையின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் வேதனம் அடுத்த வருடம் அதிகரிக்கப்படவுள்ளது. இருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தின் ஆட்சிக்காலம் இன்னும் குறுகிய காலத்தில் நிறைவடைய இருக்கின்றது.

எதிர்வரும் 10 ஆம் மாதம் முதலாம் திகதியுடன் கிழக்கு மாகாணதின் 5 வருட ஆட்சிக்காலம் முடிவுறும் நிலையிலிருக்கின்றது. இந்த ஆட்சிக்காலம் சிலவேளைகளில் மேலும் நீடிக்கப்பட வுள்ளதாகவும் கருத்துக்கள் வருகின்றன. மாகாணசபை கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறும் சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இலங்கையிலே உள்ள 9 மாகாண சபைகளுக்கும் ஒரே தடவையில் தேர்தலை நடாத்தக்கூடிய சூழலை மத்திய அரசு உருவாக்கி வருவதாக நாம் அறிகின்றோம். கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட 3 மாகாண சபைகளின் ஆயுட்காலம் எதிர்வரும் 9 ஆம் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுற இருக்கின்றது. வட மாகணசபை உள்ளிட்ட 3 மாகாணசபையின் ஆயுட்காலம் 2018 ஆம் ஆண்டும், மேல்மாகாணம், கொழும்பு உள்ளிட்ட 3 மாகாணங்களுக்கான ஆயுட்காலம் 2019 ஆம் ஆண்டும், நிறைவுற இருக்கின்றது.

ஆனால் இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நேரத்தில் நடாத்த வேண்டுமாக இருந்தால் 2019 ஆண்டு செப்டம்பர் மாதம் தான் அந்தக் காலக்கெடு வரும். இதற்குட்பட்ட 2 வருடத்தில் கிழக்கு மாகாணத்தின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்பது பற்றி நாம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

தற்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் தற்போது ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம். கடந்த 2015 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அதிகாரத்திற்கு வர முன்பு மாகாண சபையிலும் நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சியிலிருந்தோம்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த நாம் கிழக்கிலுள்ள 2 அமைச்சிகளுக்கூடாக ஓரளவு அபிவிருத்திகளைச் செய்து கொண்டு வருகின்றோம்.

கிழக்கில் 40 வீதத்திற்குக் சற்றுக் குறைவாக தமிழ் மக்கள் கிழக்கில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்நிலையில் தேர்தல் ஒன்று ஏற்படுமாக இருந்தால் கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்து ஆட்சியமைக்க முடியாது. ஆனாலும் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படும் 37 ஆசனங்களில் குறைந்தது 15 ஆசனங்களைப் பெற்று சில உதிரிக்கட்சிகளுடன்இணைந்து கிழக்கில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஆட்சியைப் பிடிக்கும் நிலைவரும்.

எல்லைப் புறக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு கிழக்கு மாகாணசபையின் ஆட்சி குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் எமது கரங்களில் இருக்க வேண்டும். புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பில் சமஸ்ட்டி ரீதியிலான அதிகாரங்கள் பகிரப்பட்டாலே நாங்கள் நிம்மதியாக வாழ முடியும்.

கடந்த காலங்களில் அகிம்சை ஆயுத ரீதியாக நாம் பலவற்றை இழந்திருக்கின்றோம், பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கின்றோம். நாம் தமிழீழத்தை பெறாவிட்டாலும், எமது உரிமைகள் கிடைக்கவேண்டும் நாம்நிம்மதியாகஇருக்கவேண்டும், இறந்தஅனைத்துஆத்மாக்களும் சாந்தியடைய வேண்டுமாக இருந்தால் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து செயற்பட வேண்டும் - என்றார்.

(ய-46)

### தவறிவிட்டது

கார் திறப்பு (Car Key) ஒன்று பிறவுண் வீதியில் இருந்து ஆடியபாதம் வீதியூடாக A9 வீதியில் பிரயாணிக்கும் போது 05.08.2017 இரவு தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 766 7204

### தவறிவிட்டது

த.தர்மேந்திரகுமார் ஆகிய எனது கட்டாரில் வேலை செய்யும் உத்தரவுப் பத்திரம் பேர்ஸ்சுடன் 28.07.2017 இல் சித்தங்கேணிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.
077 492 9679

யாழ் மாநகரில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்
பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் திரை இசை நிகழ்ச்சி



இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில்
(வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : இம்மாதம் 12 ஆம் திகதி (12.08.2017)
மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்
டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள
The Phone Shop
நெல்லியடி 077 285 0285
பூபாலசிங்கம் புத்தகசாலை 021 222 6693
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : K.T. பிரசாத்
Ceylon Art Creation
தொடர்பு 077 550 4910

### பதவிவெற்றிடம்

யாழ்.மாவட்டத்தில் கட்டட நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ள C2 தர கொம்பனி ஒன்றுக்கு வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

✓ தொழில்நுட்ப உத்தியோகத்தர்

HNDE / NCT (Civil) ஐந்து வருட அனுபவம்.
EXCEL, AUTO CAD தேர்ச்சியுள்ளவர்கள்.

✓ கனரக வாகன சாரதி

கனரக வாகனம். உழவு இயந்திரம் ஆகியன செலுத்தக் கூடிய 5வருட அனுபவமுடைய மதுப்பழக்கமற்றவர்கள்

077 347 8251

அகவை எண்பது
அமுத பயணத்தை மனமுவந்து
வாழ்த்துகின்றோம்
(07.08.2017)



திரு.வே.வ. கோபாலசிங்கம்
திருமதி.கோ.சந்திரவதி

கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய வாழ் நாள் போசகரும் சமூக சீர்திருத்த சிந்தனையாளருமான **திரு.வே.வ. கோபாலசிங்கம்** அவர்களின் **எண்பதாவது பிறந்த தினத் தையும் திருமண பந்தத்தில் இணைந்து ஐம்பதாவது ஆண்டுகளை நிறைவு செய்து 51 இல் கால்பதிக்கும்** எம் அன்புப் பெற்றோரை இன்னும் பல ஆண்டுகள் வாழ பெருமிதத்துடனும் பேருவகை கொண்டும் மனமார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**பிள்ளைகள்:** லோ.நளினி, கோ.தயாளன், கு.றாஜினி, கோ.குணாளன்
**மருமக்கள்:** இ. துரைராஜசிங்கம், அ.குமாரகாசன், த.சுசிகலா, கு. யாழினி, சு. சதீஸ்குமார்.
**பேரப்பிள்ளைகள்:** ச.லோகினி, த.செந்தாளன், கு. பவிஷ்ணா, கு.ருத்வித், கு. பிரதீப், கு.ருதீப்

முதலாம் ஆண்டு சேவை நிறைவில்
றோயல் மெடிக்கல் சென்ரர்
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

றோயல் வைத்திய ஆலோசனைகள் ...

- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்



தொடர்புகளுக்கு...
021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது அதிருப்தியில் இந்தியா

கொழும்பு, ஓக. 7

அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தைச் சீனாவுக்கு வழங்கியமை தொடர்பில் இந்தியா கடும் அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகின்றது.

இதனால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களின் தீவிர தன்மையை உணர்ந்து கொண்ட இந்திய மத்திய அரசு, பாரதிய ஜனதாக் கட்சியின் தேசியத் தலைவர்களில் ஒருவரைக் கொழும்புக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்த குறித்த பிரமுகர் இந்தியத் தலைமை அமைச்சரின் செய்தியை அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதனால் இலங்கை அரசு குழப்பம் அடைந்துள்ளதாகவும், இந்தியாவைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் அது ஈடுபட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டத்தினால் பூகோள அரசியலில் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இந்தியா இலங்கை அரசுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது.

அத்துடன், இலங்கையில் மீண்டும் சீனா வலுவாக உருவெடுத்து வருவதை அவதானித்த அமெரிக்கா இலங்கை அமைச்சர்கள் சிலரைச் சந்தித்து தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தது. தற்போது சீனாவுடன் அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் சீன இராணுவ நடவடிக்கைகளுக்கான தடைகள் எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது. குறித்த ஒப்பந்தம் மூலம் சீருடைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனப் பாதுகாப்புப் படைகள் சீருடையில் செயற்படாவிட்டாலும் சிவில் உடையில் வந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், இலங்கை மீண்டும் சீன ஆதரவுக்குள் செல்வதில் இந்தியாவுக்குள்ள அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையிலேயே, இந்திய மத்திய அரசு, பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர்களில் ஒருவரைக் கொழும்புக்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. (கு)

# சிங்கப்பூரில் சதித் திட்டம்

## விசாரணை கோருகிறார் மகிந்த



கொழும்பு, ஓக. 7

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனுக்குச் சொந்தமான சிங்கப்பூரிலுள்ள வீட்டில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாகவும் அது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் எனவும் முன்னாள் அரச தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த அரச தலைவர் தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின்போதும் சிங்கப்பூரில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தங்கல்லையில் அமைந்துள்ள கார்ல்டன் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரில் பணப்பரிமாற்றங்கள் இடம்பெற்றதாக பலர் கூறுகிறார்கள். அது இரகசியமான ஒன்றல்ல. அரச தலைவர் தேர்தலின்போது அமைச்சர்கள் சிலர் ஏன் சிங்கப்பூருக்குச் சென்றார்கள்? அவர்கள் அங்கு சென்று திரும்பும்போது கொண்டு வந்த பொதிகளில் என்ன இருந்தது எனப் பலர் கேள்வி எழுப்புகிறார்கள். மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழு விசாரணை நடத்துவதால் இன்று நாட்டு மக்களுக்கு சிற்சில விடயங்கள் தெரியவருகின்றன. அதேபோல சிங்கப்பூரில் இடம்பெற்ற சதித்திட்டம் தொடர்பிலும் விசாரணை நடத்தவேண்டும்-என்றார். (கு)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சொக்கலிங்கம் (சொக்கன்)



கஞுவாக்கட்டை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சொக்கலிங்கம் (சொக்கன்) 03.08.2017 பிரான்ஸில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2017) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றையதினம் அஞ்சலி நிகழ்வு பிற்பகல் ஒரு மணியளவில் கொல்லங்கலட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றகொள்ளவும்.

**கஞுவாக்கட்டை,**
**கொல்லங்கலட்டி.**

தகவல் :
**திருமதி லீலாதேவி (பாப்பா) சிவசுப்பிரமணியம்.**

### திருமதி திலகவதி கிருபைராஜா



பிறப்பு 01.10.1950 இறப்பு 06.08.2017

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி கிருபைராஜா நேற்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருபைராஜாவின் பாசமிகு மனைவியும், உமாப்பிரியனின் (HNB உதவி முகாமையாளர் - திருக்கோயில்) பாசமிகு தாயாரும், டிலானியின் (ஆசிரியர் - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) பாசமிகு மாமியாரும், தியா ஹெமான்சியின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முதலி கோயில் வீதி,**
**கொக்குவில்.**

தகவல் :
**உமாப்பிரியன் (மகன்)**

### திருமதி மகேஸ்வரிதேவி நடராஜா
(வெள்ளாந்தெரு ராசாத்தி)



தோற்றம் 10.02.1929 மறைவு 01.08.2017

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரிதேவி நடராஜா 01.08.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், கௌரிதேவி (பிரான்ஸ்), சாந்தகௌரி (இலங்கை), ஸ்ரீ கௌரிதாசன்(சிட்னி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வரதராஜா(பிரான்ஸ்), சிவபாலன் (இலங்கை), ரஜனி(சிட்னி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷர்மினி (பிரான்ஸ்), ஹரிசா, அலெக்ஸ் (பிரான்ஸ்), கோபிநாத் - காயத்திரி (சிங்கப்பூர்), ரிஸானி(சிட்னி), அனிஸ்சன்(சிட்னி) ஆகியோரின் பாசமிகு பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2017) திங்கட்கிழமை ஆஸ்திரேலியா சிட்னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**122, 2ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 9583**

தகவல்:
**சிவபாலன் (மருமகன்)**
**சாந்தகௌரி (மகள்)**
**கோபிநாத் (பேரன்)**


# யானைச் சின்னத்தில் முற்போக்குக் கூட்டணி

## கை சின்னத்தில் இ.தொ.கா.

கொழும்பு, ஓக 7

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடனும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சுதந்திரக் கட்சியுடனும் கூட்டணி அமைத்தே களம் காணவுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கலப்பு முறையில் டிசெம்பர் முதல் வாரத்தில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ள அரசு, அதற்கான சட்டத் திருத்தத்தையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. அது விரைவில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், தேர்தல் திகதி அறிவிப்புக்கு முன்பிருந்தே பிரதான அரசியல் கட்சிகளும், சிறுகட்சிகளும் தேர்தலை எதிர்கொள்வதற்குரிய ஆயத்தப்படுத்தல் பணியில் இறங்கியுள்ளன.

இதன்படி பிரதான கட்சிகளான ஐ.தே.கவும், சு.கவும் வேட்பாளர் தேர்வை நடத்தி வருகின்றன. சு.கவின் வேட்பாளர் தேர்வு கடந்த வாரத்துடன் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக அந்தக் கட்சி அறிவித்திருந்தது. அதேபோல் ஐ.தே.கவும் இரகசியமான முறையில் தேர்தல் தொடர்பில் காய்நகர்த்தலை மேற்கொண்டு வருகின்றது.

முதன்மைக் கட்சிகள் தேர்தலுக்கு மும்முரமாக தயாராகிவரும் சூழலில் மலையகத்திலும் கட்சிகள் எந்தக் கட்சியுடன் கூட்டணி சேர்வது, எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பன குறித்து தீர்க்கமாகப் பேச்சுக்களை நடத்திவருகின்றன. மலையகத்தின் இரண்டு முதன்மைத் தரப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், தமிழ் முற்போக்குக் கூட்டணியும் போட்டியும் சின்னமும் குறித்து ஏறக்குறைய தீர்மானித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்தமட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் அங்கு சேவல் சின்னத்தில் போட்டியிட எண்ணியிருந்தாலும், கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை உள்ளிட்ட மாவட்டங்களில் மலையகத் தமிழர்கள் பெரும்பான்மை இனத்துடன் ஒன்றிணைந்து வாழ்ந்துவருவதால் நல்லிணக்கச் சூழலைக் கருதி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடக்கூடிய வாய்ப்பே அதிகமாக உள்ளதாக கட்சியின் வட்டாரங்களில் அறியமுடிகிறது.

இதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணியில் மூன்று முதன்மைக் கட்சிகள் அங்கம் வகிப்பதால் தனியொரு சின்னத்தில் போட்டியிட முடியாத சூழல் காணப்படுவதாலும், உள்ளூராட்சித் தேர்தலில் பெரும்பான்மை வாக்குப்பலத்தை நிரூபிக்க வேண்டியுள்ளதாலும் யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

சுதந்திரக் கட்சி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கை சின்னத்திலேயே போட்டியிடும் என கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கூட்டு எதிரணி, ஜே.வி.பி. உள்ளிட்ட கட்சிகளும் தேர்தல் பக்கம் தமது கவனத்தைத் திருப்பியுள்ளன. (கு)

# படகுகளை மீட்க இலங்கை வருகிறது தமிழக தூதுக் குழு

இலங்கை அரசாங்கத்தால் விடுவிக்கப்படவுள்ள படகுகளை மீட்க தமிழகத்திலிருந்து குழுவொன்று கொழும்பு வரவுள்ளதாகத் தமிழக மீன்வளம் மற்றும் நிதித்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 139 படகுகளில் 39 படகுகளை விடுவிக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அவற்றை மீட்கக் குறித்த குழு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் டி.ஜெயக்குமார் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களைச் சந்தித்து அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கிய போது அவர் இதனைக் கூறினார்.

மேலும் ஆழ் கடல் மீன்பிடித் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மத்திய, மாநில அரசுகள் நீலப்புரட்சி என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கு முதல் கட்டமாக மத்திய அரசு 500 கோடி இந்திய ரூபாக்களை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், அடுத்து வரும் 3 முதல் 6 மாதங்களுக்குள் படகுகள் இந்த ஆழ்கடல் படகுகளைக் கட்டும் திட்டம் நிறைவு செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லா தீர்மானத்தினால் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு

## ஆளுந்தரப்பும், மகிந்த அணியும் தீவிர ஆலோசனை
## அமைச்சர் ரவி பதவி துறக்கும் சாத்தியம்

கொழும்பு, ஓக.7
அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்காக மகிந்த அணி உறுப்பினர்கள் நாளை கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர்.
அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி,சுதந்திரக் கட்சி ஆகியனவும் சிறப்புச் சந்திப்புகளை ஒழுங்குசெய்துள்ளன. இதனால் கொழும்பு அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
பிணைமுறி விவகாரம், அர்ஜன் அலோசியஸின் நிறுவனத்தின் ஊடாக சொகுசு வீடு கொள்வனவு செய்தமை உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி மகிந்த அணி முன்னாள் நிதி அமைச்சராக இருந்த தற்போதைய அயலுறவு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ளது.இதற்கு ஆதரவளிக்கப்படுமென ஜே.வி.பி. ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், தாமும் ஆதரவளிக்கப்போவதாக சுதந்திரக் கட்சியிலுள்ள மைத்திரி சார்பான உறுப்பினர்களும் அறிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதை ஆதரிக்கும் முடிவில் இருக்கின்றனர்.
இவ்வாறு ரவிக்கு எதிர்ப்பு வலுத்துவருவதால் அவரைப் பதவி விலகுமாறு அரச தலைவர் கோரியுள்ளார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அது வெற்றிபெறும் பட்சத்தில் அரசுக்கு நெருக்கடி ஏற்படும் என்பதாலேயே பதவி விலகுமாறு கோரப்பட்டுள்ளது.
இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி ஆராய்வதற்காக மகிந்த அணி நாளை காலை கொழும்பில் கூடவுள்ளது.
நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் முதல்நாள் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும். திங்கட்கிழமை பௌர்ணமி விடுமுறையென்பதால் அது செவ்வாய்க்கிழமையே நடைபெறவுள்ளது.
ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் இது பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது.
இதற்கிடையில் செவ்வாய்க்கிழமை காலை கட்சித் தலைவர்கள் கூட்டமும் நடைபெறவுள்ளது.
இதன்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விரைவில் விவாதத்துக்கு எடுக்குமாறு மகிந்த அணி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
விவாதத்துக்கு எடுத்து வாக்கெடுப்புக்கு விடுக்கப்படும் தினம் நாளைய தினம் தீர்மானிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
எனினும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுப்பதற்குள் அயலுறவு அமைச்சர் தமது பதவியை விசாரணை முடிந்து தீர்ப்பு வரும்வரை துறக்கவுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (த)



## ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வந்த பின்னரே ரவி மீது வழக்கு

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 7
பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும்அரசதலைவர் ஆணைக் குழு பரிந்துரைகளை முன்வைத்த பின்னரே அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக வழக்கு தொடரமுடியும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்தும், குற்றச்சாட்டுகள் சம்பந்தமாகவும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேற்படி குற்றச்சாட்டுகளைப் பற்றி அரச தலைவர் ஆணைக்குழு விசாரணைகளை நடத்திவருகின்றது. அந்த ஆணைக் குழுவுக்கு நீதிமன்ற அதிகாரம் இல்லை. விசாரணைகளின் பின்னர் பரிந்துரைகளையே முன்வைக்கமுடியும்.
அந்த பரிந்துரைகள் வெளியான பின்னரே வழக்கு தொடர்வதாயின் தொடுக்கவேண்டும். கடந்த அரசின்போது சட்டம் தனது கடமையை உரியவகையில் செய்யவில்லை. ஆனால், சட்டத்துறையானது இன்று வீறுநடைபோடுகின்றது.
அரச தலைவர், தலைமை அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் அது செயற்படவில்லை. அரசமைப்பின் பிரகாரமே நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன-என்றார். (த)

## அம்பாந்தோட்டையில் பெரும் கடற்படைத் தளம்

கொழும்பு, ஓக. 7
காலி மற்றும் தங்காலையில் அமைந்துள்ள இலங்கைக் கடற்படைத் தளங்கள் அம்பாந்தோட்டைக்கு மாற்றப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தத்தின் படி, இராணுவத் தேவைகளுக்காக எந்தவொரு நாடும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பயன்படுத்தமுடியாது. அதன் முழுமையான பாதுகாப்பையும் இலங்கை கையாளும் என்று கூறப்பட்டுள்ளது.
இந்த நிலையிலேயே அம்பாந்தோட்டையில் இலங்கைக் கடற்படை பெரிய தளமொன்றை அமைக்கவுள்ளது.
இதற்காகவே தற்போது தங்காலையில் உள்ள இலங்கைக் கடற்படையின் தென்பிராந்திய தலைமையகம் மற்றும் காலியிலுள்ள கடற்படைத் தளம் என்பன அகற்றப்பட்டு அவை அம்பாந்தோட்டையில் ஒருங்கிணைக்கப்படவுள்ளன.
இதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிரிஸ்ஸவிலுள்ள கடலோரக் காவல்படைத் தளம் மேலும் பலப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## அவசர இடர் நிலைமையை பிரகடனப்படுத்த கோரிக்கை

கொழும்பு, ஓக. 7
நாட்டை வறட்சி வாட்டி வதைக்கும் நிலையில், அவசர இடர் நிலையைப் பிரகடனப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.
நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி சங்கத்தின் ஏற்பாட்டாளரும் மாகாண சபை உறுப்பினருமான நாமல் கருணாரத்ன மேற்கண்ட கோரிக்கையை அரச தலைவரிடம் விடுத்தார்.
""17 மாவட்டங்களில் வறட்சி நிலவுகின்றது. குளங்கள் வற்றிபோயுள்ளன. விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதிலேயே சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். எனவே, அவசர இடர் நிலைமையை பிரகடனப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்'' என்றார் அவர்.
அதேவேளை, இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மதியம் விடுத்த அறிக்கையின் பிரகாரம், வறட்சியால் 34 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 11 இலட்சத்து 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.(த)




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23
11
1942



மறைவு
17
08
2016

### திருமதி உரோகினி குருசாமி

*திதி : சதுர்த்தசி (06.08.2017).*



அன்புத் தந்த எங்கள் அன்னையே
உமைப் பிரிந்து ஆண்டொன்று மாண்டதம்மா
ஆறாத் துயருடனே நித்தம் அழுகின்றோம்
உமை உருக்கி எமை தந்த தெய்வமே
ஈராறு திங்கள் இருட்டாய் போனதம்மா
நீராறு கண்களில் நித்தம் ஓடுதம்மா
பூத்த புதுமலராய் மலர்ந்த உம் வதனம்
நித்தம் எம் இதயப் பூங்காவில் நினைவாய்
மலருதம்மா என்றும் நிலைக்குதம்மா
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கும்பளாவளை,
அளவெட்டி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் ரவிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்;

# மகிந்த அணிக்கு உரிமையில்லை



கொழும்பு, ஓக 7
அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் உரிமை மகிந்த அணிக்கு இல்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை மகிந்த அணி சபாநாயகரின் அலுவலகத்தில் கையளித்துள்ளது.

இது குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்ததாவது:

அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின்நடவடிக்கைகள் இன்னும் முடிவடையவில்லை. இன்னும் பலரிடம் விசாரணைகளை நடத்த வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறான நிலைமையில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த அணி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது தகவல்கள் வெளியாகக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வேறு பக்கம் திசை திருப்பும் முயற்சியோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல் மகிந்த அணிக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திடத் தார்மீக உரிமை உண்டா?

இதில் கையெழுத்திட்டுள்ள ரோஹித அபேகுணவர்தன, விமல் வீரவன்ச, காமினி லொக்குகே, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு எதிராகக் குற்றங்கள் சுமத்தப்பட்டு நீதி மன்றத்தில் வழக்குகளும் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் தற்போது காணப்படும் நிலைமையில் ரவி கருணாநாயக்க தனது பதவியை துறக்கவேண்டும் - என்றார். (த)

# அரசமைப்பு தாமதமானால் மக்கள் அதனை தோற்கடிப்பர்

## அடித்துக் கூறுகிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஓக 7
அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரிப்பதால் டிசெம்பர் மாதத்துக்கு முன் புதிய அரசமைப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். டிசெம்பரைத் தாண்டினால் அந்த அரசமைப்பு மக்களால் தோற்கடிக்கப்பட்டு விடும் -இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது மக்கள் விடுதலை முன்னணி.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்திடம் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் இடம்பெற்ற காலத்தில் பிரிவினைவாதம் இந்த நாட்டில் தலை விரித்தாடியது. இன்று நிலைமை வேறு. இனி நாம் பழைய நிலைமைக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லை.இன்றைய காலத்தின் தேவைக்கு ஏற்ப நாம் அரசியல் தீர்வை நோக்கிச் செல்ல வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாதொழிப்பது தொடர்பில் ஏற்படும் இழுபறி தான் புதிய அரசமைப்பு தாமதமாவதற்குக் காரணம். மைத்திரி அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டதே நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாதொழிப்பதற்காகத்தான். அந்த வாக்குறுதியை மக்களுக்கு வழங்கித் தான் அவர் தேர்தலில் வெற்றி பெற்றார். மக்கள் வழங்கிய அந்த ஆணையை அரச தலைவர் நிறைவேற்ற வேண்டும். அந்த ஆணைக்கு ஏற்ப செயற்படுமாறு அவருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய கடமை எமக்குண்டு. அதைத்தான் நாம் இப்போது செய்துகொண்டு இருக்கின்றோம்.

அவர் அரச தலைவரான புதிதில் இதுபற்றி அதிகம் பேசினார். இப்போது ஒரு வசனம் கூடப் பேசுவதில்லை. அவர் மக்கள் ஆணையை அவர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மறந்துவிட்டாரா என்ற கேள்வி எழுகின்றது. அரச தலைவரின் நிலைப்பாடுதான் தமது நிலைப்பாடு என்று வழி நடத்தல் குழுவுக்குச் சுதந்திரக் கட்சிப் பிரதிநிதிகள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினர்.

ஆனால்,நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை நீக்க முடியாது என்றும் பொது வாக்கெடுப்பை நடத்த முடியாது என்றும் இறுதியாக இடம்பெற்ற வழி நடத்தல் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா கூறினார். இதுதான் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்று அறிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாதொழிப்பதாக அரச தலைவர் தேர்தலின்போது மைத்திரி வாக்குறுதி வழங்கினாரே என்று அவரிடம் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியபோது, அது தனி மனிதனாக அவர் வழங்கிய வாக்குறுதி. இப்போது அவர் சுதந்திரக் கட்சியின் தலைவர். கட்சியின் தீர்மானத்தை அவர் ஏற்க வேண்டும் என்று நிமால் கூறினார். மைத்திரி என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார் என்று பார்ப்போம்.

இந்த அரசமைப்பை உடன் நிறைவேற்ற வேண்டும். வேறு விடயங்கள் தொடர்பில் அரசுக்கு எதிரான மக்கள் எதிரிப்பு அதிகரித்து வருவதால் அந்த எதிர்ப்பு அரசமைப்பைத் தோற்கடித்து விடும். டிசெம்பர் மாதத்தைத் தாண்டினால் மக்கள் எதிர்ப்பு மேலும் அதிகரிக்கும். அதன் பின் அரசமைப்பை நிறைவேற்ற முடியாமல் போகும் - என்றார். (த-3)



# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் இல்லை

## மைத்திரிபால கவலை

கொழும்பு, ஓக 7
இலங்கை விவசாய நாடு என்ற போதும் விவசாயப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கடந்த காலத்தில் முன்னுரிமை அளிக்கப்படாததால் விவசாய சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கவில்லை.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மதவாச்சியில் 'பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க' புதிய பொருளாதார மத்திய நிலையத்தைப் பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அரச தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறுமை, குறைந்த வருமானம், நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமை போன்ற விடயங்களால் நாட்டின் விவசாயச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் விவசாயத்துறைக்குத் தேவையான பல்வேறு வசதிகளை வழங்கவும் தற்போதைய அரசு பல திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் புதிய தலைமுறை விவசாயத்துறையில் முன்னேறுவதற்குத் தேவையான சூழலை அமைத்துக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்திற்குத் தேவையாக இருப்பது சுய சக்தியில் கட்டியெழுப்பப்பட்ட வாழ்க்கை முறையும் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட திட்டங்களுமாகும் - என்றார். (த)

# அரச பணியாளரின் ஹஜ் விடுமுறை குறித்து முதலமைச்சர் அவதானம்



அம்பாறை, ஓக.07
கிழக்கு மாகாண ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் யாத்திரைக்குச் செல்வதில் விடுமுறை பெறுவது தொடர்பில் காணப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநருடன் இடம்பெற்ற பிரத்தியேக சந்திப்பின் போதே பல சாதகமான தீர்மானங்கள் குறித்து முதலமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் மற்றும் மற்றும் உத்தியோகத்தர்கள் ஹஜ்கடமையை பூர்த்தி செய்வதில் சில சிக்கல்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் தமது ஐம்பெருங்கடமைகளுள் ஒன்றான ஹஜ்கடமையை நிறைவேற்றவதற்கான விடுமுறையை பெற்றுக் கொள்வதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் முதலமைச்சரிடம் முறையிட்டிருந்தனர்.

இதற்கமைவாகவே கிழக்கு முதலமைச்சர் ஆளுநரிடம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது சாதகமாக தீர்மானங்கள் எட்டபட்டுள்ளன.

எதிர்வரும் தினங்களுள் இது தொடர்பான இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளது. (ய)

# அபிவிருத்தி உத்தியோகத்தராக வேலையற்ற பட்டதாரிகள்

கொழும்பு, ஓக.07
அரசு நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை மாவட்ட அடிப்படையில் பயிற்சியளித்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு அதற்கான விண்ணப்பங்களை தற்போது கோரியுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 8ஆம் திகதியென குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசதுறையில் அல்லது தனியார் துறையில் இதுவரை ஏதேனும் சேவையில் (தொழில்) இணைந்திராத பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 21 - 35 வரை வயதுள்ள ஆண், பெண் இருபாலாரும் தீவில் எந்தப் பகுதியிலும் பணியாற்றக் கூடியதாக உள்ள பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவாகும் பட்டதாரிகளுக்கு ஒரு வருட பயிற்சி வழங்கப்படும். பயிற்சி நடைபெறும் கால கட்டங்களில் மாதமொன்றுக்கு 20,000 ரூபா மட்டும் கொடுப்பனவாக வழங்கப்படும் என அமைச்சின் செயலார் அறிவித்துள்ளார். (ய)

# இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள காணியை விடுவிக்குமாறு கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக.07
மட்டக்களப்பு - பாலையடிவட்டைக் கிராமத்திலுள்ள பொதுச்சந்தைக்குரிய காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்தேசியச் கூட்டமைப்பின் தற்போதைய கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

பாலையடிவட்டைப் பகுதியின் நெல்லிக்காடு முன்பள்ளி சிறார்களின் உடல் திறன் விளையாட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாலையடிவட்டை பொதுச்சந்தையை கடந்த 30 வருட காலமாக இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளார்கள்.

வடக்கு- கிழக்கில் அங்காங்கே காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் பாலையடிவட்டை பொதுச் சந்தைக்குரிய காணியை இதுவரையில் இராணுவத்தினர் விடுவிக்கவில்லை.

மண்டூரில் சுமார் 30 வருட காலமாக நிலை கொண்டிருந்த பொலிசார் அண்மையில் அதனை விடுவித்தார்கள். வெல்லாவெளியில் ஒதுக்கப்பட்ட இடத்திற்கு மாறிவிட்டார்கள்.

இந்நிலையில், பாலையடிவட்டை பொதுச் சந்தைக்குரிய காணியை ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவத்தினர் அக்காணியை விடுவிக்க வேண்டும் - என்றார். (ய-46)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முறையான வள ஆய்வு செய்யாது ஆரம்பமான உமா ஓயாத் திட்டம்

## மகிந்த அரசை சாடுகிறார் அரச தலைவர் மைத்திரி



கொழும்பு, ஓக 7

முறையான எவ்வித சாத்திய வள ஆய்வு அறிக்கையின்றியும் சூழலியல் தாக்கங்கள் குறித்த மதிப்பாய்வை மேற்கொள்ளாமலும் முன்னைய அரசு உமாஓயா அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்திருந்ததாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.

உமா ஓயாத் திட்டம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட நோர்வே நிபுணர்கள் குழு தமது இடைக்கால அறிக்கையை அரச தலைவர் மைத்திரிபாலவிடம் சமர்ப்பித்துள்ளது.

அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்தத் திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே தவறுகள் இடம்பெற்றுவந்துள்ளன. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு எதிர்காலத்தில் எவ்விதப் பிரச்சினைகளும் ஏற்படாது என்ற உறுதிப்பாட்டுடனேயே இதற்குத் தீர்வை வழங்க நாம் முயற்சித்து வருகிறோம்" என்றார் அரச தலைவர்.

சுரங்கப் பாதையில் நீர்க் கசிவு இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகளை ஆரம்ப கட்ட ஆய்வுகள் முன்மதிப்பீடு செய்யவில்லை எனத் தெரிவித்த நிபுணர் குழு, திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் சுரங்கச் சுவர்களைப் பலப்படுத்தி பலமான மூலப்பொருள்களைக் கொண்டு முத்திரையிடுவதற்கான இயலுமையைக் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது. சுரங்கச் சுவர்களில் அகழ்வுப் பணி பொருத்தமான இயந்திரங்களைக் கொண்டே மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இடைவெளிகளை நிரப்புவதற்காகச் சாந்து பூசுகின்றபோது எதிர்காலத்தில் எவ்வித நீர்க் கசிவும் இடம்பெறாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று நிபுணர் குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

சுரங்கத்தில் அள வில் நீர் உட்புகுவதை எதிர்கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் தயாராக இருக்கவில்லை. சுரங்கத்தின் எஞ்சிய நான் ரை கிலோ மீற்றர் பகுதிப் பணிகளை மேற்கொள்ள முன் னர் சிறப்பான சாந்து மூலப்பொருள்களையும் இயந் ளையும் பெற்றுக்கொள்வது அவசியமாகும் என் நி ணர் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

"ஒரு சிறந்த முழுமையான ஆரம்ப கட்ட ஆய்வு செய்யப்பட்டிரு குமானால் சுரங்கத்தில் நீர் உட்புகுவதை தவிர்த்திருக்க முடியும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்" எனவும் அரச தலைவர் இதன்போது குறிப்பிட்டார்.

நீர்க் கசிவை எப்படி முழுமையாக நிறுத்த முடியும் என்பது பற்றியும் முன்னைய அறிக்கைகளில் நீர்க் கசிவு கவனத்திற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் குறித்தும் ஒரு முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரச தலைவர் நிபுணர்களிடம் கோரியுள்ளார்.

எதிர்காலத்தில் இத்தகைய தவறுகளைத் தவிர்ப்பதற்கு உமா ஓயாத் திட்டத்தின் பிரச்சினைகள் பாடமாகும் எனத் தெரிவித்த அரசதலைவர், மத்திய மாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 22 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப் பணிகளுக்கு நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். (த)



# சந்திர கிரகணம் இன்று

கொழும்பு, ஓக 7

இன்று திங்கட்கிழமை இரவு அரைகுறைச் சந்திர கிரகணம் ஏற்படவுள்ளதாகவும் இதனை இலங்கையர்கள் காணும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞானப் பிரிவின் வானியல் விஞ்ஞானப் பிரிவுப் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த சந்திர கிரகணம் இன்று இரவு 9.20 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை 2.21 மணி வரை நீடிக்கும். இரவு 10.53 மணியளவில் கிரகணத்தைத் தெளிவாக வானில் காணமுடியும். இதன்போது சந்திரனின் 25 வீதப் பகுதியை பூமியின் நிழல் மறைக்கும். இதனை 11.51 மணியளவில் மிகவும் தெளிவாகக் காணமுடியும். இந்தச் சந்திர கிரகணம் இலங்கை உட்பட ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள், ஆஸ்திரேலியா ஆகியவற்றில் காணமுடியும்.

அடுத்த சந்திர கிரகணம் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 31 மற்றும் ஜீலை 27 ஆம் திகதிகளில் ஏற்படும் - என்றார். (த)

# ரவிக்கு எதிரான விவாதத்தை மிகவிரைவாக நடத்தவேண்டும்

## சபாநாயகரிடம் கோருகிறார் விமல்



கொழும்பு, ஓக 7

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தை விரைவில் நடத்துவதற்காக இன்னும் ஓரிரு தினங்களில் திகதியை ஒதுக்கித் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் இன்று நல்லாட்சி என்று திருட்டு ஆட்சியை நம்பி ஏமாந்து விட்டனர். மத்திய வங்கி மோசடியும் அந்த மோசடிக்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க துணை போனவிதமும் தான் இன்றைய அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

மத்திய வங்கிப் பிணை முறியின் ஊடாகக் கோடிக்கணக்கில் மோசடியாகப் பணம் சம்பாதித்த பேர்பச்சுவல் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன ஆலோசியஸ் அந்த மோசடிக்கு உதவிய அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு 1,650 லட்சம் ரூபா பணம் கொடுத்தமையும் வெளியாகியுள்ளது. இதை வைத்துப் பார்க்கும்போது அர்ஜுன ஆலோசியஸுக்கு ஆதரவாகப் பேசிய அனைவருக்கும் பணம் கொடுத்திருப்பார் என்று தெரிகிறது. இதைத் தேடிப் பார்க்கவேண்டும்.

ஆனால், ஆலோசியஸ் தனக்கு வீடு வழங்கியமை தனக்குத் தெரியாது என்றும் மனைவிக்குத்தான் அது கொடுக்கப்பட்டது என்றும் ரவி சிறு குழந்தை போல் கூறுகின்றார்.

இந்த மோசடியில் ரவிக்கு மாத்திரம் பங்கில்லை. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அவரது நண்பரான அமைச்சர் மலிக் சமரவிக்ரமவுக்கும் தொடர்பு உண்டு. எல்லோரும் இணைந்துதான் இந்தப் பிணை முறி செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றனர்.

இந்த விவகாரத்தில் நண்பர்களால் தான் தாக்கப்படுவதுதான் கவலையாக இருக்கிறது என்று ரவி கூறியுள்ளார். அந்த நண்பர்கள் யார்? ரணிலா அல்லது மலிக்கா? இவர்கள் எல்லோரும் சேர்ந்து நடத்திய கூத்துத்தான் இது. நாட்டின் வருமானத்திலேயே விளையாடிவிட்டனர்.

மக்கள் இதற்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராடவேண்டும். இந்த அநியாயத்தை நாம் மக்களுக்குச் சொல்லவேண்டும். ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தை விரைவில் நடத்துவதற்காக இன்னும் ஓரிரு தினங்களில் திகதியை ஒதுக்கித் தருமாறு நாம் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (த-3)

# அணைக்கட்டை அமைக்க ஏற்பாடு

மட்டக்களப்பு,

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விவசாயிகளின் நன்மை கருதி அவர்களது நீண்டகால வேண்டுகோளாக இருந்து வந்த கிரான்புல்சேனை அணைக்கட்டை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவிடயமான கலந்துரையாடலும் கள விஜயமும் சனிக்கிழமை 05.08.2017 கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கத்தின் தலைமையில் செங்கலடி உறுகாமம் பெரு நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. (ய-46)

# இதய அறுவைச் சிகிச்சை மருந்து விலை குறைப்பு

கொழும்பு, ஓக 7

இதய அறுவைச் சிகிச்சைக்கான மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புக்கு அமைய இந்த விலை குறைப்பு முதல் செயற்பாட்டுக்கு வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதய அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் உலோக ஸ்டென்ட்கள் மற்றும் அது கரைவதற்கான மருந்து வகைகளுக்காகவே இந்தக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பரிமெற்றல் ஸ்டென்டின் விலையானது 75 ஆயிரம் ரூபாவில் இருந்து 24 ஆயிரம் ரூபாவுக்கும் டிரக் இலுதின் ஸ்டென்டின் விலை 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# இந்திய முதலீட்டாளருக்கு மத்தள வானூர்தி நிலையம்

## குத்தகைக்கு வழக்கப் பேச்சுக்கள்

மத்தள வானூர்தி நிலையத்தை இந்திய முதலீட்டாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்குவதற்காகத் தற்போது பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகப் போக்குவரத்து மற்றும் வானூர்தி சேவைகள் பிரதியமைச்சர் அசோகா அபேசிங்க தெரிவித்தார். இந்திய முதலீட்டாளர் மற்றும் அரசுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் மிகவும் வெற்றிகரமானதாக அமைந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்தள வானூர்தி நிலையத்தில் இருந்து மாதாந்தம் 40 லட்சம் ரூபாவே வருமானமாகக் கிடைக்கின்றது. ஆனால் செலவு 250 லட்சம் ரூபா. தினமும் மூன்று விமானங்களே மத்தள வானூர்தி நிலையத்திற்கு வருகின்றன.

கடனைச் செலுத்த மாதாந்தம் 3 ஆயிரம் லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. வருடாந்தம் 360 கோடி ரூபா என்ற கணக்கில் 8 வருடங்களுக்கு இலங்கை கடனைச் செலுத்தவேண்டியுள்ளது. மத்தளவானூர்தி நிலையத்தை நிர்மாணிக்க ராஜபக்ச அரசு 4 ஆயிரம் கோடி ரூபாவை செலவிட்டுள்ளது. அரசினால் இந்தக் கடனை தொடர்ந்தும் சுமக்க முடியாது. இதனால், அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் போல் மத்தள விமான நிலையத்தையும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடகொரியாவின் அச்சுறுத்தலை தற்போது உணர்

### கிழக்கு ஆசிய விவகாரங்களுக்கான அமெ. துணைச் செயலாளர்


“வடகொரியா தனது அணுவாயுத சோதனைகள் மூலம் உலக அளவில் அச்சுறுத்தும் நாடாக வளர்ந்து வருவதை சீனா உணர்ந்துவிட்டது” என அமெரிக்க வெளியுறவுத்துறையின் கிழக்கு ஆசிய மற்றும் பசிபிக் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் சூசன் தார்ன்டன் தெரிவித்தார். அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது - “வடகொரியாவின் 90 சதவிகித பொருளாதாரம் சீனாவை நம்பியே உள்ளதால் மற்ற நாடுகளை விட வடகொரியா மீது சீனாவிற்கு அதிக அதிகாரம் உள்ளது. சீனா நினைத்தால் வடகொரியாவிற்கு அதிக அழுத்தம் கொடுத்து அந்த நாடு நடத்திவரும் அணுஆயுத சோதனைகளை தடுத்து நிறுத்தமுடி யும். இது தொடர்பாக சீனாவுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்திவருகிறது. வடகொரியாவின் நடவடிக்கைகளை சீனாகவனித்துவருகிறது. அதன்மூலம் சீனாவின் சொந்த பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருப்பதை சீனா உணர்ந்

## பிலிப்பைன்ஸில் நில நடுக்கம்

மணிலா, ஓக. 7
பிலிப்பைன்ஸ் நாட்டின் மின்டானாவோ தீவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.8 அலகுகளாகப் பதிவானது. இந்த நிலநடுக்கம் சில செக்கன்கள் மட்டுமே நீடித்தது என்றும், உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் குறிப்பிட்டன. பொருட்சேதம் தொடர்பில் எந்த உத்தியோகபூர்வத் தகவலும் வரவில்லை. முன்னதாக 1990ஆம் ஆண்டு ஏற் பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப்பி டத்தக்கது. (ம)

## வடகொரியா மீது கூடுதல் தடைகள்

வொஷிங்டன், ஓக. 7
வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபையால் மேலும் சில கூடுதல் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு விதிமுறைகளை மீறி வடகொரியா ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை மேற்கொண்டு வந்தது. இதற்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்ததுடன் பல தடைகளை விதித்தது. அமெரிக்கா தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஆகியன தனித்தனியாக பல தடைகளை விதித்தன. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை தற்போது கூடுதல் தடைகள் சிலவற்றை விதித்துள்ளது. முன்னதாக விதிக்கப் பட்ட தடையில் வடகொரியாவின் நிலக்கரி ஏற்றுமதியை முடக்கி யிருந்தது ஐ.நா. தற்போது மீன் ஏற்றுமதி முடக்கப்பட்டுள்ளது. (ம)



# இரண்டு வாரங்களுள் இந்தியா மீது தாக்குதல்

### சிக்கிம் விவகாரத்தில் சீனா எச்சரிக்கை

பீஜிங், ஓக. 7
சிக்கிம் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியச் சிப்பாய்களை திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியாவுக்கு சீனா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அவ்வாறு சிப்பாய்களை திரும்பப் பெறாவிட்டால் இரண்டு வாரத்துக்குள் தாக்குதல் நடத்துவோம் என்று சீன அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது.
இந்தியா - பூட்டான் சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம். இதனால் சிக்கிம் தமக்குத்தான் சொந்தம் என்று மூன்று நாடுகளும் வலியுறுத்துகின்றன. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது சீனா. இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது.
இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத சீனா, இந்திய இராணுவத்தின் இரண்டு பதுங்கு குழிகளை அகற்றிவிட்டு சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது.
இதையடுத்து ஏராளமான சிப்பாய்களை அங்கு குவித்தது இந்தியா. இதையடுத்தே இருநாடுகளுக்கும் இடையில் சிக்கிம் விவகாரத்தில் பதற்றம் தோற்றம் பெற்றது.
சிக்கிம் விவகாரத்தில் இந்தியா தனது சிப்பாய்களை திரும்பப் பெறவேண்டும் என்று சீனா பலதடவை வலியுறுத்தி வருகிறது. இந்த வரிசையில் அந்தநாட்டு இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் குவாகி யாங் நேற்றுமுன்தினமும் விடுத்துள்ள அறிக்கையில், ‘சிக்கிம் விவகாரம் தொடர்பான பிரச்சனை ஆரம்பித்த நாளில் இருந்தே நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்தியாவுடன் பேசி பிரச்சனையை தீர்த்துக் கொள்ள லாம் என்று நாங்கள் இருந்து வருகிறோம்.
இருநாடுகளுக்கும் இடையில் நிலவிவரும் பரஸ்பர உறவு மற்றும் பிராந்தி யத்தின் அமைதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு எங்கள் நாட்டு இராணுவமும் மிகவும் பொறுமையைக் கடைபிடித்து இந்த விவகாரத்தை அணுகி வருகிறது.
எனினும், நல்லெண்ணத்துக்கு என்று சில அடிப்படை சித்தாந்தங்கள் உள்ளன. அதேபோல், பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.
தாமதப்படுத்துவதன் மூலம் இவ்விவகாரத்தை நீர்த்துப் போக வைக்கும் மாயதந்திரத்தை இந்தியா கைவிட வேண்டும்.
நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பாக எங்கள் நாட்டுப் படைகள் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் ஆற்றல் ஆகியவற்றை வேறெந்த நாடும் குறைத்து மதிப்பிடக் கூடாது. நாட்டின் எல்லைப்பகுதியின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பை எங்கள் ராணுவம் தீர்மானமாக உறுதிப்படுத்தும்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## கிம் ஜோங்கின் செயற்பாடுகள் ஆசியாவுக்கே பெரும் ஆபத்து

### டுடேர்தே கடும் காட்டம்



டுடேர்தே

மணிலா, ஓக. 7
“வடகொரிய அதிபர் கிம்ஜோங் வெறிபிடித்தவர், அவரால் ஆசியாவுக்கே ஆபத்து” என்று தெரிவித்தார் பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே. கொரியத் தீபகற்பம் தொடர்பாக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே டுடேர்தே இவ்வாறு தெரிவித்தார்.
“வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் ஒரு வெறிபிடித்தவர். அவரின் அணுஆயுத சோதனைகள் ஆசியாவை அழிக்கப் போகின்றன. அழகான முகத்தையுடைய கிம் ஆபத்தான பொம்மைகளுடன் விளையாடி கொண்டிருக்கிறார். இந்த அணுசக்திப் பலப்பரீட்சைகள் முடிவுக்கு வர வேண்டும். ஏனென்றால் அணுசக்திப் பலப்பரீட்சையால் மண் வளங்கள் வீழ்ச்சியடையும். இதனால் நாம் எதையும் உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படும்” என டுடேர்தே மேலும் தெரிவித்தார். (ம)



கிம் ஜோங் உன்

## பெண்கள்
## அனுமதி வ



ரியாத், ஓக. 7
சவூதி அரேபியாவில் கட
விடுதிகளில் பெண்கள் நீ
கப்பட்டுள்ளது என்று ப
மான் அறிவித்தார்.
சவுதி அரேபிய அரசு நவ
முறைப்படுத்தியுள்ளது.
கப்பட்டுள்ளன. அதன்
மேம்படும் எனக் கருது
புதிய திட்டத்தின் கீழ் சவு
கரையில் அதிநவீன
மிகப் பெரியதாக அதிக
விடுதிகளின் திட்ட வ
யும், அனுமதிகளையு
சல்மான் நேற்றுமுன்தி
நட்சத்திர விடுதியில் பெ
அனுமதி வழங்கப்பட்ட
வில் ‘ஷியத்’ சட்டம் நடை
வெளிஉலகில் நடமாடு
மறைக்கும் வகையில்
இறுக்கமான கட்டுப்பா

## கனமழைய

பாங்கொக், ஓக. 5
தாய்லாந்தில் பெய்துவரு
ரிழந்துள்ள நிலையில், சுப
ரொயிட்டர்ஸ் செய்தி வெள
இந்த மழையின் காரண
ழுக்கு தாய்லாந்து மிகை
அந்தநாட்டு உள்துறை அ
மதிப்பில் சுமார் 4 ஆயிரத்

## பரிஸ் உடன்பா
## அமெரிக்காவுச்

வொஷிங்டன், ஓக. 7
பருவநிலை மாற்றத்தைத்
பநிலை உயர்வைக் கட்டுப்
பந்தத்தில் இருந்து அமெ
நிலையில், அந்த நாடு ப
வேண்டும் என்று ஐக்கிய நா
விடுத்தது.
பரிஸ் நகரில் கடந்த 2015
கொள்ளப்பட்ட இந்த ஒப்ப
வின் அப்போதைய அதிபர்
வையும் ஓர் நாடாக இணை
தற்போதைய அதிபரான ட்ர
தமக்கு அதிக செலவைத் த
வித்து ஒப்பந்தத்தில் இருந்
இந்த நிலையிலேயே அ
இணைய வேண்டும் என்
சபை அழைப்பு விடுத்துள்ள

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ...னர்ந்துள்ளது சீனா

### ...ளர் சூசன் தெரிவிப்பு

நடத் ... ளை ... இது ... ிக்கா ... . வட ... ளை ... மூலம் ... அச்சு ... னர்ந் துள்ளது என்பதற்கான அறிகுறிகள் தென்படுகிறது. கொரிய தீபகற்பத்தில் எந்த பிரச்சனைகளும் நிகழாமல் தடுப்பதையே அமெரிக்கா மற்றும் சீனா கொள்கையாக கொண்டுள் என. எனவே இந்த பிரச்சனையில் இருநாடுகளும் இணைந்து ஒருநல்ல தீர்வைக்காணவேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ...ர்நீச்சலுடைஅணிய ...வழங்கியது சவூதி!



...ில் கடற்...ரைக்கு அருகில் உள்ள நட்சத்திர ...கள் நீச்... உடை அணிய அனுமதி வழங் ...று பட்டத்து இளவரசர் முகமது பின் சல் ...

...சு நவீன பொருளாதாரத் திட்டத்தை நடை ...ளது. அதற்கான புதிய திட்டங்கள் அறிவிக் ...தன் மூலம் நாட்டின் பொருளாதார நிலை ...கருதுகிறது.

...ழ் சவுதி அரேபியாவில் செங்கடலின் கடற் ...ன சொகுசு விடுதிகள் கட்டப்படுகின்றன. ...அதிக பொருட் செலவில் கட்டப்படும் இந்த ... வரையறைகளையும், விதிமுறைகளை ...ளையும் பட்டத்து இளவரசர் முகமது பின் ...ன்தினம் வெளியிட்டார். இதில் கடற்கரை ...ல் பெண்கள் நீச்சல் உடை அணிவதற்குத் ...பட்டது. முஸ்லிம் நாடான சவுதி அரேபியா ...நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு ...மாடும் பெண்கள் உடல் முழுவதையும் ...யில் உடை அணிய வேண்டும் என்ற ...ப்பாடு ...ள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



ஈராக்கின் கிர்குக் நகரில் உள்ள பழம்பெரும் தேவாலயமான சால்டியன் தேவாலயம் தொல்பொருட் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. கிர்குக் நகரம் கடந்த சில மாதங்களுக்கு முன்புவரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்தது. கிறிஸ்தவர்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, தேவாலயத்தின் பல பாகங்களை உடைத்து அழித்துள்ளது. எனினும் எஞ்சியுள்ள பாகங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்று ஈராக் அரசு அறிவித்தது. (ம)

## 110 மில்லியன் ஆண்டுக்கு முற்பட்ட டைனோசர் எலும்புக்கூடு கனடாவில்



110 மில்லியன் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசரின் முழுமையான எலும்புக்கூடு கனடா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கனடா நாட்டின் அல்பர்ட்டா மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் பாறைகளுடன் இணைந்து நன்கு பதப்படுத்தப்பட்ட நிலையில் உயிரினம் ஒன்றின் எலும்புக்கூடு 2011ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதனை கனடாவில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்து அதன் உண்மையான உருவத்தை கண்டறியும் பணி நடைபெற்று வந்தது. இதன்படி அதன் மீதுள்ள பாறைகள் நீக்கப்பட்டு அதன் முழுமையான உருவம் பெறப்பட்டது. அது போரீலொபெல்டா இனத்தைச் சேர்ந்த டைனோசர் என்பது கண்டறியப்பட்டது. இதைக் கண்டுபிடிப்பதற்கு 7 ஆயிரம் மணிநேரம் ஆனதாக அருங்காட்சியகத்தின் தொழில்நுட்பக் கலைஞர்கள் தெரிவித்தனர். இந்த டைனோசர் இறந்த பொழுது ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 300 கிலோவும், 18 அடி நீளமும் உடையதாக இருந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## ரஷ்ய அதிபர் தேர்தல்; மீண்டும் புடின் போட்டி

மொஸ்கோ, ஓக. 7

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் விளாடிமிர் புடின் மீண்டும் போட்டியிட உள்ளார்.

ரஷ்ய அதிபர் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற உள்ளது. தற்போதைய அதிபர் விளாடிமிர் புடின் ஏற்கெனவே 3 முறை அதிபராக பதவி வகித்துள்ளார். அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில் தீ

> *புடின் ரஷ்யாவின் அதிபராக தொடர்ந்து வேண்டுமா வேண்டாமா என்று அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 80 சதவீத மக்கள் புடினுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.*

விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் அதிபர் விளாடிமிர் புடின் நேற்றுமுன்தினம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் உரையாடினார். அப்போது ஒருவர், மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று புடினை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த புடின், "உங்களின் விருப்பத்தை பரிசீலனை செய்கிறேன்" என்றார்.

இதுகுறித்து அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள், "அதிபர் தேர்தலில் புடின் போட்டியிடுவது உறுதி" என்று தெரிவித்தன. புடின் ரஷ் யாவின் அதிபராக தொடர்ந்து வேண்டுமா வேண்டாமா என்று அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 80 சதவீத மக்கள் புடினுக்கு ஆதரவாக வாக்களித்தனர். (ம)

## ...ழையால் தாய்லாந்தில் 4,500 கோடி இழப்பு

...வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் இதுவரை 23 பேர் உயி...ல், சுமார் 4 ஆயிரத்து 500 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ...வெளியிட்டது. தாய்லாந்தில் கடந்த ஒருமாத காலமாக பலத்த மழை பெய்துவருகிறது. ...ரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடகி...கையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர். என்று ...றை அமைச்சகம் தெரிவித்துள்ளது. வெள்ளத்தால் ஏற்பட்ட பொருட்சேதம் இலங்கை ...யிரத்து 500 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. (ம)



## ...பாட்டில் இணைய ...வுக்கு அழைப்பு



...தைத் தீர்மானிக்கும் (வெப் ...கட்டுப்படுத்தும்) பரிஸ் ஒப் ...அமெரிக்கா விலகியுள்ள ...டு மீண்டும் இணைய ...ிய நாடுகள் சபை அழைப்பு

...2015ஆம் ஆண்டு மேற் ...ஒப்பந்தத்தில் அமெரிக்கா ...அதிபர் ஒபாமா, அமெரிக்கா ...ணைத்திருந்தார்.

...ன ட்ரம்ப், பரிஸ் ஒப்பந்தம் ...வத் தருகிறது என்று தெரி ...இருந்து விலகினார்.

...ப அமெரிக்கா மீண்டும் ... என்று ஐக்கிய நாடுகள் ...துள்ளது. (ம)

> பரிஸ் நகரில் கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமா, அமெரிக்காவையும் ஓர் நாடாக இணைத்திருந்தார்.

## ஓ.பி.எஸ். மீது தாக்குதல் முயற்சி



சென்னை, ஓக. 7

தமிழக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை இலக்குவைத்து நபரொருவர் கத்தியால் தாக்க முற்பட்ட சம்பவம் நேற்றுப் பரபரப்பை ஏற்படுத்தியது. தனது ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக வானூர்தி மூலம் ஓ.பன்னீர்செல்வம் திருச்சிக்கு நேற்றுச் சென்றார். பன்னீர்செல் வத்தின் ரசிகர்கள் அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு வழங்கினர். கூட்டத்துக்குள் இருந்து நபரொருவர் பன்னீர்செல்வத்தை கத்தியால் குத்த முயன்றார். அவரின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது. பின்பு குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு அவரிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## அம்மாச்சி உணவகத்துக்கு ஏன் சிங்களப் பெயர்?

சிங்களக்குடியேற்றங்கள் – பௌத்தர்கள் இல்லாத பகுதிகளில் ஒரே இரவில் முளைக்கும் புத்தர் சிலைகள் போன்றவற்றின் பின்னாலுள்ள அரசியல், இலங்கையின் சிறுபான்மை சமூகத்தவர்கள் நன்கு அறிந்த விடயம்.

இவற்றோடு சிங்கள ஆட்சியாளர்கள் இன்னொரு வகை திணிப்பையும் மேற்கொள்ள முயன்றுவருகின்றனர்.

இதனை கடந்த வாரம் வடக்கு முதலமைச்சர் அம்பலப்படுத்தியிருந்தார்.

முதலமைச்சர் தெரிவித்திருந்த விடயம், சிங்களப் பெயர் திணிப்பு தொடர்பானது. வடக்கு மக்களின் கவனத்தை ஈர்க்கத்தொடங்கியுள்ள அம்மாச்சி உணவகம் தொடர்பானது.

வடக்கின் பலபகுதிகளில் தமிழ் மக்களின் பாரம்பரிய உணவுகளை மக்கள் மத்தியில் கொண்டுபோய் சேர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதே 'அம்மாச்சி' என்ற பெயர் கொண்ட உணவகம்.

இந்த உணவகங்களுக்கு சிங்களத்தில் பெயர் சூட்டுமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என வடமாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

அம்மாச்சி உணவகங்களை மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளுக்காக கொழும்பு அரசிடம் நிதியுதவி கோரியவேளையே இந்த நிபந்தனை விதிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உணவகங்களுக்கு சிங்களப் பெயர்தான் வைக்க வேண்டும் என நிதி தரும்போதே தெரிவித்திருந்தால் நாங்கள் இதனை ஆரம்பித்திருக்கமாட்டோம் என தனது அங்கலாய்ப்பை வெளியிட்டுள்ளார் முதல்வர், இது தமிழ் மக்களின் தனித்துவத்தை அழிப்பதற்கான முயற்சி எனவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

ஓர் உணவகத்துக்குப் பெயர் சூட்டுவதில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் வடக்கு குறித்து இலங்கையின் ஆட்சியாளர்கள் மத்தியில் காணப்படும் பெரிய இலக்கு என்னவென்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

வடக்கை பௌத்த சிங்களமயப்படுத்துவதே அவர்களின் முக்கிய நோக்கம். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட சூழலைப் பயன்படுத்தி மகிந்தராஜபக்ச அரசு முன்னெடுத்த பௌத்த சிங்களமயப்படுத்தலை கூட்டாட்சி அரசும் எந்தவித தயக்கமுமின்றித் தொடர்கின்றது.

வடக்கில் சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்துதல், பௌத்த விகாரைகளை அமைத்தல், சிங்களப் பெயர்களைச் சூட்டுதல் என கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழ் மக்களின் தனித்துவத்தை சிதைக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரிகின்ற நடவடிக்கைகள், கண்ணுக்குத் தென்படாத நடவடிக்கைகள் என அனைத்து வகையிலும் தமிழ் மக்களின் தனித்துவச் சிதைப்பு தீவிரம் பெற்றுள்ளது.

நல்லிணக்கம் பேசிக்கொண்டே தமிழினத்தின் அடையாளங்களை சிதைக்கும் முயற்சியில் இந்த அரசும் ஈடுபட்டு வருகிறது என்பதற்கான சிறு உதாரணமே அம்மாச்சி உணவகத்தின் பெயர் விவகாரம்.



# பெண்கள் மீது குடும்பச் சுமையை சுமத்திய போர் எனும் பேயாட்டம்

சக்திவேல்

இலங்கைத்தீவில் நடைபெற்ற ஆயுதப் போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தாலும், அது நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வைத்துள்ள ஆழமான வடுக்கள் என்றும் மறையாதவை.

பொருளாதார, உளவியல் மற்றும் சமூக ரீதியாக என்று பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலேயே போரால் விதவைகளாக்கப்பட்டவர்கள் இன்று வாழ்கின்றனர்.

போர், வன்முறை, அசாதாரண காரணங்கள், இயற்கை இடர்கள் என்பவற்றால் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பெண்கள் கணவன்மாரை இழந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுள்ளனர். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல!

குறித்த பிரிவுக்குள் அடங்கும் இந்தப் பெண்களின் இன்னல்களைத்துடைக்கும் நோக்கில், குடும்பங்களுக்கு தலைமை தாங்கும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது ஆற்றலை மேம்படுத்தல் தொடர்பாக தனியார் துறை, ஊடகம் மற்றும் சிவில் சமூகம், பாலினம் ஆகியவற்றின் ஊடாக அரசிடம் கோரிக்கைகளை முன்வைக்கும் வகையில், போர் இடம்பெற்ற பிரதேசங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் தள மேம்பாட்டுப் பயிற்சியாளராகச் செயற்பட்ட அனுபவம் கொண்ட ஆய்வாளராக ராதிகா ஹெட்டியாராச்சி திகழ்கிறார். ஆயிரக்கணக்கான விதவைப் பெண்களை நேரடியாக சந்தித்து அவர்களது பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவந்துள்ளார்.

### மலைக்க வைக்கும் விதவைகள் எண்ணிக்கை

போரால் 90ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர் என்று மகளிர் விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. கிழக்கில் சுமார் 49ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதுடன் வடக்கில் சுமார் 40ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். போர்ப் பாதிப்பால் விதவைகளாக்கப்பட்ட இந்தப் பெண்களில் 12ஆயிரம் பேர் 40 வயதை அண்மித்தவர்கள் என்பதும், 8ஆயிரம் பேருக்கு மூன்று வயது பிள்ளைகள் இருப்பதும் அரசின் கணக்கெடுப்பு மூலம் தெரியவந்துள்ளது. 90 ஆயிரம் விதவைப் பெண்கள் தமது விவரங்களை அரசிடம் பதிவு செய்திருக்கின்றனர். இதுதவிர பதிவு செய்யாத விதவைகளும் உள்ளனர்.

பெரும்பாலான சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், தற்போது உயர்கல்விக்கு வழியின்றித் தடுமாறுகின்றனர்.

### கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமை

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள 43 ஆயிரம் வரையான குடும்பங்களில் போர் காரணமாக விதவைகளாக்கப்பட்ட ஆயிரத்து 717 பேரும், போர் தவிர்ந்த காரணங்களால் 4 ஆயிரத்து 445 பேர் விதவைகளாகவும் காணப்படுகின்றனர் என மாவட்டச் செயலகப் புள்ளி விவ ரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கரைச்சிப்பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 951 விதவைகளும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 349 விதவைகளும் புநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 199 விதவைகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 218 விதவைகளும் காணப்படுகின்றனர். இதுதவிர, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி மற்றும் புநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் போர் தவிர்ந்த காரணங்களால் 4 ஆயிரத்து 455 விதவைகள் காணப்படுகின்றனர் என மாவட்ட செயலகப்புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு மாவட்டத்தின் புள்ளி விவரங்கள்

முல்லைத்தீவு மாவட்டம், மாற்றுத்திறனாளிகள், விதவைகள் மற்றும் போசாக்குக் குறைபாடு உள்ளவர்கள் அதிகமாக வாழும் மாவட்டம் என ஐக்கிய நாடுகள் சபை அடையாளம் கண்டுள்ளது. ஐக்கிய நாடுகள்சபை உலகவங்கியுடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட உள்ளது.

வடக்கு கிழக்கில் நடந்த போரில் வரை முல்லைத்தீவு மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டது என்பது வெளிப்படை போர் காரணமாக அதிகளவில் கொல்லப்பட்ட ஆண்களும் சிறுவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

குடும்ப தலைவராக ஆண் இல்லாமை, பெண்கள் குடும்பத்திற்கு தலைமை தாங்கிச் செயற்பட்டு வருவது, வாழ்வாதாரப் பிரச்சினை என்பவை காரணமாக முல்லைத்தீவு மக்கள் பெரும் வறுமைநிலையை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் காரணமாகவே அங்கு போசாக்கின்மையும் அதிகரித்துள்ளதாக தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

குடும்ப தலைவராக ஆண் இல்லாமை, பெண்கள் குடும்பத்திற்கு தலைமை தாங்கிச்செயற்பட்டுவருவது, வாழ்வாதாரப்பிரச்சினை என்பவை காரணமாக முல்லைத்தீவு மக்கள் பெரும் வறுமை நிலையை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் காரணமாகவே அங்கு போசாக்கின்மையும் அதிகரித்துள்ளதாக தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில்தமிழர்கள்சிறுபான்மையினராக இருக்கும் அதேவேளை, பெரும்பான்மையான விதவைகள் தமிழர்களாகஇருப்பதைக்காட்டும்புள்ளி விவரங்கள் எண்ணற்ற செய்திகளை அழுத்தமாக எடுத்துரைக்கின்றன.

**பிரிட்டன் வெளியுறவு மற்றும் பொதுநலவாயப் பணியகத்தின் அறிக்கை!**

போரின் போது கணவன்மாரை இழந்த90ஆயிரம்வரையானபெண்கள் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர் என்று பிரிட்டன் மற்றும் பொதுநலவாயப் பணியகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல் போனவர்கள், கடத்தல் சம்பவங்கள் என்பவை 2011ஆம் ஆண்டின் இறுதியில் அதிகரித்துக் காணப்பட்டதாக பிரிட்டன் அயலுறவுத்தறைச் செயலர் வில்லியம்ஹேக் அண்மையில் வெளியிட்ட 2011 ஆம் ஆண்டின் நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கடந்த டிசெம்பரில், இலங்கையின் வடக்குப்பகுதியில்பயணித்துக்கொண்டிருந்த அரசியற் செயற்பாட்டாளர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர். அத்துடன் 2010 இல் காணாமல் போன கேலிச் சித்திரவடிவமைப்பாளரான பிரகீத் எக்னெலிகொடவின் வழக்கு விசாரணை உள்ளடங்கலாக, கடந்த காலங்களில் காணாமல் போனோர் தொடர்பாக எந்தவொரு விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கைஅரசால்நியமிக்கப்பட்டகற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, யுத்த மீறல்கள் தொடர்பாக முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய குறிப்பிட்ட சில சம்பவங்கள் தொடர்பாக, இலங்கை பொலிஸார் எந்தவொரு முறைப்பாட்டையும் பதிவு செய்ய மறுப்பதாகவும் பிரிட்டன் அயலுறவுத் துறையால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரின் நட மாட்டம், அங்குள்ளபெண்களின்பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்பில், நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இலங்கை அரசு வடக்கில் குவிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பில் எந்தவொரு சிறு முன்னேற்றத்தைக் கூடக் காண்பிக்கவில்லை என அந்த அறிக்கையில்மேலும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அனைத்துலக நெருக்கடிகள் குழுவும் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் வாழும் பெண்களின் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிட்டுள்ள பிரிட்டன் அறிக்கை, உலக பொருளாதார மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட பூகோள பால்நிலைச் சுட்டியில் 16 ஆவது இடத்திலிருந்த இலங்கை, தற்போது 31 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் 2011முழுமையும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், இலங்கையில் மனித உரிமையைப் பாதுகாத்தல் என்பது கடந்த ஆண்டில் கேள்விக்குறியாகக் காணப்பட்டதாகவும் அந்த பிரிட்டன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு பெண்ணின் சோகக் கதை

முல்லைத்தீவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாய் சபாரெத்தினம் சாந்திதேவி: போரின்போது கணவர் மற்றும் பிள்ளைகள் சிலர் கொல்லப்பட்டார்கள். குறித்த இந்தத் தாய் பிள்ளைகளுடன் தனித்துவிடப்பட்டார். கணவனை இழந்த நிலையில் தனது பிள்ளைகளையும் பெரும் நெருக்கடியின் மத்தியில் வளர்த்து வந்தார்.

1984ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இலவத்தையில் வசித்து வரும் போது ஐந்து குழந்தைகள் இருந்தனர். எனது கணவர் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.அதற்குப்பின்புமிகவும்கஷ்டத்தின்மத்தியில்வாழ்ந்து வந்தேன். எனது பிள்ளைக்ள் கல்விகற்க முடியவில்லை. உணவு உடை உறைவிடமில்லாமல் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்து மீண்டும் 2009ஆம் ஆண்டு பொக்கணை முள்ளிவாய்க்காலில் எனது பிள்ளைகள் உணவுக்கே கஷ்டப்பட்டனர். எனது மூத்த மகள் எறிகணை வீச்சினால் உயிரிழந்தார். எனது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் உயிரிழந்தனர். எனது மற்றொரு மகள் பலத்த காயம் அடைந்தார். நானும் தலையில் பலத்த காயம் அடைந்தேன். அப்போது எனக்கு ஒன்றும் தெரியாத நிலையில் இருந்தேன். எனது மகன் கப்பலில் என்னை வவுனியா மருத்துவமனையில் சேர்ந்தார். எனது பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை அழைத்து வந்து முகாமில் சாப்பாடும் இல்லாமல் கண்ணீரும் சோறுமாக வாழ்ந்து வந்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்து கொண்டு எனது பிள்ளைகள் எங்கே என்று தெரியாமல் தவித்தவண்ணம் இருந்தேன்.

எனது பிள்ளைகள் அம்மாவும் இல்லை அப்பாவும் இல்லை என்று எண்ணிக் கொண்டு அழுது கொண்டே இருப்பார்கள். வவுனியா மருத்துவமனையில் ஒரு வருடமாக தங்கிச் சிகிச்சை பெற்றேன். எனக்குச் சுகம் ஆகிவிட்டது என்னை பிள்ளைகளிடம் போகச் சொன்னார்கள். பிள்ளைகள் எங்கே என்று தெரியாமல் பேப்பர் மூலம் அறிந்து கச்சேரி ஊடாக எனது பிள்ளைகளிடம் விட்டார்கள். கவலையுடன் வந்து சேர்ந்தேன். மீண்டும் மீண்டும் நினைத்து பார்க்க கவலை தீருதில்லை. எனக்கு தலையில் காயம் பட்டது முதல் கண்ணும் தெரியாவில்லை. மீண்டும் நோயாளி ஆகியுள்ளேன். மீண்டும் 18.02.2012ஆம் ஆண்டு கொக்குத்தொடுவாய்க்கு வந்து அடிப்படை வசதிகள் ஒன்றும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றோம் என்கிறார் – சபாரெத்தினம் சாந்திதேவி.



**வாழ்வாதாரம் தொடர்பான உண்மை நிலை**


கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் உக்கிரமாக நடந்த போர் காரணமாகவும், மிதி வெடிகளிலும் சிக்கியும் அதிகமான தமிழ் மக்கள் தங்கள் கால் கைகளை இழந்திருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இது தவிர ஆண் துணையிழந்த பெண்களும், தங்கள் குடும்பத்துக்குத் தலைமையேற்று நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால், வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவர்கள் தவிக்கின்றார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து 8 வருடங்கள் கடந்தும், பாதுகாப்பு, வாழ்வாதாரமும்சமூகபாதுகாப்பும், சலுகைகளும் உதவித் திட்டங்களும், கல்வி, சுகாதாரமும் சத்துணவும், சமூக கலாச்சார விடயங்கள் மற்றும் காணாமல் போனோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் போன்ற விடயங்கள் மீதான விசேட செயற்றிட்டங்கள் இன்னமும் ஆமை வேகத்திலேயே காணப்படுகின்றது என்பது பலரது குற்றச்சாட்டு. இலங்கை பெண்கள் பணியகத்தின் கீழ் செயற்படுகின்ற விதவைகள் மற்றும்பெண்கள் [illegible] பங்களை பொருளாதார ரீதியில் வலுவுட்டுவதற்கான அவர்களது வாழ்வாதார வசதிகளை மேம்படுத்த 2015 ஆம் ஆண்டில் விசேட செயற்றிட்டத்தின் கீழ் 50 மில்லியன்களை முதலிட்டு சுமார் 2 ஆயிரம்பெண்கள்பொருளாதார ரீதியில் வலுவுட்டப்பட்டுள்ளனர். இலங்கை பெண்கள் பணியகத்தினால் 2016 ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயற்படுத்தப்படுகின்றன. இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு உதவும் விதத்தில் எவ்வித நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை. பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களையும் உள்ளே விட அனுமதி மறுக்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனம் திறந்து தங்கள் குமுறல்களை வெளிப்படுத்தினர். இலங்கையில் தமிழர்கள் சுதந்திரக் காற்றைத் தற்போது அனுபவித்தாலும், அது உயிரோட்டமுள்ள பிராணவாயுவே அல்ல என்பதுதான் உண்மை.

**கணவரை இழந்த பெண்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்றனர்**

கணவரை இழந்த பெண்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. சில சமயங்களில் அவர்களது ஆடைகளும் நடத்தைகளும் கூட விமர்சிக்கப்படுகின்றன. மீண்டும் மறுமண குடும்ப பந்தத்தில் இணையவிரும்பும் பெண்கள் சமூகத்தின் அவச்சொல் குறித்து அஞ்சும் நிலை இருக்கின்றது என்று ராதிகா ஹெட்டியாராச்சி [illegible] தங்கள் மூலம் [illegible]பட்டுள்ளது.



## ஆசிரியருக்கான கடிதம்

### ஊழல் பேர்வழிகள் விரட்டப்படல் அவசியம்

நற்பழக்க வழக்கங்களுக்கு கற்ற கல்வியே அடிப்படையாய் அமைகிறதென்பது சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. ஆயினும் அண்மைக்காலமாக ஊழல்கள் புரையோடிப் போயுள்ள துறைகளில், கல்விசார் துறைகள் முதலிடம் வகிப்பதாக வெளிவரும் செய்திகள் மனதை வருத்துகின்றன. கல்வியின் முதற்கூறான பாடசாலைகளில் அத்தகைய ஊழல் செயற்பாடுகள் இடம்பெறவதற்கு எக் காரணம் கொண்டும் இடமளிக்காமல் உடனுக்குடன் நடவடிக்கையெடுப்பதன் மூலம் அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

'தொண்டராசிரியர்களாக 12 பேர் கடமையாற்றியதாக அதிபர் உறுதிப்படுத்தினார். சம்பவத் திரட்டுப் பதிவேட்டைக் கோரியபோது அதுவும் மாயம். விசாரணைகளை ஆரம்பித்தது கல்வித் திணைக்களம்' என்கின்ற செய்திகளும், தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பான முடிவுகள் தெரிய வருமென்பதான செய்திகளும் அண்மைக் காலமாக வெளிவருகின்றன. ஒரு சில அதிபர்களின் ஒவ்வாத செயற்பாடுகளால் தொண்டராசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியமனங்கள் தடைப்படக் கூடாதென்பதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கரிசனையாக இருக்க வேண்டியது அவசியம்.

அவதானி.

### வடமாகாணத்தின் கல்வித் தராதரம் உயர்த்தப்படுமா?

கடந்த 2017.06.28ஆம் திகதிய பத்திரிகையொன்றில் வடக்குப் பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப கொழும்பு அரசின் அங்கீகாரத்துக்குக் காத்திருப்பு எனச் செய்தியொன்று வெளிவந்திருந்தது. ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சையெனப் பலவும் கால ஒழுங்கில் இடம்பெறுகின்றன. ஆயினும் ஆசிரியர் நியமனங்களில்தாமதமேற்படுவது ஏன்? மாணவர்களின் கல்வியில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தவல்ல இந்தப் பிரச்சினையை சீர் செய்ய ஒழுங்கு முறையான நிகழ்ச்சித் திட்டம் அவசியமாகும்.

அப்போதுதான் கல்வியில் சம வாய்ப்பென்பது சாத்தியமாகும். தேவையற்ற இழுத்தடிப்புக்களை ஆசிரியர் நியமனங்களில் செய்துவிட்டு கல்வியில் மாவட்டம் தாழ்ந்த நிலையிலுள்ளதாக ஓலமிடுவது அர்த்தமற்றதாகும்.

அவதானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதிரிகளின் மாத மாற்றங்கள் மீதான நுகர்வுப்பொருள்களின் பங்களிப்பு

| நுகர்வுப் பொருள்கள் | விலைப் பெறுமான மாற்றம் | | | |
|---|---|---|---|---|
| | ரூபா, சதம் | வீதம் % | | |
| | | அதிகரிப்பு | குறைவு | மொத்த விளைவு |
| உணவு | **-392.21** | **0.18** | 0.72 | -0.54 |
| 1 அரிசி | *25.91* | 0.04 | | |
| அரிசி (கெகுளு வெள்ளை) | *6.46* | *0.01* | | |
| அரிசி (கெகுளு சிவப்பு) | 11.63 | *0.02* | | |
| அரிசி (நாடு வெள்ளை) | 5.94 | *0.01* | | |
| 2 இறைச்சி | -5.58 | | 0.01 | |
| 3 கடலுணவு | *-146.80* | | 0.20 | |
| 4 கருவாடு | 8.03 | 0.01 | | |
| கட்டா | *7.44* | *0.01* | | |
| 5 முட்டை | 15.69 | 0.02 | | |
| 6 தேங்காய் | -96.85 | | 0.13 | |
| 7 தேங். எண்ணெய் | -15.02 | | 0.02 | |
| 8 வாழைப்பழம் | 21.87 | 0.03 | | |
| 9 அன்னாசி | 5.17 | 0.01 | | |
| 10 பப்பாளி | 26.55 | 0.04 | | |
| 11 மாம்பழம் | 9.06 | 0.01 | | |
| 12 மரக்கறி வகைக்ள் | -161.92 | | 0.22 | |
| 13 உருளைக்கிழங்கு | -13.03 | | 0.02 | |
| 14 வெங்காயம் | 4.04 | 0.01 | | |
| 15 வெள்ளைப்பூண்டு | -34.79 | | 0.05 | |
| 16 பச்சை மிளகாய் | -44.84 | | 0.06 | |
| 17 தேயிலைத் தூள்/இலை | 13.13 | 0.02 | | |
| 18 ஏனையவை | -2.84 | | 0.00 | |
| உணவு அல்லாதவை | **-64.93** | **0.10** | 0.19 | -0.09 |
| 19 உடுபுடவை மற்றும் காலணிகள் | -19.94 | | 0.03 | |
| 20 தண்ணீர், மின்சாரம், எரிவாயு, ஏனைய எரிபொருள் | 9.33 | 0.01 | | |
| 21 வீட்டுத் தளபாடங்கள், உபகரணங்கள், பராமரிப்பு | 9.85 | 0.01 | | |
| 22 சுகாதாரம் | -118.41 | | 0.16 | |
| 23 போக்குவரத்து | 38.53 | 0.05 | | |
| | *38.53* | *0.05* | | |
| 24 சிற்றுண்டி சாலையும் ஹோட்டல்களும் | 13.12 | 0.02 | | |
| 25 ஏனையவை | 2.58 | 0.00 | | |
| அனைத்தும் | **-457.15** | | | -0.63 |

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதிரிகளின் மாத மாற்றங்களில் குறிப்பாக நடப்பாண்டின் ஜூன் மாத காலப்பகுதியில் இருந்து ஜூலை மாத காலப்பகுதிக்கான மாற்றங்களில் காணப்படும் நுகர்வுப்பொருள்களின் பங்களிப்பு மேல் வருமாறு அமைந்துள்ளது. (ஓ)

# நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



"நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய தலைமுறை விவசாயத்துறையை முன்னேறுவதற்குத் தேவையான சூழலை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது" என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மதவாச்சியில் அமையப்பெற்றுள்ள 'பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க' புதிய பொருளாதார மத்திய நிலையத்தை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இந்தவிடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,


"நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்துக்குத் தேவையாக இருப்பது சுய சக்தியில் கட்டியெழுப்பப்பட்ட வாழ்க்கைமுறையும், பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட திட்டங்களுமே. விவசாய நாடு என்றபோதும் விவசாயப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடந்த காலத்தில் முன்னுரிமை அளிக்கப்படவில்லை. நாட்டில் உள்ள விவசாய சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கவில்லை.

வறுமை, குறைந்த வருமானம், நாளாந்த வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமை போன்ற விடயங்களினால் நாட்டின்விவசாயசமூகம்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், விவசாயத்துறைக்குத்தேவையான பல்வேறு வசதிகளை வழங்கவும் தற்போதைய அரசாங்கம் பலதிட்டங்களை ஆரம்பித்துள்ளது"-என்றார்.(ஓ)

# நிதி நிலமைகள் உறுதியற்று தளம்பல் அடைந்துள்ளன

## உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சர் வலியுறுத்தல்



இலங்கையின் நிதி நிலமைகள் உறுதியற்ற தளம்பல் தன்மையை அடைந்துள்ளன என்ற கருத்தை உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்படி இலங்கை அரசு வருமானத்தினை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்த சந்தர்ப்பத்திலேயே இந்த விடயங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

> "நாட்டினுள் உருவாக்கப்படுகின்ற நிகர தேசிய வருமானத்தின் வீதத்திற்கமைவாக 10 வீத வரி வருமானமே உள்ளது"

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள டான் வில்சர்,

"இலங்கையின் நிதி நிலமை மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. நிகர தேசிய வருமானத்தின் வீதத்திற்கமைவாக 10 வீத வரி வருமானமே உள்ளது. இந்த சந்தர்ப்பத்திலே அரசு வரி வருமானத்தினை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொழில்புரிபவர்களின் வருமான அதிகரிப்பினை முதலீடுகளினூடாக மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொண்டு வெளிநாட்டு முதலீடுகளுக்கான சூழலை உருவாக்குவதன் மூலமும் இந்த இலக்குகளை சாத்தியப்படுத்திக்கொள்ள முடியும்" - என மேலும் தெரிவித்தார். (ஓ)

# இலங்கைக்கு ரூ. 221.85 பில். கடன் உதவி

## பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி

இலங்கைக்கான கடன் உதவியாக 221.85 பில்லியன் ரூபா தொகை மதிப்பீட்டினை வழங்குவதற்கான அனுமதியினை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு வழங்கியுள்ளது.

ஏழு தவணைகளில் இந்தக் கடன் தொகையினை வழங்குவதற்கு பன்னாட்டுநாணய நிதியம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளுக்கிடையே ஏற்படும் நிலுவைத் தொகையினை செலுத்துவதற்கு தேவை ஏற்படும் படசத்திலே பயன்படுத்துவதற்கான முன் ஏற்பாடகவே இந்த கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

இந்தநிலையிலே கடன் உதவிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பன்னாட்டுநாணயநிதியமானது நாட்டின் நிதிக்கொள்கை மற்றும் நிலுவை தொடர்பில் எதிர்பார்க்கும் சில நோக்கங்கள் குறித்த யோசனைகளை முன்வைத்துள்ளது.

பிரதானமாக வருமானத்தை அதிகரித்து வரவு மற்றும் செலவில் இடைவெளியைக் குறைத்தல், மத்திய



வங்கியின் பன்னாட்டு இருப்புக்குறைவடைதலைத் தடுத்தல், மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் அரச கடனை குறைத்தல், கடனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுத்தல், அரச நிதி முகாமைத்துவம் மற்றும் அரச திட்டங்களின் செயற்பாடுகளை மேம்படுத்தல் என்பன இந்த யோசனைகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பண வீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு நெகிழ்ச்சித் தன்மையுடைய செலாவணி விகிதத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் அனைத்து மக்கள் பிரிவினருக்குமான நிரந்தரப் பொருளாதார அபிவிருத்தியை அடைதல் என்பனவும் உள்வாங்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டியநான்குவிடயங்கள்தொடர்பிலும் பன்னாட்டு நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ)

# விற்பனையை அதிகப்படுத்தியது டி.பி.ஜி. இறப்பர் கையுறை நிறுவனம்

## காலாண்டுக்கான நிதி ஈட்டமாக 93 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது

1976 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உலர்ந்த தயாரிப்புகளை சந்தைக்கு வழங்கும் இறப்பர் கையுறை உற்பத்தி நிறுவனமான டி.பி.ஜி கடந்த ஜீன் மாதம் 30ஆம் திகதி வரையிலான காலாண்டு காலப்பகுதிக்கான விற்பனையில் 93 மில்லியன் ரூபா தொகை மதிப்பீடு உடையதான இலாபத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

இதன்படி குறித்த நிறுவனத்தின் விற்பனையானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 23 வீதமான அதிகரிப்பினை பதிவுசெய்துள்ளது.

மேலும் வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப உயர்ந்த தரத்திலான உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதன் ஊடே விற்பனையில் முதலிடம் பெற்றுள்ளது என குறித்த நிறுவனத்தின் இயக்குநர் சபை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

## தடுப்பு மருந்தின் பயனுறுதியோடு குணப்படுத்தக்கூடிய தொற்றா நோய்

மருத்துவர் கோ.றஜீவ்

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் குணப்படுத்தக் கூடிய ஒரு தொற்றா நோயாகக் காணப்படுகிறது. பெண்களில் ஏற்படுகின்ற புற்று நோய்களில் 12 வீதமானவை கருப்பைக்கழுத்துப் புற்று நோயாகவே உள்ளன. 30 தொடக்கம் 55 வயது எல்லையை உடைய பெண்களிலேயே இந்தத் தொற்றா நோய் அதிகம் இனங்காணப்படுவதுடன், உயர் இறப்பு வீதத்தையும்,அதிக இயலாமையையும் ஏற்படுத்துகின்றன. இவற்றுள் 80 வீதமானவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே ஏற்படுகின்றன. உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 2 இலட்சத்து 66 ஆயிரம் பெண்கள் இந்த நோயினால் உயிரிழப்பதுடன் அவற்றுள் 85 வீதமானவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே ஏற்படுகின்றன.

### நோயின் பரம்பலும் பாதிப்பும்


வகை உயிரிழப்பைத் தடுப்பதற்கான உடனடிக்கவனமும்,அதற்குரித்தான சிறப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படாவிடின் குறிப்பாக, ஒழுங்கு முறையான கருப்பைக்கழுத்துப் புற்று நோய்த்தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிடின் எதிர்வரும் 10 ஆண்டு காலப்பகுதியில் இறப்பு வீதமானது மேலும் 25 வீதத்தினால் அதிகரிக்கும் என்ற தகவல்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்தமட்டில் 7.52 மில்லியன் பெண்களில் இந்தநோய் ஏற்படக்கூடிய ஆபத்தின் குறிகாட்டிகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் வருடாந்தம் ஆயிரத்து 395 புதிய நோயாளர்கள் இனங்காணப்படுவதோடு புன்னாட்டு மதிப்பீடுகளின்படி (IARC) 814 பேர் உயிரிழந்து போகின்றனர். தேசிய கருப்பைக்கழுத்துப் புற்று நோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் தரவுகளின் படி வருடாந்தம் 850 தொடக்கம் 950 புதிய கருப்பைக்கழுத்துப் புற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர்.

இலங்கையில் பெண்களுக்கு ஏற்படும் புற்று நோய்களில் 10 வீதமானவை கருப்பைக் கழுத்துப் புற்று நோயாக உள்ளதுடன் இதுவே பெண்களில் 2 ஆவது அதிகூடியளவில் ஏற்படும் புற்று நோயாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

### நோய்த் தொற்று ஏற்படும் வயதெல்லை

இந்தப் புற்று நோயானது அண்ணளவாக 30 வயதுடைய பெண்களில் ஆரம்பம் கொள்கிறது. எனினும் 50 தொடக்கம் 55 வயதெல்லையை கொண்டுள்ள பெண்களையே அதிகம் பாதிக்கிறது.

கீழுள்ள தேசியபுற்று நோய்க்கட்டுப்பாட்டுப் புள்ளிவிபரம் சார்ந்த வரைபு என்பது இந்தப் புற்று நோயின் வயது சார்ந்த பரம்பலைக் காட்டுகிறது.




### நோய்க் காரணியும் தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டமும்

எச்.பி.வி (HPV) என்பது மனிதப் பப்பிலோமா வைரஸ் என்பதற்கான ஆங்கிலப்பதத்தின் சுருக்கமாகும். பெரும்பாலான நோய்க்கிருமிகள் உடன்டியான தொற்று நோய்களையே ஏற்படுத்துகின்றன. அவற்றை தடுப்பு மருந்தேற்றல் மூலம் தடுக்க முடியும். சில வகையான கிருமிகள் நாட்பட்ட தொற்றா நோய்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக சில வகையான வைரஸ் கிருமிகளால் புற்று நோய் ஏற்படுவதைக் குறிப்பிடலாம். வைரஸ் தொற்று நோய்களில் 20 வீதமானவை புற்று நோயை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

எச்.பி.வி (HPV) தடுப்புமருந்தானது தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் புற்று நோயொன்றைத் தடுப்பதற்கான இரண்டாவது சந்தர்ப்பமாக அமையவுள்ளது. 'ஹெப்பட்டைடிஸ் பி' எனும் வைரஸ் ஈரல் புற்றுநோய்க்கான முக்கிய காரணியாகும். இதனைத் தடுப்பதற்கான 'கெப் பி' (Hep B) எனும் தடுப்புமருந்தானது இலங்கையின் தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடந்த 2006 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டதுடன் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுவருகிறது. இம் ஐங்கூட்டு வக்சீனில் இது உள்ளடங்குகின்றமை நோக்கத்தக்கது. இந்தச் செயல்நிலைகள் மூலம் எதிர்காலத்தில் வளர்ந்தவர்களில் ஈரல் புற்றுநோய் ஏற்படுவது அதிகளவில் குறைக்கப்படும். அதே போல எச்.பி.வி (HPV) தடுப்பு மருந்தின் மூலம் கருப்பைக்கழுத்துப் புற்று நோயைத் தடுக்கமுடியும்.

எச்.பி.வி (HPV) என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய நூறுக்கும் மேற்பட்ட வைரஸ்களின் கூட்டமாகும். ஒவ்வொரு வைரஸுக்கும் அதன் மரபுசார் வடிவத்தைக் குறிப்பதான (Geno type) இலக்கம் ஒன்று வழங்கப்படும். இந்த வகை சார்ந்த வைரஸ்கள் சாதாரணமாக நோயொன்றுக்குரியதான எந்தவிதமான அறிகுறிகளையும் ஏற்படுத்தாமல் நீண்ட காலத்துக்கு எமது தோல் மற்றும் சீதமென்சவ்வுகளில் (வாய்க்குழி மற்றும் இனப்பெருக்கப்பாதை மென்சவ்வுகள்) தங்கி இருக்கக்கூடியவை. சில வேளைகளில் எவ்வித நோய்களையும் ஏற்படுத்தாமல் எமது உடலில் இருந்து முற்றாக அகன்று விடுகின்றன. ஆனாலும் இந்த வகை சார்ந்த வைரஸின் சில மரபு சார்வடிவங்கள் (geno types) மிகவும் ஆபத்தானவை.

இவை உடனடியாக எந்தவிதமான நோய் அறிகுறிகளையும் ஏற்படுத்தாவிட்டாலும் நீண்டகாலத்துக்கு மேற்குறிப்பிட்ட மேற்பரப்புகளில் தங்கியிருப்பதால் குறித்த மேற்பரப்பிலுள்ள கலங்களின் இயல்புகளை மாற்றி விடுகின்றன. இக் கலங்கள் நீண்ட காலப் போக்கில் புற்று நோய்க்கலங்களாகவோ அல்லது புற்று நோயல்லாத வளர்ச்சிகளாகவோ (உண்ணிகள்) மாற்றமடையலாம். எச்.பி.வி (HPV) தொற்று ஏற்பட்டு அவை மிகவும் முதிர்வுற்று கருப்பைக்கழுத்துப்புற்று நோயாக மாறுவதற்கு 10 வருடங்கள் அல்லது அதை விடக்கூடிய காலம் எடுக்கலாம்.

> கருப்பைக் கழுத்துப்புற்று நோய்களில் பெரும்பாலானவை எச்.பி.வி (HPV) வைரஸினால் ஏற்படுகின்றன. இதற்கான தடுப்பு மருந்து தற்போது கிடைக்கிறது. கருப்பைக்கழுத்துப் புற்றுநோயானது இலங்கையில் பெண்களுக்கு மிகப்பெரிய சுமையையும், பாதிப்புகளையும் ஏற்படுத்துவதுடன் அவர்களின் குடும்பவாழ்வின் மிகமுக்கியமான காலப்பகுதியில் அதிக இடையூறுகளை ஏற்படுத்துகிறது.

### நோய் கண்டறிவுப் பரிசோதனை


எச்.பி.வி (HPV) வைரஸானது கருப்பைக்கழுத்து, யோனி வழி போன்ற பகுதிகளில் இருந்து பஞ்சினால் சுரண்டி எடுக்கப்படும் கலமாதிரிகளில் எச்.பி.வி (HPV) மரபணு பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் இனங்காணப்படக்கூடியவை.

மேற்படி கலமாதிரிகளை நுணுக்குக்காட்டியில் ஏற்றி அவற்றில் வைரஸ் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை உறுதிப்படுத்துவதன் மூலமும் இதனை இனங்கண்டுகொள்ள முடியும். இப் பரிசோதனையானது "பப் (pap) பரிசோதனை" (Papanicolaou test / Pap smear test) என அமைக்கப்படுகிறது. எச்.பி.வி (HPV)) மரபுசார் வடிவங்கள் 16,18 என்பனவே கருப்பைக்கழுத்துப் புற்று நோயை ஏற்படுத்துகின்ற மிகவும் ஆபத்தான மரபுசார் வடிவங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

99.7 வீதமான கருப்பைக்கழுத்துப்புற்று நோய்கள் எச்.பி.வி (HPV) வைரஸ் தொற்றினால் ஏற்படுத்தப்படுகின்ற அதே வேளை அவற்றில் 70 வீதமானவை மரபுசார் வடிவங்கள் 16, 18 என்பவற்றினால் ஏற்படுகின்றன. இவற்றுக்கான தடுப்பு மருந்துகள் தற்போது கிடைக்கின்றன.

(தொடரும்)

*கட்டுரையாளர்:பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம்..*




மூலம்: தேசியபுற்று நோய்க்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் மாத பலன்

## இடபம்

(கார்த்திகை 2, 3, 4 பாதம், ரோகிணி, மிருகசிரீஷம் 1, 2, பாதம்)

பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளைச் செய்து பக்குவமான அணுகுமுறையால் வெற்றி காணும் ரிஷப ராசியினரே, இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெறப் போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்புக் கிடைக்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். நயமாகப் பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களைக் கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றைச் செய்வீர்கள்.

**பெண்களுக்கு:** காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும்.

கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சக கலைஞர்களிடம் நிதானத்தைக் கடைபிடிப்பது நன்மை தரும். கோபத்தைக் குறைத்து தன்மையாகப் பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும்.

**அரசியல் துறையினருக்கு:** தேவையற்ற அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்யத் தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம்.

**மாணவர்களுக்கு:** வீண் அலைச்சல் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக் கூடும். நன்கு படிப்பது நல்லது. பெற்றோர் ஆதரவு பெருகும். வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

**கார்த்திகை 2, 3, 4 பாதம்:**
இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**ரோகிணி:**
இந்த மாதம் உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். தொலை தூரத் தகவல்கள் நல்லவைகளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

**மிருகசிரீஷம் 1, 2, பாதம்:**
இந்த மாதம் செல்வச் சேர்க்கை உண்டாகும். எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தனாதிபதி சுக்கிரனின் சஞ்சாரத்தால் பண வரவு அதிகரிக்கும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமையில் நவக்கிரகத்தில் சுக்கிரனுக்குத் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

# வரலாற்றில் இன்றைய தினம் 07.08.2017

461 - உரோமப் பேரரசர் மஜோரியன் கைது செய்யப்பட்டு வடமேற்கு இத்தாலியின் இறியா நதிக்கருகே தலை துண்டிக்கப்பட்டார்.

936-ஜேர்மனிய அரசராக முதலாம் ஓற்றோ முடிசூடினார்.

1890-கொலைக் குற்றம் தொடர்பாக சாவுத் தண்டனைக்குள்ளான சுவீடனின் கடைசிப் பெண்மணியானார் அன்னா மான்ஸ்டொட்டர்.

1960-பிரான்ஸிடமிருந்து ஐவரிகோஸ்ட் சுதந்திரமடைந்தது.

1970-கலிபோனிய நீதவான் ஹரோல்ட் ஹேலீ, நீதிமன்றுள் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்ட நிலையில் ஆயுததாரியான ஆபிரிக்க அமெரிக்கர் ஜோர்ஜ் ஜாக்ணை விடுவிக்கும் முயற்சியின் போது கொல்லப்பட்டார்.

1981-வொஷிங்டன் ஸ்ராக் மாலை நேரத் தினசரி 128 ஆண்டுகளாக வெளி வந்த நிலையில் தனது பதிப்பை நிறுத்திக் கொண்டது.

1985-ஜப்பானின் முதல் விண்வெளி வீரர்களாகினர் ரக்கோவா டோய், மமொரு மோஹ்றி மற்றும் சியாகி முகய்.



1989-எதியோப்பிய வானூர்தி விபத்தில் அமெரிக்கக் காங்கிரஸைச் சேர்ந்த மிக்கி லாண்டும் வேறு 15 பேரும் உயிரிழந்தனர்.

1989-எதியோப்பிய வானூர்தி விபத்தில் அமெரிக்கக் காங்கிரஸைச் சேர்ந்த மிக்கி லாண்டும் வேறு 15 பேரும் உயிரிழந்தனர்.

1990 -வளைகுடாப் போருக்காக அமெரிக்க படையணி சவுதி அரேபியாவைச் சென்றடைந்தது.

2002- நிமலாஜன் படுகொலைதொடர்பாக மற்றொரு ஈ.பி.டி.பி. உறுப்பினர் மானிப்பாயில் கைது.

2006-பலஸ்தீன சபாநாயகர் இஸ்ரேல் இராணுவத்தால் சிறைப்பிடிப்பு. இஸ்ரேல் லெபனான் போரை முடிவுக்குக் கொண்டு வர ஐ.நா. தீவிரம்.

2006 -ஒட்டோ சாரதி ஆனைக்கோட்டை கூழாவடியில் சுட்டுக் கொலை.

2016 - ஆணைக் குழுக்களை அமைப்பதை விடுத்து மக்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என செயலணியிடம் தென்மராட்சி மக்கள் வலியுறுத்தல்.

## நாளை

**08.08.2017**
செவ்வாய்க்கிழமை

**ஆடி - 23**

திதி: பிரதமை பி.இ. 12.51 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 05.59 வரை
சுபநேரம்: 10.34–12.04 வரை
ராகுகாலம்: 03.04–04.34 வரை

# பத்தி எழுத்து

## விக்னேஸ்வரனின் ஆட்டத்துக்கு முடிவு வேண்டும்

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தணிந்து செல்வதற்கான அறிகுறி அருகிய நிலையிலேயே காணப்படுகின்றது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் விடாப்பிடியான போக்கே இதற்கான காரணமாகும்.

அண்மையில் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் வடக்கு முதலமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார். இதில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர். இதில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அமைச்சர்களின் நியமனம், அமைச்சரவையை மாற்றியமைத்தல் ஆகியன தொடர்பான அதிகாரம் தமக்கே வழங்கப்பட வேண்டுமென முதலமைச்சர் விடாப்பிடியாக நின்றார் என்று தெரிய வருகின்றது.

அண்மைக்காலமாக வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எல்லாம் முதலமைச்சரே மூல காரணமாகவுள்ளார். முன்னாள் அமைச்சரான ஐங்கரநேசன் மீது சபையில் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது அவரைக் காப்பாற்றும் வகையில் முதலமைச்சர் நடந்து கொண்டார். விசாரணைக் குழுவொன்றை அமைத்து நான்கு அமைச்சர்களையும் விசாரிக்கச் செய்தார்.

ஆணைக்குழு இரண்டு அமைச்சர்களை மட்டுமே பதவி விலகுமாறு கூறிய போதிலும் ஏனைய இரண்டு அமைச்சர்களையும் குற்றவாளிகள் போன்று நடத்தினார். இதுவே பிரச்சினைகளுக்கு வழி கோலியது.

அதன் பின்னரும் முதலமைச்சர் ஓய்ந்து விடாது தமது எண்ணப்படியே சகலதையும் செய்வதற்குத் துணிந்தார். உண்மையில் அவர் நேர்மையுள்ள ஒருவராக இருந்திருந்தால் தம் வசமுள்ள அமைச்சுக்கள் மீதும் விசாரணைகளை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் அதை முற்றாகவே தவிர்த்து விட்டுத் தமது எண்ணம் போன்று தவறான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏற்கத் தக்கதல்ல.

மேலும் தாம் இன்னமும் கூட்டமைப்பிலேயே உள்ளமையை வெளிப்படுத்தும் அவர் அதன் தலைமைக்கு உரிய மதிப்பையும் கௌரவத்தையும் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. கூட்டமைப்பின் தலைவர் வேலியில் இருந்த ஓணானைப் பிடித்து மடிக்குள் வைத்துக் கட்டிய நிலையில் அவஸ்தைப்படுகின்றார்.

சி.வி.விக்னேஸ்வரன் மாகாண சபையில் ஏற்படுத்திய குழப்பங்கள் போதும். இனிமேலும் அது தொடர்ந்தால் வேண்டத்தகாத விளைவுகள் இங்கு ஏற்பட்டு விடும். கூட்டமைப்பும் முதலமைச்சருக்குக் கடிவாளம் இட வேண்டிய தருணம் இதுதான் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். விக்னேஸ்வரன் என்ற தனிமனிதர் முதலமைச்சர் பதவியில் அமர்ந்து கொண்டு ஆட்டம் போடுவதற்கு விரைவில் ஒரு முடிவு கட்ட வேண்டும். மாகாணசபை சுமுகமாக இயங்க வேண்டுமென்றால் இதைத் தவிரவேறு வழியே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 2 | 8 | 9 | 5 | 3 | 1 |
| 5 | 3 | 2 | 7 | 1 | 6 | 8 | 4 | 9 |
| 8 | 1 | 9 | 5 | 3 | 4 | 7 | 2 | 6 |
| 1 | 7 | 4 | 6 | 9 | 2 | 3 | 5 | 8 |
| 6 | 9 | 3 | 8 | 7 | 5 | 4 | 1 | 2 |
| 2 | 5 | 8 | 1 | 4 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 6 | 9 | 5 | 8 | 1 | 7 | 4 |
| 7 | 8 | 5 | 4 | 2 | 1 | 9 | 6 | 3 |
| 9 | 4 | 1 | 3 | 6 | 7 | 2 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரம ாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# ஒப்பந்தங்களில் மிதக்கிறார் விஜய் சேதுபதி

தமிழ் திரையுலகில் தற்போது முன்னணி நடிகராக வலம்வருபவர் விஜய் சேதுபதி. இவர் நடித்த பெரும்பாலான படங்கள் இவருக்கு பெரும் வெற்றியைக் கொடுத்துள்ளன. அண்மையில் வெளிவந்த 'விக்ரம் வேதா' படமும் நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில் விஜய் சேதுபதி தற்போது ஏகப்பட்ட படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார் என்ற தகவல் வந்துள்ளது.

இதன்படி விஜய் சேதுபதி தற்போது, 'அநீதிக்கதைகள் 96', 'ஒரு நல்ல நாள் பாத்து சொல்றேன்', உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

மேலும் பாலாஜி தரணிதரன் இயக்கத்தில் 'சீதக்காதி', சீனுராமசாமி இயக்கத்தில் 'மாமனிதன்' படத்திலும், இதற்கு 'தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' பட இயக்குநர் கோகுல் உடன் 'கஞ்சன் ஜங்கா' உள்ளிட்ட படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியிருக்கும் 'புரியாத புதிர்', 'இடம் பொருள் ஏவல்' ஆகிய இருபடங்களும் இன்னும் சில வாரங்களில் திரைக்கு வரவுள்ளன. 'புரியாதபுதிர்' படம் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி திரைக்குவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



கோயில்ல இருக்கிற வரைக்கும் சாமின்னு சொல்றாங்க, திருட்டுப் போயிட்டா சிலையைக் காணோம் எண்டு சொல்றாங்க ஏன் இந்த முரண்பாடு...?

நம்ம சோகத்தையெல்லாம் கேட்டு ஆறுதல் சொல்ல எப்பவுமே ஒரு கூட்டம் இருக்கும் அதுக்கு பேரு சொந்தக்காரனுக...



ஆனா நாம சோகமா இருக்கிறது தான் அவங்களுக்கு ஆறுதலே...

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயலில் எளிமையும், நிதானமும் நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்:** உங்களின் செயலை மற்றவர் குறை சொல்லலாம். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பெண்கள் குடும்பச் செலவில் தாராளம் பின்பற்றுவர்.

**மிதுனம்:** பொது விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். நிர்வாகத்தினரின் அன்புக்குரியவராகத் திகழ்வர்.

**சிங்கம்:** பொதுநலப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

**கன்னி:** பின்விளைவு உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிடலாம். இலாபம் சுமாராக இருக்கும். பணி யாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**துலாம்:** உங்களின் எதார்த்த பேச்சு சிலருக்கு சிரமம் கொடுக்கும். தொழிலில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமை யைத் திறம்படச் சமாளிப்பர்.

**விருச்சிகம்:** உங்களுக்கு எதிராக செயல்பட்டவர் இடம்மாறிச் செல்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**தனுசு:** செயல் நிறைவேற தாமதம் ஏற்படலாம். அனுபவசாலியின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். இயந்திரப்பிரிவு பணியாளர்கள் கூடுதல் பாதுகாப்பைப் பின்பற்றவும்.

**மகரம்:** செயல்களில் நிதானம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி, இலக்குப் பூர்த்தியாகும். பெண்கள் குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** மனக்குழப்பத்திற்கு இடம்தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவை. பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**மீனம்:** சாமர்த்தியமாக செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி எளிதாக நிறைவேறும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர்.

பத்தாம் வகுப்பு படிக்கும் பக்கத்து விட்டுப் பெண்ணிடம்,
தமிழ் புத்தகத்தை வாங்கிப் பார்த்தேன்.
அதில், 1இல் இருந்து 0 வரை, உள்ள எண்களை, தமிழில் எழுதும்படி கேட்கப்பட்டிருந்தது. எனக்கு, அது தெரியாது என்பதால், அந்தப் பெண்ணிடமே கேட்டேன்.
உடனே அந்தப் பெண், '1 2 3 4 5 6 7 8 9 0' என்ற எண்ணுக்கு முறையே, க, உ, ங,ச, ரு, சா, எ, அ, கூ, 0 என்றாள்.
"இதை எப்படி மனப்பாடம் செய்தாய்?' எனக் கேட்டேன்.
அத்தமிழ் எழுத்துக்களை வரிசைப்படுத்தி, வாக்கியமாக்கி மனப்பாடம் செய்தேன் எனக் கூறினாள்.
அதாவது, 'க'டுகு, 'உ'ளுந்து, 'ங'னைச்சு, 'ச'மைச்சு, 'ரு'சிச்சு,' "சா'ப்பிட்டேன்,'எ'ன, 'அ'வன், 'கூ'றினான்; 'ஓ' என்றாள். இதைக்கேட்டு, வியந்து பாராட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகச் சிறிய நகரம்

உலகின் மிகச் சிறிய நகரம் பாப்பரசரின் ஆட்சியின் கீழ் உள்ள வத்திக் கான் நகரம். இதன் பரப்பளவு 0.17 சதுர மைல்களாகும். வத்திக்கான் நகரத்துக்கென்று தனியான கொடி, தபால் நிலையம், ரயில் நிலையம், தொலைபேசி நிர்வாகம், வானொலி நிலையம் ஆகியவை இருக்கின்றன. தனியான நாணயங்களும் செலாவணியில் உள்ளன.

வத்திக்கான் நகரில் உள்ள மாளிகையில் பாப்பரசர் வசிக்கிறார். மாளிகையைச் சுற்றி அழகான தோட்டங்கள், தேவாலயங்கள் அருங்கலைக் காட்சியகங்கள், நூல் நிலையங்கள் ஆகியவை உள்ளன. வத்திக்கான் நூல் நிலையம் உலகப் பெரும் நூல் நிலையங்களில் ஒன்றாகும்.





# புதிய பாதை

ஒரு காட்டிலே நரி ஒன்று பசியால் உணவு தேடி அலைந்தது. எங்கு தேடியும் உணவு கிடைக்கவில்லை. பசியும் தாகமும் நரியை வாட்டின. நரி அங்கும் இங்குமாக அலைந்தது. கடைசியாக ஒரு திராட்சைத் தோட்டத்துக்கு வந்தது. அங்கு நன்றாகப் பழுத்த திராட்சைப் பழங்கள் குலை குலையாகப் பந்தலில் தொங்கின. நரி அண்ணாந்து பார்த்தது. ஆவலுடன் பழங்களைப் பறிப்பதற்கு முயற்சி செய்தது. பழங்கள் எட்டவில்லை. எட்டி எட்டிப் பார்த்தது எட்டவில்லை. நரியும் விடவில்லை. வேகமாக ஓடி வந்து துள்ளிப் பாய்ந்தது. அப்போது பழக்குலைகளுக்கு கிட்டத் தான் செல்ல முடிந்ததன்றி குலைகளைப் பறிக்க முடியவில்லை. நரி மனம் தளர்ந்தது. பசி ஒரு புறம் நரியை வாட்டியது. துக்கத்துடன் நடந்து வரும் நரியை அவ்வழியே வந்த மான் கண்டது. 'என்ன நரியாரே கவலையுடன் வருகிறீர்கள்? என்ன நடந்தது?" என்று கேட்டது மான். "அதே பார், அந்தப் பந்தலில் எவ்வளவு திராட்சைப் பழங்கள் இருக்கின்றன. ஆனால் என்னால் பறித்துச் சாப்பிட முடியவில்லையே!" என்று நரி கூறியது. "ஏன் பறிக்க முடியவில்லை?" என்று மான் கேட்டது. "எட்டி எட்டிப் பாய்ந்தேன் துள்ளித் துள்ளிப் பாய்ந்தேன். சிறிய தூரத்திலிருந்தும் ஓடி வந்து பாய்ந்தேன். ஆனால் பழங்கள் எட்டவேயில்லை. சீ சீ இந்தப் பழம் புளிக்கும் என்று வந்து விட்டேன்" என்று சோகமாகக் கூறியது நரி. என்ன நரியாரே "உங்களுக்கு எட்டவில்லை என்பதற்காக திராட்சைப் பழம் புளிக்குமா? என்ன உங்கள் மூதாதையர் போல் உடனே எட்டாத பழம் புளிக்கும் என்ற முடிவுக்கு வந்து நீங்கள் வேறு முயற்சிகள் செய்து பாத்திருக்கலாமே" என்றது மான். "வேறு என்ன தான் செய்வது" என்று ஒன்றும் புரியாமல் கேட்டது நரி. சுற்றும் முற்றும் பார்த்த மான் "அதே பாருங்கள் யாரோ வெட்டிப் போட்ட ஒரு மரக்குற்றி அதை எடுத்து வந்து அதில் ஏறி முயற்சி செய்து பாரும்" என்றது.

மான் சுட்டிக்காட்டிய இடத்தில் ஒரு மரக்குற்றி இருந்தது. தனக்கு இந்த யோசனை முன்பு வரவில்லையே" என்று நரி நினைத்தது. "மானேரே நல்ல யோசனை ஒன்று சொன்னீர்கள் மிகவும் நன்றி" என்றது நரி. சரி நான் அவசரமாகப் போக வேண்டும். வருகிறேன் என்று கூறி மான் போய்விட்டது.

நரி மரக்குற்றியைப் பந்தலுக்கு அருகில் கொண்டு வந்து அதன் மீது ஏறியது ஆஹா... என்ன மகிழ்ச்சி நரியின் கையில் குலை குலையாக இனிமையான திராட்சைப் பழங்கள். நரி நன்றியுடன் மானை நினைத்துக் கொண்டது. நரியின் பசியும் தாகமும் தீர்ந்தன. அது மிகுந்த மகிழ்ச்சியுடன் காட்டுக்குள் சென்றது.

**நீதி: தொடர்ச்சியான முயற்சி பலன் தரும்.**

# நற் பண்புகளை வளர்ப்போம்

- நற்பண்புகளே நல்லவர்களின் அடையாளம். நூல்களை வாசிப்பதன் மூலமாகவும், சிறு வயதிலிருந்தே பழகிக் கொள்வதாலும், நற் பண்புள்ளவர்களின் நடத்தைகளைக் கவனிப்பதாலும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும்.
- எந்தப் பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதால் இருட்டிலும் கூட அந்தப் பொருளை சிரமமின்றி எடுக்க முடியும். பொருள்களை வேறெங்கோ வைத்து விட்டு அவற்றைத் தேடுவதில் செலவிடும் நேரத்தை இதனால் மீதப்படுத்திக் கொள்ள முடிகிறது.
- வகுப்பறையிலோ, நூலகத்திலோ அல்லது முக்கியமான விடயமாக முக்கியமான ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே தும்முவதும், கொட்டாவி விடுவதும் கண்ணியமற்ற செயல்கள். அப்படி அடக்க முடியாமல் கொட்டாவியோ, தும்மலோ வருமாயின் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் கைக்குட்டையினால் முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும்.
- எம்மோடு ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் பேசிய விடயத்தை முடிக்கு முன் நாம் இடையே புகுந்து பேசக்கூடாது. தொடர்ச்சியாக நாம் பேசிக் கொண்டிருக்கவும் கூடாது. எம்முடன் பேசுபவரின் கருத்துக்களையும் நாம் நிதானமாகக் கேட்டுப்பின் பேச வேண்டும்.
- இருவர் பேசிக் கொண்டிருக்கையில் மூன்றாம் நபராக நாம் இடையே புகுந்து பேசக் கூடாது. அப்படி அவசரமாகப் பேச வேண்டுமானால் இருவரிடமும் மன்னியுங்கள் என்று கூறி விட்டு அவர்கள் அனுமதித்தால் மட்டும் பேச வேண்டும்.
- எம்மிடம் நெருங்கிப் பழகியவர்களாக இருந்தாலும் பெரியவர்களிடம் பேசும் பொழுது மரியாதைக் குறைவாகப் பேசக் கூடாது. அதிக உரிமை எடுத்துக் கொள்ளாமல் அவர்களை மிகவும் மரியாதையாக நடத்த வேண்டும்.
- ஒருவரது குறைகளைச் சுட்டிக்காட்டி அவர்களுக்குப் பின்னால் புறங்கூறக் கூடாது. பிறரைப் பற்றி இன்னொருவரிடம் குறை கூறுவதோ அல்லது அவரைப் பற்றிய அந்தரங்க விடயங்களையோ தெரிந்து கொள்ள முயற்சிக்கக் கூடாது.
- புகைப்பிடித்தல், மது அருந்துதல் போதைப் பொருள்களை உட்கொள்ளுதல் இவை ஒருவருடைய உடல் உள ஆரோக்கியத்தைக் குலைத்து விடு கின்றன. இவற்றை முற்றிலுமாக தவிர்த்து விட வேண்டும்.
- எண்ணங்களே ஒருவரை உருவாக்குகின்றன. ஆதலால் காலத்தால் போற்றப்படுகின்ற நல்ல பெரிய மனிதர்களின் வாழ்க்கை முறைகளையும், போதனைகளையும், செயல்களையும், உயர்ந்த எண்ணங்களையும் முதலில் தெரிந்து கொள்வது எம்மிடையே நம்பிக்கையும், ஊக்கத்தையும் அவை சிறந்த முறையில் வளர்த்துவிடுகின்றன.



# மூதுரை

ஔவையார் இயற்றிய நீதி நூல்களில் ஒன்று மூதுரையாகும். இதிலே கடவுள் வாழ்த்துத் தவிர்ந்த முப்பத்தொரு பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்கள் வெண்பாக்களால் ஆனவை. நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல ஒழுக்க நெறிகள் பல இந்த நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஔவையார் தான் கூற வந்த அறநெறிக் கருத்துக்களை படிப்போர் மனதில் இலகுவாக பதியும் வண்ணம் இலகுவான உவமையணிகளைக் கையாண்டு கூறியுள்ளார். கடவுள் வாழ்த்துப் பாடல் "வாக்குண்டாம் என்று ஆரம்பிப்பதால் மூதுரையை வாக்குண்டாம் என்றும் பெயர் கூறுவது வழக்கம்.

1. *நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி*
*என்று தருங்கொல் என வேண்டா - நின்று*
*தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்*

பொருள் : நாம் தென்னைக்கு நீர் ஊற்றி வளர்க்கிறோம். அது வளர்ந்த பின் நாம் அடியில் ஊற்றிய நீரை நன்றியாக அதன் தலைப் பகுதியால் இளநீராகத் தருகின்றது. அது போலவே நாம் மற்றவர்களிடத்தில் இருந்து பெற்ற உதவியை தக்க தருணத்தில் திருப்பி அவர்களுக்கு செய்து விட வேண்டும்.


2. *நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்*
*கல்மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்*
*நீர் மேல் எழுத்துக்கு நேர்*

பொருள் : கல் மேல் பொறிக்கப்பட்ட எழுத்து அழியாமலிருக்கும். அதைப்போல நல்லவர்களுக்குச் செய்த உதவியும் மறக்கப் படாமல் நிலைத்து நிற்கும். நீர் மேல் எழுதும் எழுத்து உடனே அழிந்து விடும் அது போல இரக்க மனமற்றவர்களுக்குச் செய்த உதவியும் உடனே மறக்கப்பட்டு அழிந்து விடும்.

(தொடரும்)

# வர்ணம் தீட்டுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறனறிவு

## உணர்வுகளோடு தனித்துவம் பேணும் பாகம்

'உணர் திறனறிவு' என்பது நாம் எவ்வாறு எங்களுடைய உணர்வுகளையும், ஏனைய வர்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு இறுதிவரை அவர்களுடனான உறவுகளைப் பேணுவது என்பதனை குறிக்கிறது. 'டானியல் கோல்மேன்' என்ற அமெரிக்க உளவியல் நிபுணர் இதனை 5 கூறுகளாகப் பிரித்துள்ளார். அவற்றை பின்வருமாறு சொல்லிவிட முடியும்

1. தன்னையறிதல்
2. சுயகட்டுப்பாடு
3. ஊக்கமுடமை
4. சமூக அறிவு
5. பச்சாதாபம்.

**தன்னையறிதல்**

தன்னையறிதல் என்பது ஓர் சிறந்த கலை. பிறரை அறிந்தவன் புத்திசாலி, தன்னை அறிந்தவன் ஞானி என்பது சீனத்து ஞானி ஒருவரின் வாக்காக சொல்லப்படுகிறது. நான் என்னை அறிந்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அதனைக் கூறியபடியே புத்தரைப் போல போதிமரத்தடியை தேடிச் செல்ல வேண்டியதில்லை.

தன்னையறிதல் என்பது நாம் எங்களுடைய உணர்வுகள், விருப்பங்கள், வெறுப்புகள், வாழ்வியல் முறைமை, ஆளுமைத் திறன், பலம், பலவீனம் போன்றவற்றை தெரிந்து கொண்டும், புரிந்து கொண்டும் வைத்திருப்பதே. சில வழிமுறைகள் மூலமாக இதனை புரிந்து கொள்ளலாம் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

1. நாம் எம்மிடமும், பிறரிடமும் நேர்மையாக இருக்க வேண்டும். நேர்மையாக இருத்தல் என்பது தன்னை அறிந்து கொள்ள நாம் எடுக்கும் முதல் செயல்.
2. பிறர்எம்மைப்பற்றிஏன்இப்படிநினைக்கிறார்கள்என்பதை அவர்கள் இடத்தில் இருந்து கொண்டு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ஒருவேளை அவர்கள் சொல்வது சரியென்றால் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும், தவறு என்றால் புரிய வைக்க வேண்டும்.
3. கடந்தகாலநிகழ்வுகளின்மூலம்நாம்செய்ததவறுகளை அறிந்து கொண்டும். புரிந்து கொண்டும் வருங்காலத்தில் அதே தவறை செய்யாமல் தடுக்க வேண்டும்.
4. எந்த நிகழ்வில் எப்படி நடந்து கொண்டோம், ஏன் அது போல நடந்தது என்பன தொடர்பில் குறிப்பு எடுத்துக் கொள்வதன் மூலம், எம்மைப் பற்றி தெரிந்து கொள்ளாலாம்.

**சுயகட்டுப்பாடு**

சுயகட்டுப்பாடு என்பது நாம் எவ்வாறு எம்மிடத்தான உணர்வுகளை சரியான முறையில் வழிநடத்துதல் என்பதிலும், அவை தாண்டி சரியான மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையில் வெளிப்படுத்துவதும் ஆகும். உதாரணமாக எங்களுள் ஒருவர் மேலாளராக அல்லது தலைமை அதிகாரியாக இருக்கும் வங்கியில் மிகவும் திறைமையான ஊழியர் ஒருவர் நெடுநாள்களாக வேலை செய்கிறார். ஒரு நாள் கலந்துரையாடல் இடம்பெறுகிறது. அவர் தெரியாமல் செய்த சிறு பிழைக்காக பொது இடம் என்ற உணர்வின்றி திட்டி விடுகிறோம். இதை மிகப்பெரிய அவமானமாக கருதிய அந்த நபர் வேலையை விட்டு செல்கின்றார். உண்மையிலே அவரைப்போலவே இன்னொருவர் கிடைக்க பல வருடங்கள் தேவைப்படலாம். ஆக, இந்தச் செயல்நிலைகள் உங்களுக்கும் இழப்பு அவருக்கும் இழப்பாக அமைந்துவிடுகிறது. இதனையே நாம் அவரை தனிமையில் அழைத்து தவறு களைச் சுட்டிக்காட்டி இருந்தால் அவரும் வேலையில் நீடித்திருப்பார். எங்களுக்கும் இழப்பு ஏற்பட்டிருக்காது. எனவே உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்துவது மிகவும் அவசியம். உணர்வுகளை கட்டுப்படுத்தி, அதனை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டும். சுயக்கட்டுப்பாட்டுதொடர்பிலான வழிமுறைகள்சிலவற்றைநாம்பின்பற்றலாம்.

•அறியாமையோடு வேண்டுமென்றே சிலவற்றைச் செய்தல். குறிப்பாக மருத்துவர் தினமும் நடக்கச் சொல்லியிருக்கிறார். சோம்பேறிதனத்தின் காரணமாக நடக்க விருப்பமே இல்லை. ஆனாலும் நடந்தே ஆக வேண்டும். இப்படிப்பட்ட நிலையிலே கடைக்குச் செல்லும் போது வேண்டும் என்றே வண்டிச்சாவியை வீட்டிலேயே வைத்துவிட்டு வரவேண்டும். இவ்வாறு திட்டமிட்டுச் செய்வதன் மூலம் எங்களைக் கட்டுப்படுத்தலாம்.

•நீங்கள் எந்த நேரங்களில் அல்லது இடங்களில் உங்களையே அறியாமல் நடந்து கொள்கிறீர்கள்என்பதைத்தெரிந்து கொண்டுஅதனைத் தவிர்த்தல்.

•எப்போதெல்லம் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல் போகிறது என்பதை குறிப்பெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். மறுமுறை அதே போலவே நடந்தால் முன்பு செய்த தவறை எப்படி திருத்திக் கொள்வது என்பதை திட்டமிடுதல்.

•எம்மைக் கட்டுப்படுத்த முடியாத நேரங்களில், ஆழ்மூச்சுப் பயிற்ச்சி, பத்திலிருந்து கீழாக எண்ணுதல், தியானம், ஓர் நிமிட மௌனம், பிடித்தமானபாடலைஅசைபோடுதல் போன்றவற்றைச் செய்வதன் ஊடே எம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

**ஊக்கம்**

'ஊக்கமிருந்தால்ஊக்குவிற்பவன்கூடதேக்குவிற்பான்' என்பது எம்மிடயே பேசப்பட்டு வருகின்ற பழமொழி. அடுத்தவர்கள் எம்மை ஊக்குவிக்காவிட்டாலும் எம்மை நாமே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் எம்மிடம் எதிர்மறையான எண்ணங்கள் வலுப்பெற்றுவிடும். தூக்கமின்மை, உடல் மற்றும் மனச்சோர்வு, உணவை அறவே வெறுத்தல், மன அழுத்தம், மன உளைச்சல், சிந்தனைக் குறைபாடு என்பன எதிர்மறை எண்ணங்களால் தோற்றம் பெறுகின்ற விளைவுகள். இந்தத் திறனை வளர்த்துக் கொள்ள பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம்.

•இயல்பு நிலையை விட்டு விலகி நாம் வெளியே வரவேண்டும். புதியனவற்றை செய்யவேண்டும். விளைவுகளைப்பற்றி கவலைகொள்ளாமல் இருக்க வேண்டும்.

•தவறு செய்யாமல் எவராலும் இருக்க முடியாது. அதே போன்று செய்த தவறை நினைத்து மனம் ஒடிந்து போய்விடக்கூடாது. மாறாக அந்தத் தவறு எதனால் நடந்தது, அதை எவ்வாறு சரி செய்வது, வருங்காலத்தில் எவ்வாறு தவிர்ப்பது என்பது குறித்து திட்டமிடுதல்.

•பிரச்சினைகள் இல்லதா மனிதர்களே இல்லை எனலாம். அந்தவகையிலே மனம் கலங்காமல், துவண்டு போகாமல் எதையும் எதிர்கொள்ளும் மன உறுதியையும், நேர்மறை என்ணங்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

• தொடங்கிய செயலை முடிக்க வேண்டும், எந்தச் சூழலிலும் அதனை இடைநடுவே நிறுத்திவிடக் கூடாது.

• எங்களுடைய அறிவையும், திறன்களையும் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

• எங்களுடைய குறிக்கோள்களை சித்திரங்களாகவும், படமாகவும், வரைந்தும், எழுதியும் வைத்துக் கொள்ளுதல் சிந்தனையைத் தூண்டும். எங்களுடைய அறையின் சுவற்றில் வைத்திருப்பது என்பது குறிக்கோளை நோக்கியதாக சிந்தனைவெளிகளை உந்தித் தள்ளும்.

• தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுதல்.

**சமூக அறிவு**

மனிதன் என்பவன் ஓர் சமூக விலங்கு. அவனால் தனியாக எதுவும் செய்துவிட முடியாது. எப்போதும் அவன் சமூகத்தைச்சார்ந்துதான் இருந்தாக வேண்டும். ஆகவே, எமக்கான சமூக அறிவு என்பது மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுகிறது. உண்மையிலேயே சமூக அறிவு என்பது நாம் எவ்வாறு பிறரின் உணர்வுகளை நிர்வாகம்செய்கிறோம்என்பதாகும். சமூக அறிவை வளர்த்துக்கொள்ள சில வழிமுறைகளை நாம் பின்பற்றிக் கொள்ளலாம்.

- பிறர் சொல்வதைக் கவனத்துடன் கேட்டல். கேட்பதைப் போல நடித்தலன்றி உண்மையான விருப்பத்துடன் கேட்டல்.
- நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என எண்ணுகிறீர்களோ அதுபோல பிறரையும் நடத்துங்கள். நடத்தப் பழகிக் கொள்ளுங்கள்.
- எந்தச் சூழலிலும் நேர்மறையான எண்ணங்களோடு இருத்தல்.
- நகைச்சுவைஉணர்வைவளர்த்துக்கொள்ளுதல்.
- புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுதல்.

**பச்சாதாபம்**

பச்சாதாபம் என்பது நாம் எவ்வாறு மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்வதும், எம்முடைய செயல்கள் எவ்வாறு ஏனையவர்களை பாதிக்கும் என்பதை அறிந்து கொள்வதுமாகும். இரண்டு பேர் [illegible] உங்கள் தோழியின் கணவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்படுகி அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். அவரால் இரண்டு நாள்களுக்கு வரமுடியாது. ஆனால் ஒருநாள் அவகாசத்தினுள் திட்டத்தை முடிக்க வேண்டும். ஏனைய ஊழியர்களும் அவர்களுக்குரித்தான வேலையில் இருக்கிறார்கள். உங்களுக்கு உதவுதல் என்பது முடியாத காரியம். இப்போது தோழியின் வேலையையும் சேர்த்துச்செய்து, கொடுக்கப்பட்ட காலவரையறைகளுக்குள் திட்டத்தைசரியானமுறையிலேசெய்துமுடித்துவிடுகிறீர்கள். இதுவே பச்சாதாபம் (empathy) என்று சொல்லப்படுகிறது.

•பிறருடன் மனம் விட்டு பேசுதல். அவர்கள் சொல்வதை முழுமையாகவும், முழு விருப்பத்துடனும் கேட்டல்.

•ஒருவர் பேசுவதற்கு முன்பாக குறுக்கே பேசக்கூடாது. ஏதேனும் கேள்விகள் இருப்பின், அவர் பேசியபின் கேட்கலாம்.

•எங்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளுதல்.

•பிறரின் நிலையையும் அவர்கள் இடத்திலிருந்தே புரிந்து கொள்ளுதல்.

•வாசிப்புப் பழக்கத்தினை வளர்த்துக் கொள்ளுதல்.

•கேட்டால்மட்டுமேஅறிவுரைவழங்குதல்.

ஆக, இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் இடையே அலுவலகத்தையும், இல்லத்தையும், நண்பர்களையும் நிர்வகிக்க 'உணர் திறனறிவு' மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுகிறது. சித்திரமும் கைபழக்கம் என்பது போல நிறைவான பயிற்சியின் ஊடே இதனை வளர்த்துக் கொள்ளலாம். திட்டமிட்ட இலக்குகளை வெற்றி கொள்ளலாம். நாமும் பயணிப்போம். வாருங்கள்.

## மரண அறிவித்தல்



### திருமதி மங்களம் பழனிதாஸ்

பலாலி மத்தி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களம் பழனிதாஸ் நேற்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் செல்வப் புதல்வியும் பழனிதாஸின் மனைவியும் சபாபதி - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும் சாரதாம்பாள், ராஜேஸ்வரி, சரோஜாதேவி, திலகவதி, லிங்கேஸ்வரன், புனிதவதி, காலஞ்சென்ற கெங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பழனிதாஸ் (கணவர்)**

**076 668 8303, 077 625 0020**

**உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உரும்பிராய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மங்குஸ்தான்



"பழங்களின் ராணி" என அழைக்கப்படும் மங்குஸ்தான் பழம், மருத்துவ குணம் வாய்ந்தது. தென்னிந்திய மலைப் பகுதியில், தோட்டப் பயிராக வளர்க்கப்படுகிறது. இது மலேசியா, மியான்மர், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் அதிகம் விளைகிறது. தென்னமெரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் கிடைக்கிறது.

இதை தென்கிழக்கு ஆசிய நாடுகளில், தோல் நோய்களுக்கு, பற்களின் ஈறு நோய்களுக்கும், தொற்று நோய் கிருமிகளையும், காளான்களையும் அழிக்கவும் பயன்படுத்தினர். கணினிகளில் வேலை செய்பவர்களுக்கு, கண்கள் வறட்சி அடைந்து எரிச்சலை உண்டாக்கும். இதனால் சிலர் தலைவலி, கழுத்து வலி என அவதிக்குள்ளாவார்கள். இவர்கள் மங்குஸ்தான் பழம் சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் நீங்கி, கண் நரம்புகள் புத்துணர்வு பெறும்.

மங்குஸ்தான் பழத்தில், எலும்புப்புகளைப் பலப்படுத்தக்கூடிய நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் மருத்துவ குணங்கள் உள்ளன. இந்தப் பழம், குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கக் கூடியதாக விளங்குகிறது. எலும்புகள் பலவீனம், எலும்புகள் பலம் குன்றி காணப்படுவது, எலும்பு தேய்மானம் போன்றவற்றிற்கு இது சிறந்த மருந்தாக விளங்குகிறது.

வயதானவர்களுக்கு முழங்காலுக்கு கீழே ஏற்படும் பலவீனத்தை, பலப்படுத்துவதற்கு மங்குஸ்தான் உதவி செய்கிறது. கால்களில் உணர்வற்று இருப்பவர்களுக்கும், இது சிறந்த தீர்வாக இருக்கும். நாட்பட்ட புண்கள், காயங்கள், காய்ச்சல், குருதி கலந்த வயிற்று ப்போக்கு, உடல் மற்றும் மனச்சோர்வு, மன அழுத்தம், கவலை போன்றவற்றை குணமாக்க மங்குஸ்தான் பழம் உதவுகிறது.

வீக்கம் குறைக்கவும், புற்று நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கவும், தோல் சுருக்கத்தை குறைக்கவும், பாக்ரீயா மற்றும் வைரசுக்கு எதிர்ப்பாகவும் பயன்படுகிறது. உடல் சூட்டைத் தணித்து, தேகத்தை சமநிலையில் வைத்திருக்கவும் உதவுகிறது. வயிற்றுவலியைக் குணப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு. சீதபேதி, குருதிக் கழிச்சல் உள்ளவர்கள், மங்குஸ்தான் பழத்தின் மேல் தோலை சுட்டு அல்லது பச்சையாக அரைத்து, அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டால் உடனே குணமாகும். மங்குஸ்தான் பழத்தை சுவைத்து சாப்பிட்டு அல்லது அதன் தோலை காயவைத்து பொடி செய்துதேன்கலந்து, சாப்பிட்டு வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும். வயிற்றுப் புண், வாய்ப்புண் குணமடையும். கிருமிகளைக் கொல்லும். சிறுநீர் நன்கு வெளியேற மங்குஸ்தான் பழம் சிறந்த மருந்தாகும். அதுமட்டுமல்லாமல் இருமலைத் தடுக்கும், சூதகவலியைக் குணமாக்கும், தலைவலியை போக்கும், நாவறட்சியை தணிக்கும். மாதவிலக்கு காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் அதிக குருதிப்போக்கை குறைக்க உதவுகிறது. மங்குஸ்தான் பழத்தை சாப்பிட்டு வந்தால் மூலநோயால் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும். சீசன் காலங்களில் மங்குஸ்தான் பழத்தை வாங்கிச் சாப்பிடுவது நல்லது.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.07.2017
திங்கட்கிழமை இறைவனடி
சேர்ந்த எமது
குடும்பத்தலைவி
அமரர்
**இரத்தினபூபதி (கிளி)**
**சற்குணநாதன்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 08.08.2017 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 09.08.2017 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மீசாலை மேற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.
077 666 0199

## 12 ஆவது ஆண்டு நினைவலைகளில்....



தோற்றம்
10.08.1928
மறைவு
21.07.2005

**முருகேசு**
**மீனாட்சி**
**(சரஸ்)**

கனத்த இதயத்துடிப்புடன்
கலங்கிய விழிநீர் உவர்ப்புடன்
காலங்கள் தான் உருண்டன பன்னிரெண்டு
களைத்தும் போவதில்லை உனக்கான தேடலில் விழிரெண்டும்...
ஆயிரம் உறவுகள் துணையானாலும்
அன்னை உன் இழப்பிற்கு ஈடாகுமா ?
ஆண்டவன் அடியினில் சரணானாலும்
அம்மா உன் மடியின் சுகம் ஆகுமா ? அம்மா
உன்குரல் கேட்க ஏங்கித் தவிக்கின்றேன்
உன் விழி பார்க்க விழித்துக் கொள்கின்றேன்
உன் அணைப்பிற்காய் அலை மோதுகின்றேன்
உயிர் தந்த உன்னை கானல் நீராய் மாற்றி ஏங்கி நிற்கின்றேன்.
மதி அறிந்த உண்மைகளை
மனம் கேட்க மறுக்கின்றதே அம்மா – உன்
மடி மீது தலை வைத்து ஒரு கணம் உறங்கிட
மறுபிறவி தான் கிடைக்குமோ அம்மா ?
ஓம் சாந்தி!

மகள் - அம்பிகாவதி பற்குணராஜா
குடும்பத்தினர்.

குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

**வீட்டு திறப்புக்கோர்வை, உடுப்பு அடங்கிய மஞ்சள் நிற பை யாழ். நகரில் நேற்று தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் அறியத்தரவும்.**
**தொடர்பு - 071 867 1192**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 05.08.2017 இல் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டில்
**"உலகத்தமிழ் மாமணி"**
எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற எங்கள் அதிபர்
**திரு.தி.வரதன்**
அவர்களின் பணி மேலும் ஓங்கிவளர வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

Galaxy Star
வெற்றி வாரம் 183 | திகதி 2017.08.06
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 06 08 17 27
10 33 49 52
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,782,864/-
2017.08.09 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.08.2017 | வெற்றி வாரம் 2168 | வர்ணம் ஊதா
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 27 40 44 57
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,881,788/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 20 28 38 48
08.08.2017 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்

**வேலாயுதம் இரத்தினசிங்கம்**



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் இரத்தினசிங்கம் நேற்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - பொன்னி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (07.08.2017) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

உதயன் அதனை வெளியிட்டிருந்தது.

அதேபோன்று புதிய அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், பங்காளிக் கட்சித் தலைவர்கள் இடையேயான சந்திப்பில் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட முடிவுகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அதிருப்தி அடைந்திருந்தது.

இதையடுத்து அந்தக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில், மார்ட்டீன் வீதியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று மாலை 5 மணிக்கு ஒன்றுகூடினர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மாவை.சோ.சேனாதிராசா உரையாற்றினார். முதலமைச்சருடனான சந்திப்பில் என்ன நடந்தது? என்பது தொடர்பில் தெரிவித்தார்.

"முதலமைச்சருடனான சந்திப்புத் திருப்தியாக அமையவில்லை. வடக்கு மாகாண அமைச்சரவையை மாற்றியமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடாப்பிடியாக நிற்கின்றார். கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு மேலாகவே, கூட்டத்தில் முதலமைச்சரின் செயற்பாடு அமைந்திருந்தது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஓரங்கட்டுவது போலவே அவரது பேச்சுக்கள் இருந்தன. அமைச்சரவை மாற்றத்தின் போது தமிழ் அரசுக் கட்சியை முற்றாக ஓரம் கட்டுவதை எதிர்வுகூறுவதைப் போன்றே முதலமைச்சர் கதைத்தார்.

அமைச்சரவையை மாற்றியமைக்க முதலமைச்சருக்கு இருக்கும் உரித்துக்களை தமிழ் அரசுக் கட்சி மதிக்கின்றது. கூட்டமைப்பு என்ற அடிப்படையில் அமைச்சரவை நியமனத்தின் போது பங்காளிக் கட்சிகளின் யோசனைகளைக் கேட்க வேண்டும். முதலமைச்சர் இப்போது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளினதும் யோசனைகளை ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யோசனையை மாத்திரம் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இதை அவரது பேச்சில் நேரடியாக அறிய முடிந்தது.

ஏனைய மூன்று பங்காளிக் கட்சிகளும், தமது கட்சிக்கான அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் முதலமைச்சருடன் சேர்ந்து அவருக்கு ஆதரவு கொடுத்துள்ளன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அவ்வாறான தேவை இல்லை. பதவிகளை குறிவைத்து நிலைப்பாடுகளை எடுப்பவர்கள் அல்ல நாங்கள். அமைச்சர் பதவி விடயத்தை சர்சைக்குரியதாக நாங்கள் மாற்ற விரும்பவில்லை.

அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை அந்தப் பலம் மிக முக்கியம். அற்ப சொற்ப பதவிக்காக அதனைத் தவற விடமுடியாது. அமைச்சுப் பதவி தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் பொருட்டே இல்லை.

வடக்கு மாகாண அமைச்சரவை மீள மாற்றியமைக்கப்படும் சந்தர்ப்பத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் எவரும் அமைச்சுப் பதவியை ஏற்பதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சரின் குதர்க்கமான செயற்பாட்டினால், அமைச்சரவை விடயத்தை சர்ச்சைக்குள்ளாக்கி தீர்வு விடயத்தை தவற விட விரும்பாமையினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்று கூட்டத்தில் கலந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (உ,5,101)

## முதல்வர்...

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டிலிருந்து கிடைக்கின்ற பண உதவிகளால் இன்றைய இளைய தலைமுறையினரின் போக்கு மனவருத்தத்திற்கு உரியதாகியுள்ளது. வெளிநாட்டில் வருந்தி உழைத்ததை இங்கு வலி தெரியாமல் செலவு செய்கின்றனர்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களைத் துன்புறுத்துவதோ அல்லது உயிர்பிரியச்செய்வதோ பாவச் செயல் என அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன. இன்று மனிதர்கள் மந்தைகளுக்கு ஒப்பாக வெட்டிச் சாய்க்கப்படுகின்றார்கள். வன்மமும், வன்முறையும் சிலரிடம் தலைக்கேறிவிட்டது. போதைப்பொருள்கள் அதற்குப் புத்துயிர் அளிக்கின்றன.

ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் குற்றம் இழைப்பது சம்பந்தமாக அண்மையில் நான் பேசப்போய் எமது விடுதலை வீரர்களை நான் குறைகூறிவிட்டேன் என்று மூத்த அரசியல்வாதிகள்கூட தமது கருத்துக்களைப் பிழையாக வெளியிட்டமை கவலைக்குரியது.

நான் புலிகள் இயக்கப் போராளிகள் பற்றிக் குறிப்பிடவில்லை. விடுதலைப் புலிகள் என்ற சொல்லே என்னால் பாவிக்கப்படவில்லை. போர்ப் பயிற்சி பெற்று அரச படைகளுடன் சேர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபட்டோரே என் கண்டனத்துக்கு ஆளாக்கப்பட்டவர்கள். காரணமில்லாமல் முன்னைய போராளிகளைப் பொலிஸார் கைது செய்வதையும் நாம் கண்டிக்கின்றோம். பயிற்சிகள் பெற்று விட்டுப் பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் நாம் கண்டிக்கின்றோம்.

வன்முறைகளால் அப்பாவி வயோதிபர்களும் குடும்பங்களும் உடல் உளவியல் ரீதியாக பாதிப்படைந்து நடைப்பிணங்களாக மாறியிருப்பதை எத்தனை இளைஞர்கள் உணர்ந்திருக்கின்றார்கள்? அவர்களின் சிந்தனைகளில் மாற்றம் வரவேண்டும். இன்றைய குற்றச் செயல்களுக்குப் பல பெற்றோர்களும் காரணமாகி விடுகின்றார்கள். தமது பிள்ளைகள் எங்கு செல்கிறார்கள், எவருடன் பழகுகிறார்கள் என்பதை அவர்கள் கண்டறிவதில்லை. நடுச்சாமத்தில், விடியற்காலையில் தமதுபிள்ளைகள் கொண்டுவருகின்ற பணம், நகைநட்டு ஆகியவற்றை எங்கிருந்து எடுத்து வந்தார்கள் என்பதை அறியமுற்படுவதில்லை. இந்தத் தேட்டங்கள் முறையாக தேடப்பட்டனவா அல்லது முறைதவறிய தேட்டமா? இவ்வாறான கேள்விகள் எத்தனை பெற்றோர்களின் மனதில் உதித்திருக்கின்றன?

இவற்றுக்கெல்லாம் விடைகாணப்பட வேண்டுமாயின் சமுதாயம் விழிப்புணர்வு பெற வேண்டும். சமூக ஒற்றுமை மேலோங்க வேண்டும். எம்மைப்போல் பிறரையும் நேசிக்கும் தன்மை வளரவேண்டும். போதுமென்ற மனத்துடன் வருவாய்க்கேற்ப வாழப் பழகிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் வன்முறைகளுக்கும் முறையற்றபொருள் தேடல்களுக்கும் முடிவுகாலம் வரும் என்றார். இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், படைவிட்டோடிகள் தெற்கில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைப் போன்று, போர்ப் பயிற்சி பெற்றோர் வடக்கிலும் குற்றம் இழைக்கின்றனர் என்று சாரப்பட்ட கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துக்கு அரசியல் தரப்பினர், முன்னாள் போராளிகள் உள்ளிட்ட பல தரப்பினரிடமிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இவ்வாறான நிலையிலேயே அவர் மேற்படி விளக்கத்தை நேற்றுக் கொடுத்துள்ளார். அதில் புலிகளைத்தான் குறிப்பிடவில்லை என்றும் கூறியிருக்கிறார். (உ,5,26)

## முட்டிக் கொண்ட...

னங்களை முன்வைத்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, "நானும் கதைக்க வெளிக்கிட்டால் உதைவிடக் கூடக் கதைப்பேன். அதற்கான இடமும் இதில்லை. நீங்கள் (சுரேஸ்) வருவீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் இந்தக் கூட்டத்துக்கு வந்திருக்கமாட்டேன்" என்று காட்டமாகத் தெரிவித்தார். (வ-5)

## இங்கு...

வர்கள் குடியேற்றப்படுவதையும் நிச்சயம் எதிர்க்கின்றோம்.

இவ்வாறு நேற்றுப் பொரிந்து தள்ளினர் வடக்கில் பணியாற்றும் அரச அதிகாரிகள். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து நல்லிணக்கம் குறித்துப் பேசிய போதே அவர்கள் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அரச அதிகாரிகளிடமிருந்து இவ்வாறான கருத்துக்களை சற்றும் எதிர்பார்த்திராத பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திகைத்துப்போய் அமர்ந்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், அரச அதிகாரிகள் மனம் திறந்து பல விடயங்களைப் பேசினர் என்று உதயன் அறிந்தது.

அரச அதிகாரிகள் ஆட்சியின் பங்காளர்கள் என்ற வகையில் பொதுவாக கொழும்புக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பதில்லை. எதையாவது சொல்லப்போய் வீண் பிரச்சினைகளில் மாட்டிக்கொள்வான் ஏன் என்று ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

அப்படிப்பட்டவர்கள் நேற்று மாறி மாறி அரசியல் உண்மைகளை அள்ளிக் கொட்டியதைப் பார்த்துப் பலரும் வாயடைத்து அமர்ந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்தவற்றின் சாராம்சம் வருமாறு:

போரின் இறுதியில் அரசிடம் சரணடைந்தவர்கள் தொடர்பில் அரசுதான் பதில் கூறவேண்டும். இது தொடர்பில் இதுவரை மக்களுக்குப் பொறுப்பானபதில் கூறப்படவில்லை. ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் அதனால் எந்தநன்மையோ, தீர்வோ கிடைக்கவில்லை. அவர்கள் இறப்புச் சான்றிதழ் கொடுத்து விடயத்தை முடிவுறுத்தவே எண்ணுகின்றனர். நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தயாரில்லை.

1996ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு சுற்றிவளைப்புக்களின் போது கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டவர்களில் பலர் காணாமற்போயுள்ளனர். செம்மணி புதைகுழி வழக்குத் தொடர்பான கால கட்டத்தில் இங்கு 650 பேர் வரையில் காணாமல் ஆக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அவர்களது உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் வருவர் வருவர் என்று இன்னும் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் தங்களது உரிமைகளைக் கேட்டால் அதனைப் பயங்கரவாதம் என்ற சொல்லி அடக்க முற்படுகின்றார்கள். இப்போதும் இதுதான் இங்கு நடந்து கொண்டிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீள் எழுச்சி பெறுகின்றார்கள் என்று சொல்லி அடக்குமுறையைக் கட்டவிழ்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சிங்கள மக்கள் வாழாத இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் இங்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு என்ற எமது தமிழ் கிராமத்தை இன்று வெலிஓயா என்ற சிங்களக் கிராமமாக மாற்றிவிட்டார்கள். வடக்கில் தமிழ் மக்களைச் சிறுபான்மையினராக்கும் நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. சிங்கள மக்களையோ, பௌத்த மதத்தையோ நாங்கள் எதிர்க்கவில்லை. மாறாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்தக் குடியேற்றங்களைத்தான் எதிர்க்கின்றோம் என்று கூறியுள்ளனர். (உ,5)

## கலிகையில்...

மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணிக்கு கலிகைப் பகுதியை, சிறப்பு அதிரடிப் படையினர், பொலிஸார், பீல்ட் பைக் குறூப் இணைந்து சுற்றி வளைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். வீடு வீடாகச் சோதனை நடத்தினர்.

முறையான அனுமதியின்றி மாட்டை இறைச்சிக்காக வெட்டிக் கொண்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் மீது கடந்த மாதம் தாக்குதல் நடத்திய வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 8 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் இளைஞன் ஒருவன் மீது கடந்த மாதம் 9ஆம் திகதி நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர், அந்தப் பகுதி மக்கள் கொதிப்படைந்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். பொலிஸ் வாகனங்கள், காவலரண்கள் சேதமடைந்தன. இந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸாரால் 40 பேர் வரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சரணடையவில்லை என்பதால் 40 பேரும் கைது செய்யப்படும் வரையில் தேடுதல் நடவடிக்கைகள் தொடரும் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ,5,26)

## பதவி...

இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், வடக்கு மாகாண முதலமைச்சரால் மாற்றியமைக்கப்படும் அமைச்சரவையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவு கட்சியின் மையச் செயற்குழுவுக்கும் உடனடியாகவே அனுப்பி வைக்கப்பட்டது. கட்சியின் மையச் செயற்குழு, அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை அங்கீகரித்து உறுப்பினர்களுக்கு அறிவித்ததும், அமைச்சர் ப.சத்தியலிங்கம் தனது பதவியிலிருந்து விலகுவார்.

இதேவேளை, வடக்கு மாகாண அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற கட்சியின் தீர்மானத்தையும் மீறி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் யாராவது அமைச்சரவையில் பங்கேற்றால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (வ-5)

## உடனடிப்...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். வட அயர்லாந்து விவகாரத்தில் நல்லிணக்கம் தொடர்பான தமது அனுபவங்களைப் பகிர்வதும், இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதுமே அவர்களது பயணத்தின் நோக்கம்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கொழும்பு அரசின் வடமாகாண அதிகாரிகள் மற்றும் மாகாண சபை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். ஒன்றரை மணிநேரம் சந்திப்பு நடைபெற்றது. வட அயர்லாந்து விவகாரத்தில் இருந்த பிரச்சினைகள் மற்றும் அவை களையப்பட்ட விதம் என்பன குறித்து விளக்கினர். இலங்கையில் நல்லிணக்கத்தின் நிலை குறித்தும் கேட்டறிந்தனர். இந்தச் சந்திப்பில் பேசிய யாழ். மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணாமல் நல்லிணக்கம் ஏற்படாது. காணாமற்போனோர் விவகாரம், நில விடுவிப்பு, கைதிகள் விடுதலை என்பன நடக்காது நல்லிணக்கத்துக்கான கதவு திறவாது என்று எமது மக்கள் திடமாக நம்புகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடி கண்ணீர் விடும் தாய்மாரிடத்தில் நல்லிணக்கத்தைப் பற்றி எப்படிப் பேசுவது ? மக்களின் வாழ்விடங்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மக்கள் வசதிகளின்றி நாலாபுறத்திலும் சிதறி வாழ்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு கிடைக்கப் பெறுவதுடன், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை தீர்க்கப்படும்போதே நல்லிணக்கம் உருவாகும் - என்றார்.

அரச அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர் அரசியல் தலைவர்களையும் பிரிட்டன் குழுவினர் சந்தித்தனர். வடக்கு மாகாண சபையினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சந்திப்புத் தொடர்பில் அதில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்ததாவது:

போரின் பின்னர் தமது நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்கம் போன்று எமது நாட்டிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கே அவர்கள் வந்திருந்தார்கள். போர் நடைபெற்ற நாடுகளில் போரின் பின்னர் தீர்வு எட்டப்பட்டது. நீதியும் கிடைக்கப் பெற்றது. அங்கு நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதில் சவால்கள் இருந்திருக்கவில்லை. ஆனால் எமது நாட்டில் நிலமை அப்படியல்ல. நல்லிணக்கம் பேச்சளவில் மாத்திரமே இருக்கின்றது.

தமிழர்களுக்கு என்று தனி இராச்சியம் இருந்ததையும், அதை பிரிட்டிஷாரே ஆக்கிரமித்து இல்லாதொழித்தனர் என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம் -என்றார். (உ,5,101)

## இயக்கச்சியில்...

இயக்கச்சியைச் சேர்ந்த ஒருவருமே வெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர்.

பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களான மிகுந்தன் (வயது - 35), தவராசா (வயது - 33), தனுஸ்ரன் (வயது- 19) மற்றும் இயக்கச்சியைச் சேர்ந்த பற்குரு (வயது - 55) ஆகியோரே வெட்டுக் காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் மிகுந்தனே அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நோய் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய ஒருவரை நலம் விசாரிக்கவே பருத்தித்துறையைச் சேர்ந்த மூவரும் இயக்கச்சிக்குச் சென்றதாக ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டுள்ளது. எனினும் இருதரப்பினருக்கு இடையேயான தகராறே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு கூறப்படும் காரணம் எவ்வளவுக்குப் பொருத்தமானது, வேறு நோக்கத்துக்காக அவர்கள் பருத்தித்துறையில் இருந்து சென்றிருந்தனரா? என்பது தொடர்பில் விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். வாள்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் மீண்டும் பரவலாக அதிகரித்துள்ளன. அதனால் யாழ். குடாநாட்டில் பரவலாக பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் சுற்றுக்காவல் மற்றும் தேடுதல், விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(வ-46-35-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென். ஹென்றிஸ் தேசியச் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 7

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பிரிவில் கிண்ணம் வென்றது இளவாலை சென். ஹென்றிஸ்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி அணி மோதியது.

கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் எந்த அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் எந்த அணியும் கோலைதையும் பெற்றிருக்கவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். ஹென்றிஸ் கல்லூரி அணி.

தேசிய மட்ட கால்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை வடக்கு மாகாண அணிகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. கடந்த வருடம் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கால்பந்தாட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் முறையே யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ், இளவாலைசென். ஹென்றிஸ், மன்னார் சென். சேவியர் ஆகிய அணிகள் தமதாக்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

# நசரேத் வி.கழக கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 7

புங்குடுதீவுநசரேத் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை ஞானஒளி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஊர்காவற்றுறை ஞான ஒளி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 5:0 என்ற கோல் கணக்கில வெற்றிபெற்றது.



மற்றொரு ஆட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில வெற்றிபெற்றது.

(ம-23)

# இன்றைய மோதல்கள்

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில், அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும், தொடர்ந்து இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# பல்கலை. சம்பியன்



யாழ்ப்பாணம், ஓக. 7

இலங்கை கிரிக்கெட் சபை நடத்திய யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது சென்றலைட்ஸ் அணி. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 46.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. வினோத் குமார் 49 ஓட்டங்களையும், டார்வின் 28 ஓட்டங்களையும், செல்ரன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜனாந்தன் 3 இலக்குகளையும், குருகுலசூரிய, லோகதீஸ்வர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

159 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி 34.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. துவாரகசீலன் ஆட்டம் இழக்காமல் 64 ஓட்டங்களைப் பெற்றார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், ஆட்டநாயகனாகவும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியின் துவாரகசீலன், சிறந்த களத்தடுப்பாளர் விருதை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியின் ஜனாந்தன், சிறந்த பந்துவீச்சாளர் விருதை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியின் மயூரன் ஆகியோர் பெற்றனர். (ம-23)

# கிண்ணம் வென்றது கலைமதி



யாழ்ப்பாணம், ஓக. 7

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில், கிண்ணம் வென்றது புத்தூர் கலைமதி அணி.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.

5 செற்களைக் கொண்டதாக இறுதி அமைந்தது. முதல் செற்றை 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி அணி. அந்த அணி அடுத்த இரு செற்களையும் முறையே 25:14, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது.

ஆட்டநாயகனாக கலைமதி அணியின் வாகிசன் தெரிவானார். மூன்றாம் இடத்தை வளர்மதி விளையாட்டுக் கழகம் பெற்றது.

(ம-108)

# தெல்லிப்பழை மகாஜனா மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஓக. 7

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு மூன்றாம் இடம் கிடைத்தது.

திருகோணமலை கிண்ணியாவில் நேற்று பிற்பகல் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு விதான மகாதேவி வித்தியாலய அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வீராங்கனை திலக்சனா 5ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவு செய்ய 1:0 என்ற கோல் கணக்கில் அந்த அணி முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 12ஆவது நிமிடத்தில் சர்மிகா ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

(ம-422)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைநகரில் இலங்கை தர்மசங்கடத் தோல்வி



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது இந்தியா. கொழும்பில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 9 இலக்குகளை இழந்து 622 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக புஜாரா 133 ஓட்டங்களையும், ரகானே 132 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேரத் 4 இலக்குகளையும், புஸ்பகுமார 2 இலக்குகளையும், கருணாரட்ன, பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை 183 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக டிக்வெல்ல 51 ஓட்டங்களையும், மத்தியூஸ் 26 ஓட்டங்களையும், கருணாரட்ன 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஸ்வின் 5 இலக்குகளையும், ஜடேயா, சமி இருவரும் தலா 2 இலக்குகளையும், உமேஸ் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் 439 ஓட்டங்கள் முன்னிலை பெற்றதால், இன்னிங்ஸ் வெற்றியைப் பெறும் நோக்கில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலங்கையைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணித்தது இந்தியா. 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து மீண்டும் தடுமாற்றம் காட்டினார் தரங்க. நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் இலங்கை 2 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கருணாரட்ன 92 ஓட்டங்களுடனும், புஸ்பகுமார 2 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

சதம் கடந்தார் கருணாரட்ன. 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் புஸ்பகுமார. 2 ஓட்டங்களுடன் ஜடேயாவின் சுழலில் சிக்கினார் சந்திமல். 141 ஓட்டங்களுடன் கருணாரட்ன ஆட்டமிழந்தார். மத்தியூஸ், டிக்வெல்ல இருவரும் முறையே 36, 31 ஓட்டங்களைச் சேர்த்தனர். 386 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து இன்னிங்ஸாலும் 53 ஓட்டங்களாலும் தோல்வியடைந்தது இலங்கை.

பந்துவீச்சில் ஜடேயா 5 இலக்குகளையும், பாண்டியா, அஸ்வின் இரு வரும் தலா 2 இலக்குகளையும், யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)



## மாற்று வீரராக இறங்குபவர் துடுப்பெடுத்தாட அனுமதி அவசியம்

### சந்திமல் வலியுறுத்தல்

'டெஸ்ட் ஆட்டங்களில், காயம்காரணமாக ஓர் வீரர் விலகினால் மாற்று வீரராகக் களமிறங்குபவர் துடுப்பெடுத்தாட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று தெரிவித்தார் இலங்கை அணியின் தலைவர் சந்திமல்.

[illegible]திய அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்தத் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை வீரர்களான அசல குணரட்ன, கேரத் ஆகியோர் காயமடைந்து விலகினர். இதனால் அந்த டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் 8 இலக்குகளை இழந்தபோதே இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்தது என்று கருதப்பட்டது. இந்த நிலையில் இவ்வாறு வலியுறுத்தினார் சந்திமல்.

மாற்று வீரர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கும்படியாக விதிகள் திருத்தப்பட்டால் தங்களது அணி மட்டும் பயனடையும் என்பதற்காக இல்லை என்றும் எதிர்காலத்தில் மற்ற அணி[illegible]ம் இந்த விதியால் பயன்பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

## ரவீந்திர ஜடேயா உலக சாதனை




டெஸ்ட் ஆட்டங்களில் அதிவேகமாக 150 இலக்குகளை வீழத்திய இடதுகை பந்து வீச்சாளர் என்ற சாதனையை நிலைநாட்டினார் இந்திய அணியின் ஜடேயா.

இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கொழும்பில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸிற்காக இலங்கை அணி 183 ஓட்டங்களில் சுருண்டது. ஜடேயா 2 இலக்குகளைக் கைப்பற்றினார். இந்த இரண்டு இலக்குகளின் உதவியுடனேயே அவர் இந்த அடைவை நிலைநாட்டினார். 32 ஆட்டங்களில் ஜடேயா இந்த அடைவை எட்டியுள்ளார். ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் 34 ஆட்டங்களில் இந்த அடைவை எட்டியிருந்தார். இவரது சாதனையையே ஜடேயா தற்போது முறியடித்தார். (ம)



## செரபோவா மீண்டும் விலகல்

ரென்னிஸ் உலகின் முக்கியமான வீராங்கனைகளில் ஒருவராகக் கருதப்படும் மரிய செரபோவா, காயம் காரணமாக அடுத்த சில நாள்களுக்கு ஓய்வில் இருக்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் செரபோவா காயம் காரணமாக இடைவிலகும் மூன்றாவது சந்தர்ப்பமாக இது அமைந்தது.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் போது செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரியைச் சோதித்துப் பார்த்ததில் மெல்டோனியம் என்ற தடைசெய்யப்பட்ட மருந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவருக்கு சுமார் இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. தடை முடிவடைந்து கடந்த ஏப்ரலில் மீண்டும் களம் திரும்பினார் செரபோவா. பின்னர் இரு தடவைகள் காயம் காரணமாக விலகியிருந்தார். இதனால் பகிரங்கத் தொடர்களான பிரான்ஸ் தொடர், விம்பிள்டன் தொடர் ஆகியவற்றில் அவர் களமிறங்கவில்லை. இன்னும் சில நாள்களில் அமெரிக்கத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் செரபோவா தான் பங்கேற்பதை உறுதி செய்திருந்தார். எனினும் காயமேற்பட்டுள்ளதால் தற்போது மீண்டும் விலகியுள்ளார். (ம)

# தோல்வியுடன் விடைபெற்றார் போல்ட் பெரும் அதிர்ச்சியில் தடகள உலகம்



குறுந்தூர ஓட்டப் பந்தயத்தில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து வந்த உசைன் போல்ட், தனது கடைசித் தொடரான லண்டன் தடகளத் தொடரில் நீண்டநாள் போட்டியாளரான ஜஸ்ரின் கேத்லினிடம் தங்கப் பதக்கத்தைப் பறிகொடுத்து, தோல்வியுடன் விடைபெற்றார்.

லண்டன் தகளத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. 205 நாடுகள் இதில் பங்குகொண்டுள்ளன. 24 வகையான போட்டிகள் இடம்பெறுகின்றன. இந்தத் தொடருடன் பன்னாட்டுத் தடகளத்தில் இருந்து விடைபெறும் முடிவை போல்ட் ஏற்கனவே அறி வித்திருந்தார். இதனால் இந்தத் தொடர் மீது மிகப்பெரும் எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கத்தைத் தவறவிட்டு வெண்கலப் பதக்கத்தை மாத்திரமே போல்ட் கைப்பற்றியிருந்தார். அமெரிக்க வீரரான ஜஸ்ரின் கேத்லின் 9.92 செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அவரது சக வீரரான கிறிஸ்ரியன் கோல்மன் 9.94 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், போல்ட் 9.95 செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.

**சொன்னது என்னாச்சு**

இந்தத் தொடருக்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில், "குறுந்தூர ஓட்டப் பந்தயத்தின் ஜாம்பவான் நானே. எவராலும் தோற்கடிக்கப்பட முடியாத வீரராகவே நான் விடைபெறுவேன். எனது குழந்தைகளுக்கு 20 வயது ஆகின்ற போதும் நான்தான் மிகச் சிறந்த குறுந்தூர ஓட்டப்பந்தய வீரனாக இருப்பேன். எனது சாதனைகள் நீடித்து நிலைக்கும்" என்று தெரிவித்திருந்தார். அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்து வெறும் 24 மணிநேரத்துக்குள் போல்ட்டை வீழ்த்தினார் ஜஸ்ரின்.

**ஜஸ்ரின் கேத்லின் கொடுத்த அதி உச்சக்கட்ட மரியாதை**

உசைன் போல்டை வீழ்த்தியமை என்பது மிகவும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்றே. அதற்கேற்ப ஜஸ்ரின் கேத்லின் சில செய்கைகளை காட்டினாலும், அவர் அளவுக்கு அதிகமாக தனது வெற்றியைக் கொண்டாடவில்லை. போல்ட் நடந்துவரும் போது 'நான் உனக்குத் தலை வணங்குகிறேன்' என்றவாறாக அவருக்கு முன்னால் மண்டியிட்டார். இது காண்போரை நெகிழவைக்கும் சம்பவமாகப் பதிவானது.

**அரங்கம் அதிர்ந்தது**

போல்ட் விடைபெறுவதற்காக ரசிகர்களை சுற்றி வந்தார். ரசிகர்களின் ஆரவாரத்தில் அவர் சிறிது உணர்ச்சிவசப்பட்டார். சில ரசிகர்கள் அழவும் செய்தனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
A/L 2019, 2018 கணித, உயிரியல் புதிய பிரிவுகள்
PHYSICS
கருணாநிதி, கஜன், ராகுலன்
CHEMISTRY | COM.MATHS | BIOLOGY
சுபீசன், லக்ஷன் | ஐங்கரன், மயூரன் | சுதாகரன்
நேர அட்டவணை அலுவலகத்தில்

# பல்லேகல டெஸ்ட்டில் ஜடேயாவுக்குத் தடை

## அஸ்வின் மீது கூடுதல் பொறுப்பு



மைதானத்தில் எதிரணி வீரருடன் நாகரீகமற்ற விதத்தில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயாவுக்கு, இலங்கைக்கு எதிரான அடுத்த டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றத் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது ஆட்டம் கொழும்பில் நேற்று நிறைவடைந்தது. சகலதுறைகளிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த ஆட்ட நாயகனானார் ஜடேயா. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடியபோது, அந்த அணியின் ஆரம்ப வீரர் கருணாரட்ன சிறந்த ஆட்டத்தை வழங்கினார். அவரும், குசல் மென்டிஸூம் நீண்டநேரமாக நிலைத்து நின்றனர். இலக்குச் சரிவு ஏற்படாத விரக்தியில், தான் பிடித்த பந்தை கருணாரட்னவை நோக்கி எறிந்தார் ஜடேயா.

இந்த விவகாரம் மைதான நடுவர்களால் பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறையிடப்பட்டது. காணொலியை ஆராய்ந்து பார்த்த பன்னாட்டு கிரிக்கெட் சபை ஓர் ஆட்டத்தில் விளையாட ஜடேயாவுக்குத் தடை விதித்தது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பல்லேகலவில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் ஜடேயா பங்கேற்காத நிலை உருவாகியுள்ளது. (ம)

ARUL STUDY CIRCLE
111, Bonjean Road, Kotahena, Colombo - 13
T.P.: 011 233 1495, 011 247 0148

2017 - G.C.E. O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கொழும்பு
அருள் கல்வி வட்டத்தினால் நடத்தப்படும்
இலவசக் கல்விக் கருத்தரங்கு

இலவசக் கல்விக் கருத்தரங்கு

குறிப்பு - இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள்
1. சகலபாடங்களும் அடங்கிய கையேடு
2. 2016 ஆம் ஆண்டு கடந்தகால வினாவிடை
3. 2016 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வித்திட்டத்திற்கு அமைய விஞ்ஞான வினா விடைக்கொத்து (30 வருடம்)
4. கணிதபாடம் 5 மாதிரி வினாத்தாள்கள் பகுதி IA, பகுதி - IB

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 10.08.2017 (வியாழக்கிழமை) | வேலணை பிரதேச செயலகம் வேலணை (இருபாலாரும்) | காலை : 08.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை |
| 11.08.2017 (வெள்ளிக்கிழமை) | தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 12.08.2017 (சனிக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (பெண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 13.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (ஆண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 14.08.2017 (திங்கட்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 15.08.2017 (செவ்வாய்க்கிழமை) | உருத்திரபுரம் [illegible] வித்தியாலயம் கிளிநொச்சி (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 16.08.2017 (புதன்கிழமை) | கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கற்சிலைமடு (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 17.08.2017 (வியாழக்கிழமை) | மன்னார் நகரசபை மண்டபம் மன்னார் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 18.08.2017 (வெள்ளிக்கிழமை) | வவுனியா நகரசபை மண்டபம் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |

| பாடங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | திரு. V.தேவசேனாதிபதி - திரு. K.வசந்தன் - திரு. S.மணிமாறன் - திரு. M.[illegible] |
| விஞ்ஞானம் | திரு. V.சுந்தரேஸ்வரன் - திரு. V.பிரேம்குமார் - திரு. மகேந்திரன் - திரு. [illegible] |
| தமிழ் | திரு. S.நடராஜா - திரு. K.திவாகர் |
| வரலாறு | திரு. S.நடராஜா - திரு. S.ஐங்கரன் |

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர் :
சட்டத்தரணி திரு. V. தேவசேனாதிபதி LLB
T.P. 077 113 3400 / 011 232 7524

தொடர்புகளுக்கு :
திரு. P.இளமுருகன் - 077 907 3593 - திரு. சக்திதரன் AD - 077 842 9649
திரு. சுந்தரேஸ்வரன் - 077 385 0841 - திரு. A. முருகானந்தன் - 071 856 1252
திரு. ஐங்கரன் - 077 715 7779

ஊடக அனுசரணையாளர்: உதயன்
அனைவரும் பாடசாலை சீருடையில் கலந்துகொண்டு பயன் அடையுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

# நெய்மரின் ஜெர்சி படைத்த சாதனை

பிரேசில் கால்பந்து வீரரான நெய்மரை ஒப்பந்தம் செய்த முதல் நாளிலேயே, நெய்மரின் பெயரும் இலக்கமும் பொறிக்கப்பட்ட 10 ஆயிரம் ஜெர்சிகளை விற்பனை செய்துள்ளது பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி.




பார்சிலோனா அணிக்காக கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து விளையாடி வந்த நெய்மரை, இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரம் கோடி கொடுத்து ஒப்பந்தம் செய்தது பாரிஸ் செயின்ட் ஜேர்மன். ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தின் விதியின்படி, ஒரு வீரர் இடம் பெற்றிருக்கும் அணியே அந்த வீரரின் பெயரில் ஜெர்சியைத் தயாரித்து வெளியிட முடியும். இதன்படி நெய்மரின் பெயர் பொறித்து தயாரிக்கப்பட்ட 10 ஆயிரம் ஜெர்சிகள், நெய்மர் பரிஸ் செயின்ட் ஜேர்மன் இடையிலான ஒப்பந்தம் நடைபெற்ற அன்றே விற்றுத் தீர்ந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.